# ஜெர்மனியில் திருவள்ளுவர் விழா

மற்றும்

# ஐரோப்பிய தமிழர்கள் நாள்

ஐரோப்பிய கூட்டமைப்பில் முதன்முறையாக
ஐம்பொன்னாலான திருவள்ளுவர் சிலைகளை நிறுவும் விழா

# சிறப்பு மலர்

டிசம்பர் 4, 2019



தமிழ் மரபு அறக்கட்டளை

ஜெர்மனி கிளை

# ஜெர்மனியில் திருவள்ளுவர் விழா

**மற்றும்**

## ஐரோப்பிய தமிழர்கள் நாள் தொடக்கம்

**ஐரோப்பிய கூட்டமைப்பில் முதன்முறையாக ஐம்பொன்னாலான திருவள்ளுவர் சிலைகளை நிறுவும் விழா**

## சிறப்பு மலர்

லிண்டன் அருங்காட்சியகம், ஸ்டுட்கார்ட், ஜெர்மனி

**டிசம்பர் 4, 2019**

**தமிழ் மரபு அறக்கட்டளை**

**ஜெர்மனி கிளை**

**ஜெர்மனியில் திருவள்ளுவர் சிலைகள் நிறுவும் பணியில் எங்களுக்குப் பல்வேறு வகையில் உதவியவர்களுக்கும், நன்கொடைகள் வழங்கி பொருளாதார வகையில் உதவிய நல்லுள்ளங்களுக்கும், இந்த நிகழ்ச்சி சிறப்புற நடைபெற வாழ்த்தும் உலகத் தமிழ் அன்பர்களுக்கும் எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றி!!**



*விழா மலர் பொறுப்பாசிரியர்*

**முனைவர்.தேமொழி (கலிஃபோர்னியா)**

*ஆசிரியர் குழு:*

- **முனைவர்.என்.சுபாஷிணி (தமிழகம்)**
- **முனைவர்.க.சுபாஷிணி (ஜெர்மனி)**

# உள்ளே . . .

ஜெர்மனியில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா ____ 1

*முனைவர் க . சுபாஷிணி* ____ **1**

**ஜெர்மனியில் திருவள்ளுவர்: வாழ்த்துரை** ____ 6

*--பேராசிரியர், முனைவர் நா.கண்ணன்* ____ **6**

**1. பொதுமுறை என்பதே பொருத்தம்** ____ 8

**ஆர்.பாலகிருஷ்ணன். இ.ஆ.ப** ____ **8**

**2. நன்னயம்** ____ 17

*எழில்முதல்வன் (முனைவர் மா.ராமலிங்கம்)* ____ **17**

**3. இறையருள்** ____ 23

*முனைவர். கோ. வல்லரசி* ____ 23

**4. வள்ளுவம் ஓர் வாழ்வியல் வழிகாட்டி** ____ 27

*ச. பராக்கிரம பாண்டியன்* ____ **27**

**5. திருக்குறள் காட்டும் இல்லறவியல் அறங்கள்** ____ 30

*தயாளினி* ____ **30**

**6. திருக்குறளில் மனிதநேயம்** ____ 34

*முனைவர் இர. பிரபாகரன்* ____ **34**

**7. பெரியாரைத் துணைகோடல்** ____ 37

*முனைவர் என். சுபாஷிணி* ____ **37**

**8. எப்படிப் பொருள் கொள்ள வேண்டும்?** ____ 40

*முனைவர் ச.கண்மணி கணேசன்* ____ **40**

**9. எப்படி எழுத வேண்டும் ?** ____ 43

*முனைவர் இராம. மலர்விழிமங்கையர்க்கரசி* ____ **43**

**10. திருக்குறளும் சட்டமும்** ____ 48

*கவிஞர்.முனைவர்.ப.பாலமுருகன்* ____ **48**

**11. திருக்குறளில் மேலாண்மை கருத்தமைவுகள்** ____ 51

*முனைவர் ச.குப்பன்* ____ **51**

**வாழ்த்து** 55

**12. திருக்குறள் அமைதி** 56

*முனைவர் செங்கைப் பொதுவன்* **56**

**13. திருக்குறளில் அச்சம்** 58

*முனைவர் ஜ.பிரேமலதா* **58**

**14. திருக்குறளும் "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" பழமொழியும்** 62

*இலக்குவனார் திருவள்ளுவன்* **62**

**15. வள்ளுவர் என்றோர் ஆய்வாளர்** 65

*முனைவர். தேமொழி* **65**

**16. THIRUKKURAL AND MORALITY** 69

*MRS.T.BHAWANY* **69**

**17. வாழச் சொல்வது வள்ளுவம்!** 71

*ஆர்.பாலகிருஷ்ணன் இஆப* **71**

**18. திருவள்ளுவர் உருவ தோற்றம்** 73

*கௌதம சன்னா* **73**

**19.வான்புகழ் வள்ளுவம்** 77

**ஜெர்மனியில் திருவள்ளுவர் சிலைகள் நிறுவும் விழா குழுவினர்** 83

**நன்றி நவில்கிறோம்** 85

**(நிகழ்ச்சி சிறப்பு நடைபெற விளம்பரங்கள் கொடுத்த அனைவருக்கும)** 85

# ஜெர்மனியில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா

*முனைவர் க . சுபாஷிணி*




*ஜெர்மானியர்களுக்கும் தமிழகத்துக்குமான தொடர்பினைப் பற்றிய சில தகவல்கள் German Tamilology (Dr.C.S.Mohanavelu) என்ற நூலை வாசித்தபோது எனக்கு அறிமுகமாகியது. அந்த நூலில் 1706 ஆம் ஆண்டு தமிழகம் வந்த லூத்தரன் பாதிரியார் சீகன்பால்க் மற்றும் அவருக்குப் பின் வந்த ஜெர்மானியப் பாதிரிமார்கள் திருக்குறளை வாசித்து அறிந்த செய்திகளும் திருக்குறளின் கருத்துக்களை வியந்து அவர்கள் குறிப்பிட்டு எழுதிய நாட்குறிப்புகள் பற்றிய செய்திகளும் எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தின. இந்தச் செய்திகள் எனக்கு ஏற்படுத்திய ஆர்வத்தினால் ஐரோப்பாவில் எந்த வகையில் திருக்குறள் அறிமுகமாகியது என்று தேட வேண்டும் என்ற முயற்சி எனக்குள் எழுந்தது.*

*இணையத்தில் கிடைக்கின்ற பல ஐரோப்பிய ஆவணங்களைத் தொடர்ச்சியாக வாசித்தபோது வீரமாமுனிவர் (Constantine Joseph Beschi) 1730 ஆம் ஆண்டு திருக்குறளுக்கான ஒரு மொழிபெயர்ப்பு நூல் ஒன்றினை எழுதினார் என்ற செய்தி கிடைத்தது. அந்த நூலின் ஒரு அசல் படி ஒன்று தற்சமயம் பிரித்தானியாவில் இருக்கின்ற பிரித்தானிய நூலகத்தில் பாதுகாக்கப்படுகின்றது என்ற தகவலும் எனது கூடுதல் தேடுதலில் கிடைத்தது.*

*இந்த நூலைப் பற்றிக் குறிப்பிடும்போது இதனை விளக்கும் ஜெர்மானியப் பாதிரியார் டாக்டர்.கார்ல் க்ரவுல் (Karl Graul) அவர்கள் "இந்த நூல் அறத்துப்பால் பொருட்பால் ஆகிய இரண்டினை மட்டும் முக்கியத்துவம் கொடுத்து லத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு நூல்*

இது" என்று விளக்குகின்றார். ஆக, கத்தோலிக்க கிறிஸ்துவ நம்பிக்கைகளின்படி இது திருக்குறளின் காமத்துப்பால் பகுதி நீக்கப்பட்ட வகையில் உள்ள ஒரு மொழிபெயர்ப்பாகும்.

இன்று நமக்குக் கிடைக்கின்ற தகவல்களின்படி இந்த முதல் லத்தின் மொழிபெயர்ப்பே திருக்குறளுக்கு அமைந்துள்ள முதல் மொழிபெயர்ப்பு நூல் எனக் கூறலாம். அதற்குப் பின்னர் பிரெஞ்சு மொழி, ஆங்கிலம் என திருக்குறளின் சில செய்யுட்கள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு திருக்குறள் ஐரோப்பிய உலகிற்கு அறிமுகமானது. இதில் முக்கியமாக ஜெர்மானியப் பாதிரிமார்களின் தமிழ் இலக்கிய வாசிப்பு மற்றும் அந்த வாசிப்பின் வழியாகத் தமிழ் உலகின் சிந்தனைகளை ஐரோப்பிய உலகிற்கும் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்ற அவர்களது கருத்து லூத்தரன் பாதிரிமார்கள் தமிழகத்தில் சமய மற்றும் சமூக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சமயத்தில் அவர்களுக்கு எழுந்தது. கி.பி.18ம் நூற்றாண்டு மற்றும் 19ம் நூற்றாண்டில் ஜெர்மானியப் லூத்தரன் பாதிரிமார்கள் உருவாக்கிய பல இலக்கண நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் ஆகியவற்றை இதற்குச் சான்றாக நாம் குறிப்பிடலாம். அந்தவகையில் 1803 ஆம் ஆண்டும் அதற்குப் பின்னர் 1856 ஆம் ஆண்டும் சிறப்பான ஜெர்மானியப் மொழி பெயர்ப்பு திருக்குறளுக்கு வெளியிடப்பட்டன. இவற்றை உருவாக்கியவர்கள் ஜெர்மனியில் பிறந்து வளர்ந்து சமயப் பணிக்காகத் தமிழகம் வந்து, அங்குத் தமிழைக் கற்று, தமிழ் இலக்கிய சிந்தனைகளின் பெருமையை உணர்ந்து குறிப்பாகத் திருக்குறளின் பெருமையை அறிந்து உணர்ந்து அதனை ஐரோப்பிய உலகிற்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற முனைப்புடன் செயல்பட்ட லூத்தரன் பாதிரிமார்கள். இவர்களது இலக்கிய நடவடிக்கைகள் அக்காலத்தில் ஜெர்மானியப் பத்திரிக்கைகளில் வெளி வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பின்னணியின் அடிப்படையில் இக்கால சூழலில் திருக்குறளையும் அதனை எழுதிய திருவள்ளுவரையும் பற்றிய அறிமுகத்தையும் இன்றைய ஐரோப்பியச் சூழலில் மீட்டுக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் தமிழ் மரபு அறக்கட்டளைக்கு எழுந்தது. இலங்கையில் நடைபெற்ற இனப்போர் மற்றும் அதன் பாதிப்பினால் ஐரோப்பிய நாடுகளுக்குக் குடிபெயர்ந்த தமிழ்மக்கள் ஏராளமானோர் இங்கே



அகதிகளாக வாழத்தொடங்கி இன்று குடியுரிமை பெற்று வாழத் தொடங்கி விட்டனர். இலங்கைத் தமிழர்கள் மட்டுமின்றி தமிழகத்திலிருந்தும் பாண்டிச்சேரியிலிருந்தும் உயர்கல்விக்காகவும் பின்னர் பல்வேறு துறைகளில் பணி செய்வதற்காகவும் வந்த தமிழ் மக்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலானோரும் ஐரோப்பாவிலேயே தங்கி புலம் பெயர்ந்த தமிழர்களாக வாழத்தொடங்கி விட்டனர்.

ஐரோப்பாவின் ஒவ்வொரு நாடுகளும் இப்படிப் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் குழந்தைகளுக்கான தாய் நாடாக உருவாகியிருக்கும் காலகட்டமிது. இந்தச் சூழலில் இந்த புதிய தலைமுறை தமிழ் குழந்தைகளுக்குத் திருக்குறளையும் திருவள்ளுவரையும் நாம் அறிமுகப்படுத்த

வேண்டியது மிக அவசியம் என்ற எண்ணம் தமிழ் மரபு அறக்கட்டளைக்கு ஆழமாக இருந்தது. அதிலும் குறிப்பாகப் புலம்பெயர்ந்து வாழ்கின்ற நாடுகளில் ஐரோப்பிய நாட்டினரின் பொருளாதார உதவியைச் சார்ந்து தான் தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள் என்ற பொது சிந்தனை இருக்கின்ற இக்காலகட்டத்தில், இச்சிந்தனைக்கு மாற்றாக, ஐரோப்பியர்கள் தமிழ் மொழியையும் தமிழ் மக்களையும் தேடிக் கடந்த சில நூற்றாண்டுகளாகத் தமிழ் நிலத்திற்கு வந்தனர்; அங்கு வாழ்ந்தனர்; தமிழ் மொழியைக் கற்றனர்; தமிழில் நூல்களை ஓலைச்சுவடிகளில் எழுதினர்; தமிழ் மொழியில் எழுதப்பட்ட இலக்கியங்களின் சிந்தனைகளை ஐரோப்பிய நாட்டிற்குக் கொண்டு வந்தனர் என்ற செய்தியை நாம் உரக்கக் கூறவேண்டியது அவசியமாகின்றது.

இந்த நோக்கத்தை மனதில் கொண்டு தமிழ் மரபு அறக்கட்டளை செயல்படத் தொடங்கினோம். ஐரோப்பாவில் இருக்கின்ற முக்கிய அருங்காட்சியகங்களில் ஜெர்மனியின் ஸ்டுட்கார்ட் நகரில் இருக்கின்ற லிண்டன் அருங்காட்சியகம் தனிச்சிறப்புப்பெறுவது. ஏனெனில் இங்கு உள்ள ஆசியத் தொல்பொருட்கள் மற்றும் அரும் பொருட்கள் கண்காட்சிக் கூடத்தில் மிக அதிக எண்ணிக்கையிலான இந்திய அரும்பொருள்கள் பாதுகாக்கப்படுகின்றன; அவற்றின் பெருமைகள் அடிக்கடி பேசப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய இரண்டு லட்சம் வருகையாளர்கள் வந்து செல்கின்ற ஒரு அருங்காட்சியகமாக இது திகழ்கின்றது.

இந்த அருங்காட்சியகத்தில் திருவள்ளுவரைச் சிறப்பிக்கும் வகையில், ஐரோப்பாவில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கான அடையாளமாகத் தமிழ் மக்களின் இலக்கிய வாழ்வியல் சிந்தனைகளின் பிரதிபலிப்பாகத் திருக்குறளும் திருவள்ளுவரும் அமைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இந்த அருங்காட்சியகத்தில் திருவள்ளுவரின் சிலைகளை வைத்து திருவள்ளுவர் மற்றும் திருக்குறள் பற்றிய தகவல்களை உலக மக்களுக்கு வழங்க வேண்டும் என்று திட்டமிட்டோம்.

இந்தக் கருத்தை அருங்காட்சியக பொறுப்பாளர்களிடம் பேசியபோது அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் இந்த முயற்சிக்கு வரவேற்பளித்தனர். திருவள்ளுவருக்காக ஒரு தனிப் பகுதியை ஒதுக்கி அப்பகுதி முழுமைக்கும் திருவள்ளுவர் மற்றும் திருக்குறள் பற்றிய செய்திகளை விளக்கம் வகையில் தாங்கள் அமைத்துக் கொடுப்பதாகக்கூறி இம்முயற்சியில் எங்களுடன் அவர்கள் இணைந்து செயல்பட ஆரம்பித்தார்கள்.

இந்த முயற்சியைத் தொடங்கியபோது முதலில் ஒரு திருவள்ளுவர் சிலையை வைக்கலாம் என்ற எண்ணம் தமிழ் மரபு அறக்கட்டளையின் ஜெர்மனி செயற்குழுவினருக்கு இருந்தது. கருங்கல்லால் அமைக்கும் சிலையை விட வெண்கலத்தால் இச்சிலைகள் அமைந்தால் சிறப்பாக இருக்கும் என்று அருங்காட்சியகத்தில் கருத்து எழவே, திருவள்ளுவரின் ஒரு சிலையை வெண்கலத்தில் அமைக்கலாம் என்று முதலில் முடிவானது. எந்த உருவ அமைப்பில் இந்தச் சிலையை அமைக்கலாம் என்று பல்வேறு கலந்துரையாடல்கள் நிகழ்த்திய பின்னர் ஒரு சிலைக்குப் பதிலாக இரண்டு சிலைகளை உருவாக்கலாம் என்று தமிழ் மரபு அறக்கட்டளையின் ஜெர்மனி குழுவினர் முடிவெடுத்தோம்.

அந்தவகையில் இரண்டு சிலைகள் இந்த அருங்காட்சியகத்தின் நிரந்தர காட்சியகத்தில் வைக்கப்படும் வகையில் உருவாக்கம் பெற்றன.

நின்ற வடிவிலான ஒரு சிலை - இச்சிலை வழக்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட திருவள்ளுவர் சிலையின் தோற்றத்தோடு தமிழர் சிற்பக்கலையில் பண்டைய மரபு நுட்பங்களையும் வடிவ தோற்றத்தினையும் பின்பற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இச்சிலையில் இடையில் வேட்டியோடும் தோளில் துண்டோடும் திருவள்ளுவர் காட்சி தருகிறார்.

அமர்ந்த நிலை சிலை - இச்சிலை 1810ல் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியில் சென்னை மாகாணத்தில் புனித ஜார்ஜ் கோட்டையில் மெட்ராஸ் கல்விக் கழகத்தினை உருவாக்கிய எல்லீஸிடம் கந்தப்பனார்

என்பவர் கொடுத்த திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் ஓலைச் சுவடிதான் திருக்குறள் பதிப்பிற்கு முதல் காரணம். திருக்குறளையும் திருவள்ளுவரையும் போற்றும் பொருட்டு திருவள்ளுவர் வடிவம் பொறித்த நான்கு தங்க நாணயங்களை எல்லீஸ் வெளியிட்டார். அதுதான் திருவள்ளுவரின் முதல் உருவம். அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க முதல் சிறு உருவம் இங்கே ஒன்றே முக்கால் அடி உயரத்தில் ஐம்பொன் சிலையாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிலைகள் உருவாக்கத்திற்குத் தேவையான முன்னேற்பாடுகள் தொடங்கின. தமிழ் மரபு அறக்கட்டளையின் ஜெர்மானியப் கிளை குழுவினருடன் தமிழகத்தின் திரு. கௌதம சன்னா, திரு காந்தி பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் கலந்தாலோசனை செய்த பின்னர் இச்சிலைகளைத் தமிழகத்தின் மிக முக்கியமான சிற்பி வடிவமைப்பதே சிறப்பாக இருக்கும் என்று முடிவானது. இந்த முயற்சியில் திரு. கௌதம சன்னா அவர்களது முயற்சி மிகுந்த பாராட்டுதலுக்குரியது. தமிழகத்தின் கவின் கலைக் கல்லூரியின் முன்னாள் முதல்வரும், சிற்பி, ஓவியர் எனப் புகழ் பெற்றவருமான ஓவியர் சந்துரு அவர்கள் செயலாக்கத்தில் இந்த சிலைகள் இரண்டும் வடிவமைக்கப்பட வேண்டும் எனக் கூறி, அதற்கான அனைத்து தொடர்பு முயற்சிகளையும் ஆரம்பம் முதல் அச்சிலைகள் ஜெர்மனி வந்து சேரும் வரை ஏற்படுத்திக் கொடுத்து உதவினார்.

இந்த இரண்டு சிலைகளும் தமிழ் சிற்பக்கலை மரபைச் சார்ந்து இருக்க வேண்டும் என்று உறுதியுடன் செயல்பட்டவர் திரு.காந்தி பாலசுப்பிரமணியம். சிலைகள் உருவாக்கத்தின் போது இடையிடையே அவற்றின் தயாரிப்புகளைப் பார்த்து தேவையான ஆலோசனைகளையும் இவர் அவ்வப்போது வழங்கி வந்தார். சிலைகள் வடிவமைப்பு திட்டங்கள் உருவான பின்னர் இவற்றின் தயாரிப்புக்கானச் செலவுத் தொகைகள் பற்றிய கவலையும் எங்களுக்கு உருவானது. அந்த வேளையில் இரண்டு சிலைகளையும் இரண்டு நபர்கள் நன்கொடை வழங்கி பெறுவதன் மூலம் இந்தச் சிலைகளைத் தயாரித்து விடலாம் என்று முடிவெடுத்தோம். அமர்ந்த நிலையில் ஒன்றே முக்கால் அடி உயரத்தில் அமைந்த எல்லீஸ் அவர்கள் வெளியிட்ட தங்க நாணயத்தில் உள்ள வடிவத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட ஒன்றே முக்கால் அடி உயர ஐம்பொன் சிலைக்கான உருவாக்கச் செலவுத் தொகையை திரு.பாலச்சந்திரன் இஆப (ஓய்வு) அவர்கள் வழங்கியுள்ளார். இரண்டாவது சிலை நின்ற வடிவத்தில் 3 அடி உயரத்தில் உள்ள திருவள்ளுவர் சிலை ஆகும். இச்சிலைக்கான உருவாக்கச் செலவுத் தொகையை திரு.கௌதம சன்னா அவர்களும் டாக்டர்.க.சுபாஷிணி அவர்களும் இணைந்து வழங்கியுள்ளனர்.

சிலைகள் இரண்டும் தயாரான பின்னர் சிலைகளை வழியனுப்பி வைக்கும் விழாவினைப் பற்றி தமிழ் மரபு அறக்கட்டளையின் தமிழக குழுவினர் முயற்சிகள் மேற்கொண்டனர். தமிழக அரசின் தொல்லியல் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மாண்புமிகு மாஃபா பாண்டியராஜன் அவர்களது அலுவலகத்தில் இச்சிலைகள் வைக்கப்பட்டு, அங்கு இச்சிலைகளின் வழியனுப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. அந்த விழாவினைச் சிறப்பாக நடத்திக் கொடுத்த அமைச்சர் அவர்களுக்கும், தமிழக



அரசுக்கும் தமிழ் மரபு அறக்கட்டளையின் நன்றி என்றும் உரித்தாகுக.

இந்த இரண்டு ஐம்பொன் சிலைகள் வழியனுப்பு விழா நிகழ்வுக்காக முழுமையாகத் தமிழ் மரபு அறக்கட்டளையின் தமிழக செயற்குழுவினர் திரு.கதிரவன், திரு.செழியன், திருமிகு.புஷ்பா கால்டுவெல், திருமிகு.அகிலா, திரு.சிவக.மணிவண்ணன், திரு கிரிஷ், திரு.குமரகுருபரன், திரு.சௌந்தரராஜன் ஆகியோர் பணியாற்றினர். தமிழ் மரபு அறக்கட்டளையின் இந்தியக் கிளை உறுப்பினர்கள் அனைவரது வாழ்த்துக்களுடன் திருவள்ளுவரின் இந்த ஐம்பொன் சிலைகளும் பாதுகாப்பாகத் தமிழகத்திலிருந்து ஜெர்மனிக்கு வழி அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த இரண்டு சிலைகளையும் பாதுகாப்பாக அனுப்பி வைக்கும் பணியை முன்னின்று செயல்படுத்தியவர்கள் தமிழக நண்பர்கள் திரு.கௌதம சன்னா மற்றும் திரு.கதிரவன் ஆகிய இருவருமாகும். ஆரம்பம் முதல் இறுதி வரை இவர்கள் இருவரும் ஆற்றிய பணி இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு அடித்தளம் அமைத்தது. ஜெர்மனிக்கு அனுப்பப்பட்ட சிலைகள் சரியான பாதுகாப்புடன் வந்தவுடன் அவற்றைச் சுங்கத் துறையில் கட்டணம் கட்டி அதனை வாகனத்தில் ஏற்றி அருங்காட்சியகம் கொண்டு வந்து சேர்த்தனர் திரு.ஸ்ரீகந்தா மற்றும் அவரது துணைவியார் திருமதி.சீலி, மகன் முரளி மகள் கார்த்திகா ஆகியோர்.

திருவள்ளுவர் சிலைகளோடு கண்காட்சியில் வைப்பதற்காக பத்து தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்குறள் செய்யுட்களைப் புதிதாக ஓலையில் லேசர் கருவி கொண்டு எழுதவைத்துத் தயாரித்துக் கொடுத்தார் திரு.சிவக. மணிவண்ணன்(வேதாரண்யம்). அந்தப் புதிதாகத் தயாரிக்கப்பட்ட பத்து குறள்கள் கொண்ட ஓலைச்சுவடிகளைப் பலமுறை சரிபார்த்து அதைத் தக்க சமயத்தில் ஜெர்மனிக்கு வந்து சேரும் வகையில் முழுமையாகப் பொறுப்பெடுத்துக் கொண்டவர் இவர்.

திருக்குறளின் ஜெர்மானிய மொழிபெயர்ப்பான *1802* ஆம் ஆண்டு மற்றும் *1856* ஆம் ஆண்டு வெளியான மொழிபெயர்ப்பு நூல்களை மறுபதிப்பு செய்யும் முயற்சியைத் தமிழ் மரபு அறக்கட்டளை மேற்கொண்டோம். இந்தப் பணியில் அந்த நூல்கள் இரண்டும் மறுபதிப்பு தயாரிப்புக்காக உருவாக்கித் தந்தவர் திரு.கௌதம சன்னா. என்னுடன் அவருக்கு உதவியாக இப்பணியில் செயல்பட்டவர் தமிழ் மரபு அறக்கட்டளையின் செயலாளர் டாக்டர். தேமொழி அவர்கள்.

ஐரோப்பாவில் திருவள்ளுவருக்கு ஐம்பொன் சிலைகள் நிறுவவிருப்பதை முன்னிட்டு அதே நாளில் ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கத்தையும் ஜெர்மனி ஸ்டுட்டுகர்ட் லிண்டன் அருங்காட்சியகக் கருத்தரங்க வளாகத்தில் ஏற்பாடு செய்தோம். இந்தக் கருத்தரங்கத்தில் வாசிக்கப்பட உள்ள கட்டுரைகளும் அவற்றோடு உலகளாவிய தமிழ் அறிஞர்களின் கட்டுரைகளும் இணைந்த வகையில் விழா மலர் ஒன்று தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. இந்த எண்ணத்தைச் செயல்படுத்தி அதன் முழு உருவாக்கப் பணியையும் ஏற்றுக்கொண்டவர் டாக்டர். தேமொழி. அவரது தலைமையில் இந்த விழா மலர் ஐரோப்பிய ஒன்றியத்தில் வைக்கப்படுகின்ற முதல் ஐம்பொன் திருவள்ளுவர் சிலைகள், மற்றும் தமிழ் சிற்பக் கலை மரபில் உருவாக்கப்பட்ட சிலைகள் என்ற பெருமையை நிலைநாட்டும் இந்த நிகழ்ச்சிக்கு முற்றும் முழுவதுமாய் பல்வேறு பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் மரபு அறக்கட்டளையின் ஜெர்மனி செயலவைக் குழுவினர் ஒவ்வொருவரது பணியும் பாராட்டுதலுக்குரியது. இந்த நிகழ்ச்சியை நடத்தி முடிக்க ஏற்பட்ட பொருளாதார சிக்கலைச் சரிக்கட்ட எங்களுக்கு நன்கொடைகள் வழங்கி உதவிய நல்ல உள்ளங்களுக்கும் ஏற்பாட்டுக் குழுவினரின் சார்பில் எங்கள் நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

ஐரோப்பா வாழ் தமிழ் மக்களுக்கான ஒற்றை அடையாளம் திருக்குறள்தான். சமயம் கடந்து, இனம் கடந்து, நாடு கடந்து எல்லா மக்களுக்கும் பொருந்தும் வகையில் 'வாழ்வியல் பொதுமுறையை' வழங்கியிருக்கும் திருக்குறளை உலக மக்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியை முன்னெடுத்திருக்கின்றோம். இந்தச் சீரிய பணியில் எங்களோடு இணைந்து கரம் கோர்த்துச் செயல்பட உலக மக்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

அன்புடன்

**முனைவர்.க.சுபாஷிணி**

தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை - பன்னாட்டு அமைப்பு

*4.12.2019*

# ஜெர்மனியில் திருவள்ளுவர் : வாழ்த்துரை

**--பேராசிரியர், முனைவர் நா.கண்ணன்**
தமிழ் மரபு அறக்கட்டளை, மலேசியா

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

எனும் பாரதி வாக்கு மேலும், மேலும் பலித்து வருகிறது. எந்நூலுக்கும் இல்லாத அளவிற்கு திருக்குறள் உலகின் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு தமிழ் மண்ணின் மாண்புகள் உலகெலாம் அறியப்படுகிறது. இத்தனை மாண்புகள் பேசும் வள்ளுவன் எவ்வாறு இருந்தான் என்பதை ஒருவரும் அறிந்திலர். வள்ளுவன் தன்னை மறைத்தான், தான் கொண்ட சமயத்தை மறைத்தான். அவனது உண்மையான பெயர் கூட நாமறியோம். அவனுக்கு நாம் சூட்டுவதெல்லாம் அடைமொழிகளே. அப்படிப்பட்ட வள்ளுவனுக்கு எவ்வடிவில் சிலை எடுப்பது? வள்ளுவனுக்கு தாடி உண்டா? இல்லை வள்ளுவன் துறவிகள் போல் மொட்டை அடித்திருந்தானா? தெரியாது. வள்ளுவனே இதைக் கிண்டலாக,

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்துவிடின்

என்று சொல்லுவான். அதாவது உலகத்தோடு ஒட்ட ஒழுக வேண்டும் என்பது அவன் கருத்து. எனவே தமிழகத்தில் அறிவுடையோர் எவ்வாறு உடை உடுத்தி, சிகை வைத்திருந்திருப்பர் என்பதைக் கற்பனை செய்தல் கடினம். முடி மழித்த வள்ளுவனாக எல்லிஸ் போன்ற ஆங்கில நிர்வாக அதிகாரிகள் கருதினர். தாடியோடு இருந்ததாக பலர் நம்புகின்றனர். காரணம் உலகில் சிந்திக்கும் மனிதனுக்கு மயிர் மழிக்கக்கூட நேரம் இருக்காது என்பதோர் நம்பிக்கை.

ஜெர்மனிக்குப் போகும் வள்ளுவர் தாடி வைத்திருக்கிறார். கையில் கூர் வாள் போல் எழுத்தாணி வைத்திருக்கவில்லை. அது முக்கியம், ஏனெனில் வெளிநாட்டில் வாழும் குழந்தைகள் எழுத்தாணி எனும் கருவியைக் கண்டிருக்க மாட்டார்கள். அது ஏதோ கொலைக்கருவி எனக்கருத வாய்ப்புண்டு. தமிழகக் குழந்தைகளுக்கும் எழுத்தாணி தெரியாது. எனவேதான் ஜெர்மனியில் இருக்கும் வள்ளுவர் ஓலைச் சுவடியை கையில் வைத்திருக்கிறார். ஓலையில் எழுதி வைக்கும் வழக்கம் உள்ளது என்பதை சமகால மாணவர்களும் பிறரும் அறிய வாய்ப்பில்லை. ஆனால், சுவடி என்பது நூல் என்று சொல்லிக் கொடுக்கலாம்.

வள்ளுவர் நாம் போடும் எத்தக்கோட்டுக்குள்ளும் அடங்குவார் அல்லர். வள்ளுவர் சான்றோர் போற்றும் அதிசயம். கவிஞர்கள் போற்றும் கவிஞன். அவனொரு ஆசான், வைத்தியன், அறவாழி அந்தணன், விவசாயி, சாணக்கியன், நல்ல காதலன், தந்தை. எப்படி ஒருவரால் நோய் பற்றிப் பேசமுடிகிறது? மண் பற்றிப் பேச முடிகிறது? பொருளாதாரப் பாடமெடுக்க முடிகிறது? சமூக உளவியல் பேச முடிகிறது? சமயம் பற்றி போதிக்க முடிகிறது? காதல் நுணுக்களை விளக்க முடிகிறது? அவன் வாழ்ந்த காலத்தில் கல்வி என்பது பன்முகத்தோடு இருந்திருக்கிறது. பொதுவாக அவன் தமிழ் மண்ணின் பண்புகளை, மாண்புகளை உள்ளது உள்ளவாறு வடித்தெடுத்துவிடுகிறான். எனவே வள்ளுவம் என்பதும் தமிழகம் என்பதுமொன்று. தமிழகத்தின் அத்தனை அறிவும் வள்ளுவத்துள் வந்துவிடுகிறது. திருக்குறளுக்கு இணையான நூல் வேறு எங்கும் காண்பதரிது.

இத்துணை சிறப்புடைய இக்குறளமுதம் ஓர் சிலை வடிவில் குறியீடாக ஸ்டுட்கார்டு அருங்காட்சியகத்தில் அமையப் போகிறது. இது தமிழ் மரபு அறக்கட்டளைக்கோர் மகுடம். தமிழ் மரபின் விழுமியச் செல்வம் திருக்குறள். தமிழ் மரபின் அடையாளம் வள்ளுவன். இச்சிலையைக் காணும் ஒவ்வொருவருவரும் வள்ளுவனை தரிசிக்க முயல்வர். அதுவே வள்ளுவம் உலகெலாம் பரவ வழி செய்யும். தமிழுக்கும் வான் புகழ் கிட்டும்.

இப்பெருமுயற்சிக்கு பின் நிற்கும் அனைவருக்கும் என் சிரம் தாழ்ந்த வணக்கங்கள். இதனை முன்னெடுத்துச் செல்லும் முனைவர் சுபாஷினிக்கு சிறப்பு வந்தனங்கள்.

அன்பின் வழியது உயிர்நிலை.

வள்ளுவம் வாழ்க!

**நா.கண்ணன்**
கோலாலம்பூர், மலேசியா
நவம்பர் 26, 2019



# 1. பொதுமுறை என்பதே பொருத்தம்

**ஆர்.பாலகிருஷ்ணன். இ.ஆ.ப**

திருக்குறள், தமிழகம் தரணிக்களித்த தன்னிகரில்லாத் தனிக்கொடை. ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்ற பாரதியின் பெருமிதம் வள்ளுவம் பற்றிய ஆகத்தெளிவான, மிகையற்ற மதிப்பீடு. திருக்குறளுக்கு உலகப் பொதுமறை, தமிழ்மறை, தமிழ் வேதம், வாழ்வியல் வழிகாட்டி, கலங்கரைவிளக்கம் என்று பல்வேறு புகழ்மகுடங்கள் உண்டு. இவற்றுள் உலகப்பொதுமறை என்ற அடையாளமே தற்போது மிகப்பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. திருக்குறள் சொல்லும் வாழ்வியல் நெறிமுறைகள் கால, இட எல்லைகளைக் கடந்து உலகளாவிய கண்ணோட்டமுடையது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. ஆயினும், திருக்குறளை உலகப்பொதுமறை என்று அழைப்பதைவிட உலகப்பொதுமுறை என்று அழைப்பதே பொருத்தமானது என்ற கருத்தை முன்மொழிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் 'மறை' 'முறை' என்ற இரு தமிழ்ச்சொற்களின் ஆக்கமுறையும் அவற்றின் அடித்தளமான பொருட்புலமும்; இச்சொற்களில் திருக்குறளின் ஆளுமையை அடையாளங் காட்டவல்லது எது என்ற வினாவும் இங்கே ஆய்வுக்குள்ளாகின்றன.

**பொதுமறை என்ற சொல்லாடலின் பின்னணி:**

திருக்குறள் வெவ்வேறு சமயச்சார்புடைய உலகமக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அறக் கருத்துக்களை உள்ளடக்கிய பொதுவான ஒரு மறைநூல், அதாவது உலக மக்களுக்கெல்லாம் பொதுவான ''வேதம்'' என்ற மதிப்பீடே 'பொதுமறை' என்ற விளக்கத்திற்கான பின்புலமாகும்.

திருக்குறளை வேத இலக்கியத்தோடு ஒப்பிட்டுத் தமிழ்வேதம், தமிழ்மறை என்று சித்தரிக்கும் மரபு இடைக்காலத்தில் தோன்றியது எனக் கருத இடமுண்டு. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்று கருதப்படும் திருவள்ளுவமாலை என்னும் நூலில் இதற்கான சான்றுகள் உள்ளன. திருவள்ளுவமாலையின் காலம், மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்ககாலப்புலவர்களின் பெயர்கள் குறித்து ஐயப்பாடு உண்டு என்பதையும் இங்கே குறிப்பிடவேண்டும். ''வேதப்பொருளாய் மிகவிளங்கி''; '' நான்மறையின் மெய்ப்பொருளை''; 'வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனார்': 'வேதப்பொருளை விரகால் விரித்துலகோர் ஓதத் தமிழால் உரைசெய்தார்'' போன்ற திருவள்ளுவமாலை வரிகள் இதற்குச் சான்றளிக்கும். திருவள்ளுவமாலையில் உள்ள பாடல்கள் அசரீரியில் தொடங்கி, கடவுளர்கள் மற்றும் சங்கப்புலவர்கள் பலரின் பெயர்களிலும் எழுதப்பட்டிருப்பதால் இப்பாடல்களின் தொன்மை ஐயத்திற்குரியதே. இவ்விலக்கியம் இடைக்காலத்தில் எழுதப்பட்டது என்ற கருத்து ஏற்புடையதாகத் தோன்றுகிறது. இதைப்போலவே தெய்வத்திருவள்ளுவர் என்ற சித்தரிப்பிற்கும் திருவள்ளுவமாலையே தொடக்கப்புள்ளியாய் விளங்குகிறது. இந்த மரபின் தொடர்ச்சியை தற்காலத்திலும் காணமுடிகிறது.

“தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த தமிழ்வேதமாகிய திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும்” என்ற நூல் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரால் படிதிருத்தம் செய்யப்பட்டு, 1861 ஆம் ஆண்டு சென்னையிலிருந்து வெளியிடப்பட்டது. இதே தலைப்பில் அதாவது திருக்குறளைத் 'தமிழ்வேதம்' என்று அழைக்கும் தலைப்புக் கொண்ட திருக்குறள் மூலம் மற்றும் உரை நூல்கள் பல்வேறு பதிப்பகங்களின் மூலம் 1885, 1886, 1904, 1904, 1908, 1924, 1925, 1927 மற்றும் 1930 ஆம் ஆண்டுகளிலும் அதைத் தொடர்ந்தும் வெளியிடப்பட்டன. “தமிழ்வேதமாகிய திருக்குறள் வசனம்” என்ற நூலை மு.ரா. அருணாசலக்கவிராயர் 1913 இல் எழுதினார். 'தமிழ்வேதம் திருக்குறள் இருபது” என்ற நூலை 1940 இல் வீ. பரமசிவ உபாத்தியாயர் வெளியிட்டார்.

“தமிழ்ப் பொதுமறையாகிய திருக்குறள் மூலமும் அதிகார வைப்புமுறையும் திருவள்ளுவர் சரித்திரச்சுருக்கமும் திருவள்ளுவமாலை மூலமும் பிறவும் சேர்ந்துள்ள நற்பதிப்பு நூல்” என்ற பெயரில் 1931 இல் கா.மு.சின்னப்பா பிள்ளையால் திருத்திவெளியிடப்பட்ட நூலில் 'தமிழ்ப் பொதுமுறை' என்ற அடைமொழி பயன்படுத்தப்பட்டது. ”தமிழ்மறை” என்ற அடைமொழியுடன் இரண்டு திருக்குறள் பதிப்புகள் 1950களில் என்.எம். ராஜன், கே.எம். வேங்கட்டராமய்யா ஆகியோரின் குறிப்புரைகளுடன் வெளியாயின. 'உலகப்பொதுமுறை (திருக்குறள்)' என்ற நூலை, மதுராந்தகம் திருக்குறள் பீடம் 1976 இல் வெளியிட்டது. 'தமிழ்மறைக் காவலர்' என்றும் 'திருக்குறளார்' என்றும் அழைக்கப்பட்ட வீ. முனுசாமி எழுதிய 'உலகப் பொதுமறை திருக்குறள் விளக்கம்” என்ற நூல் பலமுறை மறுமதிப்புச் செய்யப்பட்டது.

இதுவன்றி, “திருக்குறள் ஒரு பொதுமறை' என்ற தலைப்பில் கோ.வன்மீகநாதன் எழுதிய நூலை திருப்பனந்தாள் காசிமடம் 1980 இல் வெளியிட்டது. ”திருக்குறள் தமிழ் மறையா? ஒரு வினாவும் சில விடைகளும்” என்ற தலைப்பில் செயங்கொண்ட சோழபுரம் திருவள்ளுவர் ஞான மன்றத்தின் சார்பில் ஒரு நூல் வெளியிடப்பட்டது. 'திருவள்ளுவரை ஏன் நாம் இறைத்தூதராகப் போற்றவில்லை' என்ற வினாவை இந்நூல் முன்வைத்து வாதிட்டது.

திருக்குறளை தமிழ் வேதம், தமிழ்முறை, தமிழ்ப்பொதுமறை, உலகப் பொதுமறை போன்ற அடைமொழிகளோடு அழைப்பதிலிருந்து தொடங்கி, திருவள்ளுவரை தெய்வப்புலவர், தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் என்று அழைப்பதுடன் அவரை ஓர் இறைத்தூதராக அறிவித்து வழிபடவேண்டும் என்ற வாதம் வரைக்கும் இணைப்புச் சங்கிலியாக ஒரு எண்ண ஓட்டம் தெளிவாகத் தென்படுகிறது. வடமொழியில் எழுதப்பட்ட வேத இலக்கியம் போல தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ள திருக்குறள் மேன்மையானது; ஆனாலும் திருக்குறள் ஒரு குறிப்பிட்ட சமயத்தவருக்கான புனித நூல் அல்ல; அனைவருக்கும் பொதுவானது என்பதே அக்கருத்தாகும்.

தமிழ்வேதம், தமிழ்மறை என்ற இரு அடைமொழிகளின் நோக்கமும் பொருளும் ஒன்றே என்பதால் இதன் பொருத்தத்தைப் புலனாய்வதற்கு 'வேதம்' மற்றும் அதன் தமிழ் மொழிபெயர்ப்புச் சொல்லான 'மறை' ஆகிய இரு சொற்களின் ஆக்கம், பயன்பாடு மற்றும் பொருளமைவை ஆராய்தல் வேண்டும்.

**சதுர்வேதங்கள் எனப்படும் நான்மறை:**

வேதகாலத்துச் சமஸ்கிருத மொழியில் முதலில் திரிவேதங்கள் எனப்படும் ( ரிக், யஜூர், சாம) மூன்று வேதங்கள் எழுதப்பட்டன. இவற்றுள், ரிக் வேதம் மிகப்பழமையானது. பின்னர்

அதர்வண வேதம் சேர்க்கப்பட்டு சதுர்வேதங்கள் எனப்படும் நான்கு வேதங்கள் எனப் பொதுப்பெயர் பெற்றன. நான்மறை என்ற தமிழ் வழக்கு, சதுர்வேதம் என்பதன் நேரடித் தமிழ் மொழிபெயர்ப்பு ஆகும். அவ்வாறாயின், வேதம் என்ற சொல் மறை என்று மொழிபெயர்க்கப்பட்டதற்கான காரணம் என்னவாக இருக்கமுடியும்?

நான்மறை எனப்படும் வேதங்கள் அபுருஷேய அதாவது மனிதர்களுக்கு அப்பாலானது என்று அழைக்கப்பட்டன. அதாவது, வேதங்கள் தெய்வீகத்தன்மை *(Divine)* கொண்டதாகக் கருதப்பட்டன. உபநிஷதம் "வேத இரகசியம்" என்றும் அழைக்கப்படுகிறது. "வேத இரகசியம்" என்ற சொல்லாட்சி வேதங்களின் உள்ளீடான மறைபொருளை, அதன் இரகசியத்தன்மையை வெளிப்படுத்துகிறது. வித் என்ற வேர்ச்சொல்லிருந்து ஆக்கம் பெற்ற வேதம் என்ற சொல்லிற்கு அறிவு அதிலும் குறிப்பாக புனித அறிவு என்பது பொருள். மறைபொருளை மாந்தருக்கு வெளிப்படுத்தும் தெய்வீகப் படைப்பாக வேதங்கள் கருதப்படுகின்றன. வேத இலக்கியம் ஒருவரையும் குறிப்பாக எடுத்துக்காட்டாத *(impersonal);* படைப்பாசிரியர் என்று எவரும் இல்லாத *(authorless)* புனித நூலாகக் கருதப்படுகிறது. வேத இலக்கியம் ஸ்ருதி என்று வகையைச் சாரும். எது கேட்கப்பட்டதோ *(what is heard)* அதாவது வாய்மொழியாய்ச் சொல்லப்பட்டு செவி வழியே கேட்டறியப்பட்டது என்பதே ஸ்ருதி என்பதற்கான விளக்கம் ஆகும். இதற்கு மாறாக இந்து சமயப் புனித நூல்களில் ஸ்மிருதி என்ற ஒரு வகையும் உண்டு. எது நினைவு கூரப்பட்டதோ அது *(that which is remembered )* என்பது இதன் பொருள். ஸ்மிருதி இலக்கியம் தனிப்பட்ட படைப்பாசிரியர் கொண்டது. இவ்வகையில் தெய்வீக மூலத்திலிருந்து வெளிப்பட்டதாக, படைப்பாசிரியற்றதாகக் கருதப்படும் ஸ்ருதி எனப்படும் வேத இலக்கியத்திலிருந்து, ஸ்மிருதி இலக்கியம் வேறுபடுகிறது.

**திராவிட மொழிப்பரப்பில் 'மறை' என்பதன் சொல்லாக்க முறை:**

மறை, மறைதல் மற்றும் மறைத்தல் ஆகிய சொற்களை அடிப்படையாகக் கொண்ட சொற்பொருளாக்க முறை திராவிட மொழிகள் பலவற்றிற்கும் பொதுவானது என்பதைத் திராவிட வேர்ச்சொல் அகராதி (4760) ஆவணப்படுத்துகிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற திராவிட மொழிகளில் மட்டுமின்றி பல்வேறு திராவிடப் பழங்குடி மொழிகளிலும் இச்சொல்லாக்கத்தைக் காண முடிகிறது. மறை, மறைப்பு, மறைவு (தமிழ்); மற, மறவு (மலையாளம்); மர் (கோட்டா); மற்ப் (தோடா); மற, மறகு, மறசு (கன்னடம்); மரே (குடகு); மடேபுனி (துளு); மறுவு (தெலுங்கு); மரும், மக்கானா (கோண்டி); மர்க் (கொண்டா) போன்ற திராவிட மொழிக்குடும்பச் சொற்கள் இதற்குச் சான்றாவன.

இச்சொற்கள் யாவும் மறைதல், மறைத்தல், இரகசியமான என்பது போன்ற பொருள்களில் வழங்குகின்றனவே அன்றி, சமயச்சார்பான, குறிப்பாக வேதம் என்று பொருள் தரும் வகையில் பயன்படுத்தப்படவில்லை. தமிழ் மொழி மட்டுமே இதற்கு விதிவிலக்கு. சங்க இலக்கிய காலத்திலேயே மறை என்ற பெயர்ச்சொல் வேதம் என்ற பொருளிலும் வழங்கப்பட்டுள்ளது.

**'மறை' என்ற வினையும் பெயரும்:**

மறை என்ற தமிழ்ச் சொல்லின் மூலமும் சொற்பொருளாக்கமும் மறைதல், மறைத்தல், ஒளிதல், ஒளித்தல், கமுக்கம், இரகசியம் என்ற அடிப்படைகளில் உருவாகி நிலைபெற்றது.

புதல் மறைந்து வேட்டுவன் புட்சிமிழ்த்தற்று (புதரின் பின் மறைந்திருந்து வேட்டுவன் பறவையை வேட்டையாடுவது போல- குறள் 274); “மறைப்பேன்மற் காமத்தை யானே” (குறள்- 1253); “புறப்படுத்தான் ஆகும் மறை” (குறள்- 590): மறைந்தவை கேட்கவற்றாகி (குறள்- 587) போன்ற திருக்குறள் சொல்லாட்சிகள் முதல் மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன? “என்ற தில்லானா மோகனாம்பாள் திரைப்படப் பாடல்வரி வரை மறை என்ற வினைச்சொல்லின் விதையும் கிளையும் ஒளிதல் ஒளித்தல் மறைதல் மறைத்தல் இரகசியம் என்ற அடிப்படையின் அடியொற்றியே வேரூன்றி வளர்ந்து வந்துள்ளன. பழந்தமிழ் இலக்கியப்பரப்பில் மறை என்ற வினைச்சொல் வேர், பெயர்ச்சொல்லாகி புனித நூல் என்ற பொருளிலும் வழங்கியது, வேதங்கள் பற்றிய கருத்தோட்டம் தமிழ்ச் சமூகவியலில் தாக்கத்தை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து நேர்ந்த பின்விளைவே ஆகும்.

தமிழ்ச் சொற்களஞ்சியம் (*Tamil Lexicon, Volume 5, Part 1*) தொகுத்தளிக்கும் சான்றுகள் இக்கருத்தை மேலும் உறுதி செய்கின்றன. மறை என்ற பெயர்ச்சொல்லிற்கு மறைக்கை (*Concealment*), இரகசியம் , மந்திராலோசனை , வேதம் , உபநிஷதம் , ஆகமம் , மந்திரம் , உபதேசப்பொருள் , களவுப்புணர்ச்சி , உருக்கரந்த வேடம் , புகலிடம் , சிறைக்கூடம் உள்ளிட்ட பல பொருள்கள் விளங்குவதைச் சொற்களஞ்சியம் விளக்குகிறது.

“வெயின்மறைக் கொண்ட…” என்ற சங்க இலக்கியச் சித்தரிப்பில் (புறநானூறு 60) மறை என்ற பெயர்ச்சொல் மறைக்கை (*Concealment*) என்ற பொருளில் வழங்குகிறது. “புறப்படுத்தான் ஆகும் மறை (குறள்- 590) என்ற வள்ளுவர் சொல்லாட்சியில் மறை என்ற சொல் இரகசியம் (*Secret*) என்ற பொருளில் வழங்குகிறது. “அளபிற் கோட லந்தணர் மறைத்தே (தொல்காப்பியம், எழுத்ததிகாரம்- 102) என்ற தொல்காப்பியர் இலக்கணம் மறை என்ற தமிழ்ச்சொல்லை வேதம் என்ற வடமொழிச் சமய இலக்கியத்தைக் குறிக்கப் பயன்படுத்துகிறது. “நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரமென்ப (தொல்காப்பியம். செய்யுளதிகாரம் - 171) என்ற நூற்பா மறைமொழி என்பதை மந்திரம் மற்றும் சமயக்கோட்பாட்டோடு தொடர்புபடுத்துகிறது. “வேதத்து மறைநீ” என்ற பரிபாடல் சித்தரிப்பு (பரிபாடல்- 3, 66) வேதம் , மறை என்ற இரு சொற்களையும் ஒருசேரப் பயன்படுத்தி, வேத இரகசியம் என்ற கோட்பாட்டை முன்னிறுத்துகிறது. திருவள்ளுவரே அருமறை என்ற சொல்லாட்சியை உபதேசப் பொருள்” (*Esoteric Teachings*) என்ற பொருளில் கையாளுகிறார். (குறள் 847)

எனவே, மறை (மறைத்தல்) என்ற வினையடியாகப் பிறந்த மறை என்ற பெயர்ச்சொல் இரகசியம் , மறைபொருள் , மந்திரம் , உபதேசப்பொருள் , வேதம் என்ற பொருள்களில் வழங்கப்பட்டதும் வேதம் என்ற சொல்லிற்கு நிகரான தமிழ்ச்சொல்லாக மறை உருப்பெற்றதற்கு ”வேத இரகசியம் என்ற கருத்தமைவே காரணமாக இருந்தது என்பதும் வெளிப்படை.

**தமிழ் வாழ்வியலின் தனித்துவமான அடித்தளம்:**

வேத இலக்கியங்கள் பற்றிய செய்திகள் மற்றும் வேத வழிப்பட்ட சிந்தனைகள் தொல்காப்பியர் காலத்திலிருந்தே தமிழ்ச் சிந்தனைப் பரப்பில் தாக்கம் புரியத்தொடங்கிவிட்டன. ஆனாலும், சங்க இலக்கியத்தின் உருவ உள்ளடக்கத்தின் மையப்பொருளாக மேலோங்கி இருப்பது புவிச்சூழல் சார்ந்த ஒரு தனித்துவமான வாழ்வியல் முறையின் ஆகத்தெளிவான சித்தரிப்பே

ஆகும். அகப் புறப் பாகுபாடும், திணை மரபும் அதன் உள்ளீடாக வெளிப்படும் வாழ்க்கை முறையும் சங்க இலக்கியம் பதிவு செய்துள்ள பண்பாட்டின் தனிமுத்திரைகளாகும்.

தமிழ் ஐந்திணை மரபில், அன்றாட வாழ்வியலோடு, புறச்சூழலோடு தொடர்புடைய பல்வேறு கருப்பொருட்களில் ஒன்றாகத்தான் கடவுள் கணக்கிடப்படுகிறார். சங்க இலக்கியமும் ''தீதும் நன்றும் பிறர்தர வாரா'' என்ற தெளிவுடன் ஒரு தன் மையப் என்ற புரிதலையே வலியுறுத்துகிறது. வள்ளுவருக்குப் பின்வந்த, முதற்காப்பியமான சிலப்பதிகாரமும் கண்ணகியின் கூற்றாக '' நான்மாடக்கூடல் மகளிரும் மைந்தரும் வானக் கடவுளரும் மாதவரும்'' என்று மதுரை நகரத்து மகளிரையும், மைந்தர்களையும் முன்னிலைப்படுத்தி, வானத்துக் கடவுள்களையும், தவமுனிவர்களையும் அவர்களுக்குப் பின்னர் வரிசைப்படுத்துகிறது. அக்காலகட்டத்தில் தமிழ்மொழியில் மட்டுமே சாத்தியமாகக் கூடிய புதுமை இது. சிலப்பதிகாரத்தின் மங்கல வாழ்த்தும் திங்கள், ஞாயிறு, போன்ற விண்வெளி இயற்கைக் கூறுகளையும், மாமழை என்னும் இயற்கையின் கொடையையும், நகர்மயப் பண்பாட்டின் நடைமுறைச் சான்றான பூம்புகார் என்ற தலைநகரையும் போற்றித் துதித்ததேயன்றி எந்த ஒரு குறிப்பிட்ட கடவுளையும் மங்கல வாழ்த்துப் பாடலில் போற்றவில்லை என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

எனவே, தமிழ்ச் சமூகத்தின் சமயச் சிந்தனையில் திருவள்ளுவருக்கு முன்னும் பின்னும் நடைமுறை வாழ்வியல் சார்ந்த, தமிழ்ப்பண்பாட்டின் தனித்துவப் போக்குகளை அடிக்கோடிட்டு வலியுறுத்தும் கருத்தோட்டங்கள் வேரூன்றி இருந்தன. எனவே திருவள்ளுவரின் சமயக்கோட்பாடுகளைத் திருவள்ளுவருக்கு முன்னும் பின்னும் தமிழ்மண்ணில் நிலைபெற்றிருந்த மரபுகளின் பின்னணியில் மதிப்பிடுவதே நியாயம் ஆகும்.

**திருக்குறளை 'மறை' என்று சொல்வது பொருந்தாது.**

திருக்குறள், திருவள்ளுவர் என்ற உலகின் தலைசிறந்த படைப்பாளி ஒருவரால் எழுதப்பட்ட வாழ்வியல் நூல். இப்படைப்பை, மனிதர்களுக்கு அப்பாற்பட்டது தெய்வீக மூலத்திலிருந்து எது கேட்கப்பட்டதோ அது என்பது போன்ற அதீத, மற்றும் சமய மரபுகளோடு ஒருபோதும் தொடர்புபடுத்த முடியாது. திருக்குறள் ஒரு வெளிப்படையான இலக்கியம். இதில் மறைபொருள் என்று எதுவுமில்லை. ஒரு மனிதரால், உலக மனிதருக்காக தமிழ்மண்ணில் எழுதப்பட்ட நடைமுறை இலக்கியம் இது. திருவள்ளுவத்தில் மந்திரம் தந்திரம் எதுவுமில்லை; சொல்லப்போனால் அது ஒரு சுதந்திரம்.

''தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருத்தக்கூலி தரும்'' என்று தெய்வசக்திக்கும் மேலாக மனித முயற்சியின் மகத்துவத்தைத் தூக்கிவைத்துக் கொண்டாடிய, நடைமுறை இலக்கியத்தை, ''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்துகெடுக இவ்வுலகு இயற்றியான்'' என்று சினம் காட்டும் பொதுவுடைமை இலக்கியத்தைச் சுதந்திரம் என்றால் மிகையாகாது. அத்தகைய இலக்கியத்தை எழுதிய திருவள்ளுவரை தெய்வப்புலவர் என்று அழைப்பது பெருமைக்குரிய விஷயம் என்று நாம் கருதினாலும் திருக்குறள் என்ற ஆகச்சிறந்த மனித முயற்சிக்கு அது மகுடமாகாது. அதே நேரத்தில், திருக்குறள் கடவுள் வாழ்த்தோடு தான் தொடங்குகிறது என்ற உண்மையை நாம் மறந்துவிட முடியாது. திருவள்ளுவருக்கு மறுபிறவி, வீடுபேறு போன்றவற்றில் நம்பிக்கை இருந்தது என்பதற்குத் திருக்குறளிலேயே ஆதாரம் உள்ளது ஆனால், திருவள்ளுவர் இறைவழிபாட்டில் நம்பிக்கை உள்ளவரா இல்லையா என்பதல்ல கேள்வி.

கடவுள் நம்பிக்கை உள்ளவர் ஒருவர் எழுதினார் என்பதனாலேயே ஒரு நூல் சமய நூலாக, குறிப்பாக மறை நூலாக ஆகிவிட முடியாது.

பழங்குடி மக்களின் தொல்மதங்களில் புனித நூல்கள், உபதேசப்பொருள்கள் என்று எதுவும் இல்லை. இயற்கை வழிபாடு, நீத்தார் வழிபாடு போன்ற நம்பிக்கைகளே பழங்குடிச் சமயங்களின் உருவமும் உள்ளடக்கமும் ஆகும். அமைப்புச் சார்ந்த, இறைவனின் கட்டளைகளால் கட்டமைக்கப்பட்ட கோட்பாடுகள் நிறைந்த, இறைத்தூதர்களின் உபதேச மொழிகளால் உருவம் கொடுக்கப்பட்ட உலகச் சமயங்களின் புனித நூல்களின் உபதேசப்பொருள்களில் பொதுத்தன்மை பல இருந்தாலும் அப்புனித நூல்கள் ஒவ்வொன்றும் தனித்துவமான சிந்தனைகளை உள்ளடக்கியவை. இன்னும் சொல்லப்போனால், அத்தகைய தனித்துவமான முத்திரைகளே அந்நூல்களோடு தொடர்புடைய சமயங்களின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் நியாயப்படுத்தும் காரணிகளாகவும் விளங்குகின்றன. இத்தனித்துவப்போக்குகளின் விட்டுக்கொடுக்காத விடாப்பிடியான அணுகுமுறை உலக வரலாற்றின் பல்வேறு போர்க்களங்களுக்குப் பின்புலமாயின. ஒருவகையில், உலகப்பொதுமறை என்ற கருத்தோட்டமே கேள்விக்குரியது. பொதுமறை என்பது ஒரு குறிக்கோளாக, புனைவியலாக இருக்கலாம். அது எக்காலத்திலும் நடைமுறையிலிருந்தது இல்லை. ஏனெனில் பொதுவாக இருக்கும் எதுவும் மறையாக இருக்கமுடியாது; மறையாக இருக்கும் எதுவும் பொதுவாக இருக்கமுடியாது.

எனவே, திருக்குறளை உலகப்பொதுமறை என்று அழைப்பதைவிட உலகப்பொதுமுறை என்று அழைப்பது பொருத்தமாக இருக்கும். இந்த வாதத்தை முன்வைக்கும் போக்கில் திருக்குறளின் அடிப்படையான அறக்கோட்பாடு சமயம் என்ற வரம்பிற்கு உட்பட்டதா அல்லது அதையும் தாண்டி இயங்கும் நடைமுறை சார்ந்த இயல்புடையதா என்ற கேள்வியும் அதற்கான விடைகுறித்தத் தேடலும் இக்கட்டுரையின் மையக்கருத்திற்கு இணக்கமானவையே.

**திருக்குறளின் அடிப்படைத் திசை அறம்:**

திருக்குறளின் அடிப்படைத் திசை அறமே அந்த அடிப்படைக்கும் அடிப்படையான அடித்தளமாக திருவள்ளுவர் அடையாளம் காட்டுவது மனச்சான்றாகும். ‘‘மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்’’ (குறள் 34) என்பது வள்ளுவர் அறத்தை மதிப்பிட அறிவித்த அளவுகோல். மனமே அறத்தின் நிலைக்களம் என்பது வள்ளுவரின் கோட்பாடு. "அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்’’ (குறள் 288); "உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்" (குறள் 294) என்ற குறள்வரிகளில் இது தெளிவாகும். ’’மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு தானம் செய்வாரின் தலை’’ (குறள் 295) என்ற குறளில் மனம் தான் வள்ளுவத்தின் மதம், மனத்தூய்மை தவத்தைவிடச் சிறந்தது என்பது தெள்ளத்தெளிவாகும்.

மனத்தது மாசாக மாண்டார் நீராடி மறைந்தொழுகு மாந்தர் பலர் (குறள் 278); ‘‘நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வண்கணார் இல்’’ (குறள் 276); "வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்" (குறள் 271) போன்ற வள்ளுவரின் வெளிப்படையான, ஒளிவு மறைவற்ற அறவழி, உண்மையில் சமயச்சார்பற்ற புதுவழியாகும். ‘மழித்தலும் நீட்டலும் வேண்டா சான்றோர் பழித்தது ஒழித்து விடின்’’ (குறள் 280)என்பது இந்த நிலைப்பாட்டை மேலும் உறுதி செய்யும்.

கட்டமைப்பிலும், சொற்பயன்பாட்டிலும், பொருட்தெளிவிலும் திருக்குறள் எளிதாகப் புரிந்துகொள்ளத்தக்க மக்கள் இலக்கியம். இன்னும் சொல்லப்போனால், தெளிவான திருக்குறளை விளக்குவதற்காக எழுதப்பட்ட உரைகளே சில நேரங்களில் குழப்பத்திற்கு விதை தூவி உள்ளன.

**'முறை' என்ற சொல்:**

முதலில் திராவிட மொழி வரையறைக்குள் 'முறை' என்ற பெயர்ச்சொல்லின் சொற்பொருளாக்கத்தைக் காணலாம். 'முறை' என்ற தமிழ்ச்சொல் ஒழுங்கு, ஒழுங்குமுறை, வகைமுறை, முறைமை, தகவு, செப்பம், செயல்வகை, மரபொழுங்கு, கட்டளை, வரிசை, அமைப்புமுறை, செயல் ஒழுங்கமைதி, வழக்கம், வாடிக்கை மரபு, நீதி, கட்டளை, இயல்பு போன்ற பொருள்களில் வழங்குகிறது. மலயாள மொழியில் 'முற' என்ற சொல், கட்டமைப்பு, கட்டடுப்படுத்தவல்ல, சட்டம், வழக்கம், மரபு, கடமை, வரிசை போன்ற பொருள் தரும். அம்மொழியில் 'முறம' எனில் வழக்கம், வாடிக்கை மரபு என்பது பொருள். கோட்டா மொழியில் 'மொய்ர்' என்பது சுற்றத்தாருடனான உறவுமுறையையும்; தோடா மொழியில் 'மிற்' என்பது நெருங்கிய உறவையும்; கன்னட மொழியில் 'மொறே' என்பது வரிசை, ஒழுக்கம், உறவு என்பதையும்; துளு மொழியில் 'முடே' என்பது நெருங்கிய உற்றார் உறவினரையும்; கோண்டி மொழியில் 'முர' என்பது வழக்கம், வாடிக்கை மரபு என்பதையும் கொண்டா மொழியில் 'முர்' என்பது உறவுக்காரர்களையும் குறிக்கும் (சான்று: திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதி; 5015).

எனவே, பொதுவாக திராவிட மொழிகளில், சிறப்பாகத் தமிழ் மொழியில் 'முறை' என்ற சொல் குடும்பம், சுற்றம், உற்றார் உறவினர், ஒழுங்கு, சட்டம், வழக்கம், வாடிக்கை மரபு, இயல்பு, கட்டளை, நீதி போன்ற பொருள்களில் சமூக அமைப்பின் பல்வேறு படிநிலைகளையும் தழுவிய சமூகக் கட்டமைப்புச் சொல்லாக விளங்குகிறது. தனிமனிதரில் தொடங்கி அரசாட்சி வரை இச்சொல்லின் தாக்கப்பரப்பு விரிவானதும் ஆழமானதும் ஆகும்.

நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் சொற்களான, முறை, உறவுமுறை, வழிமுறை, செய்முறை, மணமுறை, ஒழுங்குமுறை, முறையீடு, மேல் முறையீடு, முறைகேடு, வாழ்க்கை முறை, கல்விமுறை, ஆட்சிமுறை, நெறிமுறை, தலைமுறை, வரைமுறை, செயல்முறை, பாசனமுறை போன்ற சொற்கள் வாழ்வின் எல்லாக் கூறுகளையும் ஒவ்வொரு காலகட்டத்திலும் உள்வாங்கி உருப்பெற்றன.

திருக்குறளில் முறை என்ற சொல் 13 குறட்பாக்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அரசாட்சியின் ஆணிவேரான அடிப்படையே அரசனின் நடுவு நிலை தவறாது நீதி வழங்கும் பண்பும் திறனும் தான் என்பதைத் திருவள்ளுவர் தெளிவாக வலியுறுத்துகிறார். "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்" (குறள் 388) என்பதன் மூலம் ஓர் அரசன் தனது குடிமக்களால் கடவுளைப்போல் நினைத்துப் போற்றப்படுவது, அவன் நீதி தவறாமல் அதாவது முறை செய்து அம்மக்களைக் காப்பாற்றுகிறானா என்பதைப் பொறுத்தது என்ற முன்னிபந்தனையை விதிக்கிறார். அவ்வாறு முறைசெய்யாத அரசனுடைய கொடுங்கோல்

ஆட்சியின் கீழ் இருக்கப்பெற்றால், பொருள் இல்லாத வறுமை நிலையைவிடச் செல்வநிலை துன்பமானதாகும் என்றும் தீர்ப்பளிக்கிறார் திருவள்ளுவர்.

இவ்வாறு இறை- முறை இரண்டிற்குமான தொடர்பையும் முறை யின் முன்னுரிமையையும் திருக்குறள் அடிக்கோடிடுகிறது. இவ்விரு கோட்பாடுகளையும் இணைத்து சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் இறைமுறை என்ற சொல்லாட்சியை அறிமுகம் செய்கிறார். அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே என்று சாடுகிறாள் கண்ணகி.

திருக்குறளில் பயன்படுத்தப்பட்டுள்ள ''செயன்முறை உறல்முறை , வழிமுறை போன்ற பிற சொல்லாட்சிகள் முறை என்ற சொல்லின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துகின்றன. உறல்முறை என்பது உறவுமுறை, வழிமுறை என்பது தலைமுறை, முறைசெய்தல் என்பது நீதி செய்தல். இன்றும் கூட தமிழ்நாட்டில் நெருங்கிய உறவினர்களின் திருமணம் இறப்பு போன்ற பலவேறு நிகழ்வுகளில் கலந்து கொண்ட தனக்கான முறையை (பங்கை) செய்வது முறைசெய்தல் என்று அழைக்கப்படுகிறது. எனவே குடும்ப உறவில் தொடங்கிக் கோலோச்சும் அரசமைப்பு வரை ''முறை செய்தல்'' ஒரு பண்பாட்டுத் தொடர்ச்சியாகப் பயணிக்கிறது. இனக்குழு அமைப்பில் தொடங்கியது தான், குறுநில மற்றும் பேரரசுகளுக்கான அடிப்படை என்பதையும் நாம் இங்கே நினைவு கூரலாம்.

**பொதுமுறை என்பது பொருத்தம்:**

திருக்குறள் அதன் முழுப்பரிமாணத்தில் ஒரு முறைநூல் ஆகும். ஒவ்வொரு மனிதனின் குடும்ப வாழ்வில், பொதுவாழ்வில் பின்பற்றக்கூடிய முறைகளை திருக்குறள் அடையாளம் காட்டுகிறது. தாயாக, தந்தையாக, கணவனாக, மனைவியாக, குழந்தையாக, உறவுமுறையில் ஒரு உறுப்பினனாக, ஒரு நாட்டின் குடிமகனாக, வேளாண்மை செய்பவனாக, வியாபாரம் செய்பவனாக, அரசனாக, அமைச்சனாக, படைத்தலைவனாக ஒவ்வொரு மனிதரின் செயல்பாட்டிற்கான முறைகளை வகுத்தளித்து வலியுறுத்துகிறது.

அறம், பொருள் இன்பம் என்ற முப்பரிமாணங்களில் வாழ்வின் நோக்கங்களையும் பயன்பாடுகளையும் அணுகித் திசைகாட்டும் திருக்குறளில் அடித்தளமான திசை அறமே. "சிறப்புஈனும் செல்வமும் ஈனும், அறத்தினூங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு" என்ற கேள்வியின் மூலமும் (குறள் *388*); "அறத்தான் வருவதே இன்பம்" என்ற தேற்ற ஏகாரத் தெளிவின் மூலமும் (குறள் *39*) வள்ளுவர் முன்வைக்கும் மிகவலுவான செய்தி, அறமே அறத்தின் நோக்கமும் பயனுமாக இருக்கிறது. அறமே அறத்திற்கும், பொருளிற்கும் இன்பத்திற்கும் வழிமுறையாகவும் இருக்கிறது என்பதாகும்.

"அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்" என்பது (குறள் *754*) பொருளதிகாரத்தின் உயிர்மூச்சான மையக்கருத்து. அறம் கூறும் ஆக்கம் பற்றிப் பேசும் வள்ளுவம் வறுமையைக் கூட அறம்சாரா நல்குரவு, அறம்சார்ந்த நல்குரவு என்று தரம்பிரிக்கிறது. அறனிழுக்கா இல்வாழ்க்கை , அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை , அறனிழுக்கா அரசு என்று அறமே தனிமனித வாழ்க்கைக்கும் அரசுமுறையின் தகுதிக்கும் உரைகல்லாகிறது.

திருக்குறள் ஒரு முறை நூல் என்பதைத் தெரிந்து செயல்வகை, வினை செயல்வகை, பொருள் செயல் வகை என்ற தலைப்புகளே அடையாளம் காட்டும். ''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற'' என்ற திருவள்ளுவரின் அறிவிப்பிற்கு இணையான, சமயச்சார்பற்ற, தனிமனித ஒழுக்கம், மனத்தூய்மை சார்ந்த அறக்கருத்து வேறெங்கும், வேறெந்த மொழியிலும் வேறெந்த நூலிலும் இவ்வளவு தெளிவாகப் பேசப்படவில்லை.

உழவனை உலகத்தார்க்கு ஆணி'' (குறள்- 1032) என்றும், ''சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை'' (குறள்- 1031) என்றும் உழவனைக் கொண்டாடிய முழுமுதல் உலக இலக்கியம் திருக்குறளே. பிறப்பால் ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் ஏனைய இந்தியச் சமய இலக்கிய மரபுகளில் உழவன் ஒருபோதும் உச்சத்திலிருந்தது இல்லை. உழவர்களாலும், குறுநிலத்தலைவர்களாலும் கட்டமைக்கப்பட்ட தமிழ்ச்சமூகப் பண்பாட்டு மற்றும் அரசுருவாக்கத்தின் பின்புலமே வள்ளுவரின் சிந்தனையை வடிவமைத்திருக்க வேண்டும். இதற்குச் சிந்துவெளித் திராவிடப்பண்பாட்டின் வீழ்ச்சியின் மீள்நினைவுகளாகத் தமிழ்ச்சமூகத்தின் கூட்டுணர்வுக்குள் குடியேறியிருந்த படிப்பினைகளும் காரணமாக இருந்திருக்கக் கூடும் என்ற கருத்து இப்போதைக்கு ஒரு ஊகம் என்றாலும் முழுக்க முழுக்க அடிப்படையற்றதல்ல.

இதைப்போலவே, திருவள்ளுவர் முன்வைக்கும் அறிவு சார்ந்த வாழ்வியலின் அடிப்படையும் சமயச்சார்பற்றதாகும். ''மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார்; கீழ்ப்பிறந்தும் கற்றார் அனைத்திலர் பாடு' (குறள்- 409) 'அறிவுடையார் எல்லாம் உடையார்' (குறள்- 430) என்பது போன்ற கருத்துக்கள் மிகவும் புரட்சிகரமானவை. அன்றைய காலகட்டத்து இந்தியச் சமயப் பண்பாட்டு மரபின் வழித்தடங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. அறிவே மூலதனம்; கடின உழைப்பே கச்சாப்பொருள், மற்றபடி, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற நிலைப்பாடு சங்க இலக்கியத் தமிழ்மரபில் வேரூன்றி திருவள்ளுவரின் கரங்களால் பட்டை தீட்டப்பட்ட பட்டறிவுப் படிப்பினை.

திருவள்ளுவரின் திருக்குறளில் கூறப்படுகிற சில கோட்பாடுகள் பல உலக மதங்களின் நம்பிக்கைக் கட்டமைப்பிலிருந்து வேறுபட்டது; எனவே அத்தகைய கருத்துக்களில் சிலவற்றை சில மதத்தினர் ஏற்றுக்கொள்ளவும் தயங்குவார்கள். தேர்ந்து தெளிதலை, கசடறக் கற்றலை வலியுறுத்தும் திருக்குறளில் கருத்துத்திணிப்பிற்கு இடமில்லை. திருக்குறள் ஒரு கசாய இலக்கியமில்லை. ஏற்கனவே சுட்டியபடி திருக்குறள் ஒரு மந்திரம் இல்லை. திருக்குறளில் இரகசியம், மறைபொருள் எதுவுமில்லை. அது ஒரு திறந்தவெளி மேடை. திருக்குறள் ஒரு பொதுமக்கள் இலக்கியம். இன்றும் பள்ளிக்கூடங்கள் முதல் பட்டி தொட்டி வரை பேசப்படுவது. பொதுவாக இருக்கும் எதுவும் மறையாக இருக்கமுடியாது.

எனவே, திருக்குறளை உலகப் பொதுமறை என்பதைவிட உலகப் "பொதுமுறை" என்பதே பொருத்தம். திருவள்ளுவர் சமய நம்பிக்கை அல்லது சார்பு அற்றவர் என்பதல்ல இதற்குக் காரணம். மாறாக, திருவள்ளுவர் சமயங்களுக்கு அப்பாற்பட்டவர் என்பதே காரணம்; சமயம் என்பதை மதம், காலம் என்ற இரண்டு பொருள்களிலும் எடுத்துக்கொண்டாலும் கூட.

.

# 2. நன்னயம்

## எழில்முதல்வன் (முனைவர் மா.ராமலிங்கம்)

சில ஆண்டுகளுக்கு முன் இந்நிகழ்ச்சி நடந்தது. எழும்பூர் ரயில் நிலையத்திலிருந்து திருச்சிக்குப் புறப்படும் பல்லவன் எக்ஸ்பிரஸைப் பிடிப்பதற்காக நான் விரைந்து வந்தேன். வந்த வேலைகளை முடித்துக் கொண்டு நான் புகைவண்டி நிலையத்துக்கு வந்த போது ரயில் புறப்படத் தயாராக இருந்தது. பெட்டியைத் தேடி இடத்தைக் கண்டுபிடித்து இருக்கையில் அமர்ந்தவுடன் வண்டி புறப்பட்டது. சிறிது நேரம் கழித்து, நான் என் பையிலிருந்த புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினேன்.

எதிர் இருக்கையிலிருந்த ஒருவர் என்னை உற்றுப் பார்த்துவிட்டு, என் பெயரைச் சொல்லி விளித்து ‘‘நீங்கள்தானே?’’ என்றார் ‘‘ஆமாம்’’ என்றேன். அவர் முன்னரே என்னை அறிந்திருப்பார் போலும். அவர் ஒரு வணிகர் என்றும் தமிழில் ஆர்வம் கொண்டவரென்றும் திருக்கோவிலூர் அருகே ஒரு கிராமத்தில் வாழ்கிறவர் என்றும் அவரைப் பற்றி நான் அறிந்து கொண்டேன். சில செய்திகளைப் பொதுநிலையில் பரிமாறிக் கொண்டபின் நான், திரும்பவும் புத்தகத்தில் மூழ்கினேன்.

அப்பெரியவர் ‘‘அது என்ன புத்தகம்?" என்று கேட்டார். ‘‘வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் எழுதிய திருக்குறள் உரை’’ என்று பதில் சொன்னேன். அவர் வை.மு.கோ. பற்றி அறிந்தவராகத் தெரியவில்லை . ‘‘இன்னமுமா திருக்குறளைப் படித்துக்கொண்டு இருக்கிறீர்கள்?’’ என்று கேட்டார். நான் சற்றே இழுத்தாற் போல், ‘‘படித்திருக்கிறேன், என்றாலும் இப்போது தான் படிக்க ஆரம்பித்திருக்கிறேன்’’ என்றேன். என் பேச்சில் உள்ள முரண்பாடு அவருக்கு வியப்பை அளித்திருக்க வேண்டும். அவ்வியப்பு அவர் முகத்தில் தெரிந்தது. எனவே என் கருத்தைச் சற்றே விளக்கத் தொடங்கினேன்.

இளவயதில் தொடக்கப்பள்ளிகளில் பயின்ற காலத்தில் ‘‘திருக்குறள் ஒப்புவித்தல்’’ போட்டி நடத்துவார்கள். ஒன்று அல்லது இரண்டு அதிகாரங்களை மனப்பாடம் செய்து சரியாக ஒப்புவித்தால் பரிசு தருவார்கள். அப்பரிசினைப் பெறுவதற்காக, கொடுக்கப்பட்ட அதிகாரங்களை நான் விரைவில் மனப்பாடம் செய்து, பிழை இல்லாமல் சொல்லிப் பரிசுகளைப் பெற்றுவிடுவேன். பின்னர் உயர் நிலைப் பள்ளிக்குச் சென்றபோது அங்கே திருக்குறள் தொடர்பான கட்டுரைப் போட்டிகளை நடத்தினார்கள். கொடுக்கப்பட்ட தலைப்புக்கு ஏற்ப, திருக்குறட் கருத்துக்களைத் தொகுத்து நிரல்பட எழுதிப் போட்டிகளில் ஏதாவது ஒரு பரிசைப் பெற்று விடுவேன். அதற்காக ஆசிரியர்களின் வழிகாட்டுதலில் திருக்குறளைப் பல முறை படிக்க நேர்ந்ததுண்டு. அதைத் தொடர்ந்து கல்லூரி நாள்களில் திருக்குறள் தொடர்பாகப் பேச்சுப் போட்டிகள் நடத்தினார்கள். அப்போட்டிகளிலும் நான் பரிசுகளைப் பெற்றிருக்கிறேன். பரிசு பெறும் நோக்கத்தில் திருக்குறளைப் பல முறை படித்தேன்.

முதுகலை பயின்று நான் கல்லூரி ஆசிரியராக ஆன போது மாணவர்களுக்குத் திருக்குறளைப் பாடமாக நடத்த வேண்டியிருந்தது. பொதுவாகத் திருக்குறள் அல்லாத வேறு இலக்கியப் பகுதிகளைச் சுவைபட நடத்துவது எளிது. திருக்குறளைச் சுவையாக நடத்தி மாணவர்களை ஈர்ப்பது கடினம். எனவே மாணவர்களிடம் நல்ல ஆசிரியர் என்று பெயர்

எடுப்பதற்காகத் திருக்குறளை வருந்தி வருந்திப் படித்தேன். அம்முயற்சியில் வெற்றியும் பெற்றேன். அந்நிலையில் திருக்குறளைப் படித்தபோது மாணவர்களிடம் செல்வாக்குப் பெற வேண்டும் என்பதே என் நோக்கமாக இருந்தது. வேறு யாராவது சக ஆசிரியர் ஒருவர் திருக்குறளை நன்றாகப் பாடம் சொல்கிறார் என்று கேள்விப்பட்டால் போதும். அவரை விடவும் நாம் நன்றாகப் பாடம் எடுக்க வேண்டும் என்கிற எண்ணம் ஏற்படும். அதற்காகவே திருக்குறளை மேலும் ஆழமாகக் கற்க முயல்வேன்.

ஆசிரியப் பணியில் இருக்கும் போது சில இலக்கியக் கூட்டங்களிலும் பொது நிகழ்ச்சிகளிலும் சொற்பொழிவாற்றுதற்காக நண்பர்கள் என்னை அழைப்பதுண்டு. அப்போது கேட்போரை மகிழ்விக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் ஆங்காங்கே திருக்குறளை மேற்கோள் காட்டிப் பேசுவதுண்டு. ‘‘அன்றைக்கு நீங்கள் திருக்குறளைப் பற்றிப் பேசினீர்களே, அப்பேச்சு மிக அருமையாக இருந்தது,’’ என்று அன்பர்கள் சொன்னபோது அப்பாராட்டுரையால் ஊக்கம் பெற்றுத் திருக்குறளை மேலும் படித்தேன். அன்பர்கள் சொன்னது வெறும் உபசார வழக்காகக் கூட இருக்கலாம். எனினும் அடுத்த முறை திருக்குறளைப் பற்றிப் பேசும் போது கேட்போரின் கை தட்டலை மேலும் அதிகமாகப் பெற வேண்டும் என்பதே என் நோக்கமாக இருந்தது.

திருக்குறளுக்கு அறிஞர்கள் பலர் எழுதிய புதிய புதிய உரைகளை எல்லாம் அக்காலத்தில் படித்தேன். அவற்றைப் படிக்கும் போது ‘‘சில குறட்பாக்களுக்கு நாமும் ஏன் புதிய உரை சொல்லக்கூடாது?’’ என்னும் அசட்டுத்தனமான முனைப்பு என்னுள் எழுந்தது. அதன் காரணமாகச் சில குறட்பாக்களுக்கு வலிந்து பொருள் சொல்லி இதுவே திருவள்ளுவரின் திருவுள்ளம் என்று பேசவும் எழுதவும் முற்பட்டேன். மற்றவர்களை விட நாம் மெத்தப் படித்தவர் என்று சிலர் நினைக்க வேண்டும் என்பதற்காகவே இம்மாதிரி முயற்சியை சிற்சில சமயங்களில் நான் மேற்கொண்டிருக்கிறேன்.

அறிந்தோ அறியாமலோ சிலர் என்னைச் சுட்டிக்காட்டி ‘‘இவர் திருக்குறளை அழுத்தமாய்ப் படித்திருக்கிறார்’’ என்று தமக்குள் பேசிக்கொண்ட போது அப்பாராட்டைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்னும் நியாயமான கவலையோடு திருக்குறளைப் பல நாள்கள் படித்தேன். எப்படியோ ஆசிரியர் பணியில் முப்பத்தேழாண்டுகள் கழிந்தோடி விட்டன. கழிந்து போன நாள்களை எண்ணிப் பார்க்கும் போது நான் ஒவ்வொரு காலகட்டத்திலும் திருக்குறளை வெவ்வேறு காரணங்களுக்காகப் படித்து வந்திருக்கிறேன் என்பது புலனாயிற்று. திருக்குறள் எல்லாவற்றையும் முழுமையாகப் பயிலாவிட்டாலும் சிலவற்றையாவது ஆழ்ந்து படித்து, அவற்றுள் சிலவற்றையாவது வாழ்வில் நடைமுறைக்குக் கொண்டுவந்து இருக்கிறேனா என்பது இன்றுவரை ஐயமாகவே இருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் இல்லை என்றே சொல்லலாம். ஆகவே, நான் எனக்காகவே திருக்குறளை இப்பொழுது தான் படிக்க ஆரம்பித்திருக்கிறேன். இனிமேல்தான் அதை வாழ்வில் நடைமுறைப் படுத்தவேண்டும்’’ என்றேன்.

எதிரே இருந்த பெரியவர் என் பேச்சை முழுமையும் கேட்டு விட்டு ஆழ்ந்த அமைதியில் மூழ்கினார். ‘‘நான் சொல்வது சரிதானே?’’ என்று அவரைக் கேட்டேன். ‘‘நீங்கள் சொல்வதன் முழு அர்த்தமும் இப்போது தான் புரிகிறது. திருக்குறளைப் பிற காரணங்களுக்காகப் படிப்பதும், பேசுவதும் அர்த்தமற்றது. ஒவ்வொருவரும் திருக்குறளை வாழ்வியல் நூலாக ஏற்றுக் கொண்டு நம்மால் முடிந்த அளவுக்குப் பின்பற்றி வாழ்வதே நல்லது’’ என்றார்.

எங்கள் பேச்சு மேலும் வளர்ந்தது. தொடர்ந்து, ''திருக்குறளைப் போல் எளிய நூலும் வேறில்லை. அதைப்போல் உணர்தற்கு அரிய நூலும் வேறில்லை'' என்றார். அவர் சொன்ன கருத்தை விளக்கும் வகையில் நான் ஒரு குறளை உதாரணமாகக் காட்டினேன். பல ஆண்டுகள் மாணவர்களிடையே பேசிப் பேசிக் காலம் கழித்த ஒருவர், காது கொடுத்துக் கேட்க ஓரிருவர் கிடைத்துவிட்டால் சும்மா இருப்பாரா? நான் சொல்ல வந்த கருத்துக்களை அப்பெரியவர் மட்டுமன்றி எதிர் இருக்கையிலிருந்த வேறு சிலரும் ஆர்வமாகக் கேட்பது போல் தெரிந்தது.

திருக்குறளில் ''இன்னா செய்யாமை'' என்னும் அதிகாரத்தில் ஒரு குறள், எல்லாரும் அறிந்த ஒன்றுதான். அது:

> இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
> நன்னயம் செய்து விடல்.

இத்திருக்குறளை நானே பலமுறை மேற்கோள் காட்டியிருக்கிறேன். மாணவர்களுக்குப் பாடமாகவும் நடத்தியிருக்கிறேன்.

''தீமை செய்தவரைத் தண்டிப்பதற்குரிய இனிய வழி, தீமை செய்தவர் வெட்கப்படும் படியாக நன்மை செய்து, ''அதனைச் செய்தேன் என்பதையும் அடியோடு மறந்து விடுதலாகும்'' என்பது தான் இதன் பொருள். இக்குறளில் இடம் பெறும் எல்லாச் சொற்களுமே பொருள் புரியக்கூடிய எளிய சொற்கள் தாம். ஒறுத்தல் என்பது சிலருக்கு விளங்காமல் இருக்கலாம். தண்டித்தல் என்று சொன்னால் புரியும். இக்குறளில் நம்மைச் சிந்திக்க வைக்கிற தொடர் ''நன்னயம்'' என்பதே ஆகும். ''நல்ல செயல்களைச் செய்து நன்மையே செய்து'' என்று எளிதாகப் பொருள் சொல்லிவிடலாம். ஒரு முறை வகுப்பில் பாடம் நடத்தும் போது ஒரு மாணவர் எழுந்து நின்று, ''ஐயா, வள்ளுவர் சொல்லுகிற நன்னயம் என்பதன் பொருளைக் கொஞ்சம் விரிவாகச் சொல்லுங்கள்'' என்றார். அச்சொல்லை நான் அதுவரை ஆழ்ந்து சிந்தித்ததில்லை. வெறுமனே ''நன்மைகளைச் செய்து'' என்று விளக்கம் சொல்லி ஒப்பேற்றி விட்டேன். என்றாலும் ''நன்னயம்'' என்பதன் உண்மைப் பொருளை அறியவேண்டும் என்னும் அவா என்னுள் இருந்து கொண்டே இருந்தது.

பல உரை நூல்களைத் தேடிப் பார்த்தேன். விளக்கம் கிடைக்கவில்லை. பரிமேலழகர் ''இனிய உவகைகள்'' என்னும் அளவிலேயே பொருள் சொல்லிப் போகிறார். பிறகு பல காலம் வரை ''நன்னயம்'' என் நினைவிலிருந்தே நழுவிவிட்டது, முழுமையாக மறந்து போனேன். ஒருமுறை வ.உ.சிதம்பரனாரின் திருக்குறள் உரையைக் காண நேர்ந்த போது அக்குறளுக்குரிய பொருளைத் தேடிப் பார்த்தேன். ''நயம் தரும் செயல்களை நயம் என்றார்'' என்று சொல்லி முடித்துக் கொண்டார். பரிமேலழகரின் உரைக்கு உரைகண்டவர் வை.மு.கோ. அவர் ''உவகைகள் சந்தோஷகரமான செயல்கள்'' என்னும் அளவிலேயே விளக்கம் எழுதியிருந்தார். ''நயம் - நன்மை, நல்லனவற்றிற்குப் பண்பாகு பெயர்'' என்று இலக்கணக் குறிப்பும் கொடுத்திருந்தார். நாள்கள் கடந்தன.

நன்னயம் என்னுள் உறுத்திக் கொண்டே இருந்தது. ஒரு நாள் தற்செயலாக ''ஸ்ரீ வசன பூஷணம்'' என்னும் வைணவத் தத்துவ நூலை மேலெழுந்தவாரியாகப் புரட்டிய போது, மேலே சொல்லிய குறளையும் அதன் பொருளையும் ''நன்னயம்'' என்பதன் விளக்கத்தையும் எதிர்பாராத நிலையில் காண நேர்ந்தது. தண்ணீர்த் தொட்டியில் மூழ்கிக் குளித்துக் கொண்டிருந்த

ஆர்க்கிமிடீஸ் என்னும் விஞ்ஞானி திடீரென்று எழுந்து "யுரேகா, யுரேகா" என்று கத்திக் கொண்டே ஓடியதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஸ்ரீ வசன பூஷண வரிகளைப் படித்தபோது "கண்டு கொண்டேன், கண்டு கொண்டேன்" என்று கத்திக்கொண்டே தெருவில் ஓட வேண்டும் போன்ற உணர்வு எனக்குள் ஏற்பட்டது. தேடியது கிடைத்து விட்டது என்று சொல்லி சற்றே நிறுத்தினேன். எதிரே இருந்த பெரியவர் "அது தான் இறையருள் என்பது. யார் யார் எதை எதை விரும்பித் தேடுகிறார்களோ அது கிடைக்காமல் போகாது" என்றார். தொடர்ந்து "நீங்கள் தற்செயலாகக் கண்டு பிடித்ததைச் சொல்லுங்கள்" என்றார்.

நான் நிமிர்ந்து உட்கார்ந்தபடி சொல்லத் தொடங்கினேன். "நாம் தீமை எதுவும் செய்யாதிருக்கும் நிலையில் நமக்குத் தீங்கு செய்வோரைத் தண்டிப்பதற்குரிய வழிகள் ஐந்து என்று கூறுகிறார் ஸ்ரீ வசன பூஷண ஆசிரியர். பொறுமை, இரக்கம், சிரிப்பு, உவப்பு, நன்றியுணர்வு என்பனவே அவை. "குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும், கிருபையும், சிரிப்பும், உவப்பும், உபகார ஸ்மிருதியும் நடக்க வேணும்" என்கிறார் அவர். பொறுமை என்பது அறியாமை காரணமாகவோ, செருக்கின் காரணமாகவோ, ஒருவன் நமக்குத் தீமை செய்கிற போது நாமும் சரிக்குச் சரியாக நின்று வரிந்துகட்டிக்கொண்டு தீமை செய்யாதிருப்பதேயாகும். தன்னை மண்வெட்டியால் அகழ்கிறவர்களையும் இந்த நிலம் வெறுக்காமல் தாங்கிக் கொண்டு நிற்பது போல் நாம் அமைதியாக இருப்பதே பொறுமையாகும்."

"பொறுமை என்பது எல்லாருக்கும் புரியும். தீமை செய்கிறவனிடம் எப்படி இரக்கம் காட்டுவது? அதைச் சொல்லுங்கள்" என்றார் எதிரே இருந்த மற்றொரு இளைஞர். "சொல்கிறேன். நாம் தீங்கு செய்யாத நிலையிலும் நமக்கொருவன் தீங்கு செய்தால் இவன் நம்மை வலிய வம்புக்கு இழுக்கிறானே, நாம் இவனை மறந்து மன்னித்தாலும், கடவுள் இவனை மன்னிக்க மாட்டாரே, இவனும் இவன் குடும்பமும் கடவுளின் கோபத்திற்கு ஆளாகி, பின் நாள்களில் துன்பப் படுமே என்றெண்ணி அவனுக்காக இரக்கம் காட்ட வேண்டும். இதுதான் இரக்கம்" என்றேன். "பொறுமை காட்டலாம். இரக்கம் கொள்ளலாம். அதெல்லாம் சரி, அவனைப் பார்த்துச் சிரிக்க முடியுமா?" என்று முன்னே கேள்வி கேட்ட அதே இளைஞர் திரும்பவும் கேட்டார்.

"எதிரி நம்மை அடிக்க வருகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் நம்மை அடிக்கலாம். தடி கொண்டு தாக்கலாம். கத்தியை வீசிக் கொல்ல முயலலாம். அப்போது நாம் என்ன நினைக்க வேண்டும்? நான் என்பது அழியாத ஆத்மா அல்லவா? உடல்தானே அழியும்? அழியக் கூடிய இந்த உடம்பையே தன் எதிரியாகப் பாவித்து இவன் நம்மைத் தாக்க வருகிறானே, இது எவ்வளவு அறியாமை என்று எண்ணி அவனைப் பார்த்து உள்ளூரச் சிரிக்க வேண்டும். இதுவே சிரித்தல்."

"பேஷ் பேஷ்" என்றார் பெரியவர். "கடைசியாகச் சொன்ன உவப்பு, நன்றியுணர்வு, இரண்டையும் விட்டு விடாமல் சொல்லுங்கள்" என்றார். "இவன் நம் உடம்பைத் தானே வெட்ட வருகிறான்? நாமோ இந்த உடலால் வாழும் வாழ்க்கை தேவையற்றது என்று முன்னரே முடிவுக்கு வந்து விட்டோம். உடலோடு கூடிய வாழ்க்கையைத் துறந்து இறைவனை அடைய நினைக்கிறோம். அந்த நல்ல முயற்சி மிகவிரைவாக நிறைவேற இவன் வழிவகுக்கிறான் என்று நினைத்து நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும். அது தான் உவப்பு. மேலும், தாக்கவரும் நம் பகைவனிடத்திலும் நாம் நன்றி பாராட்ட வேண்டும். அது தான் உயர்ந்த பண்பு. அதனைத்தான்

பிள்ளை லோகாச்சாரியார் என்னும் ஸ்ரீவசன பூஷண ஆசிரியர் ‘‘உபகார ஸ்மிருதி’’ என்று சொல்லுகிறார்.

நம்மிடத்தில் உள்ள நிறைகள்தாம் நமக்குத் தெரியும். பகைவர்களுக்குத்தான் உண்மையான குறைகள் தெரியும். இவன் நம்மைப் பற்றிய குற்றங்களைப் பட்டியலிட்டுப் பலரிடத்தும் எடுத்துச் சொல்லி, பழிதூற்றித் திரிகிறான். அவன் சொல்வதிலும் ஒன்றிரண்டு உண்மைகள் இருக்கலாம் அல்லவா? நம்மை நாமே சரிபார்த்துக் கொள்ள, தவறுகள் இருந்தால் திருத்திக் கொள்ள இவன் உதவியல்லவா செய்கிறான்? ‘‘இது நண்பர்கள் கூடச் செய்யாத உதவியாயிற்றே!’’ என்று நினைத்து நன்றியுணர்ச்சியோடு அவனை நெஞ்சாரப் போற்ற வேண்டும். பிள்ளைலோகாச்சாரியார் நன்னயம் என்பதற்குச் சொல்லும் விளக்கம் இப்போது புரிகிறதா?’’ என்றேன்.

பெரியவர் சொன்னார், ‘‘பரிமேலழகர், விளக்காமல் போனதை இவர் விளக்கிச் சொல்லிவிட்டார்’’ என்றார், பெரியவர் அந்தச் செய்தியை நிறையவும் ரசித்து ரசித்து ‘‘பலே, பேஷ்’’ என்று பல முறை சொல்லிக்கொண்டார். ‘‘இந்த ஒரு திருக்குறளையாவது நான் பின் பற்ற நினைக்கிறேன். பொறுமையாக இருக்க முடிகிறது. அதுவும் கூட ஓரளவுக்குத்தான். இந்தப் படியைக் கடந்த பிறகல்லவா மற்றைய படிகளுக்குச் செல்ல வேண்டும்? பின்பற்றி வாழ முடியாமல் பிறரிடத்தில் வாய்ப்பந்தல் போடுவதற்காக ஏன் படிக்க வேண்டும்? அந்தப் படிப்பால் என்ன பயன்?’’ என்றேன். ‘‘ஆமாம், ஆமாம் உலகில் பலபேர் இப்படித்தான் இருக்கிறார்கள்.’’ என்றார்.

ரயில் விழுப்புரத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. நான் சொன்னேன், ‘‘ஐயா, தாங்களோ வணிகர். எதிலும் லாப நஷ்டம் பார்ப்பவர். காலத்தையும் பணமாகக் கருதக் கூடிய வணிகர். தாங்கள் இவ்வளவு நேரம் நான் சொன்னதை ரசித்துக் கேட்டீர்கள். நீங்கள் தான் உண்மையில் இலக்கிய ரசிகர்,’’ என்றேன் அவரிடம். அவர் சொன்னார், ‘‘உங்களோடு பேசியதில் எனக்கு லாபம் தான். தெரியாத ஒன்றைத் தெரிந்து கொண்டேனல்லவா?’’ ‘‘இக்கால இலக்கியவாதிகள் தாங்கள் கற்றதைக்-கொள்முதல் செய்ததை-எந்த ஊரில், எந்த இலக்கியச் சந்தையில் விற்கலாம் என்பதிலேயே குறியாக இருக்கிறார்கள்’’ என்றார் என்னோடு பேசிவந்த இன்னொருவர்.

பெரியவர் சொன்னார், ‘‘தம்பி அதிலேயும் தவறில்லையப்பா. வணிகர்களின் வாழ்க்கை வெறும் லாபநட்டக் கணக்குப் பார்ப்பதோடு நின்று விடுவதில்லை. அவர்களுக்கும் இலக்கியம் தேவைப்படுகிறது. வழிநடந்து களைத்துப் போனவன் வெயில் நேரத்தில் மரநிழலில் தலைசாய்த்துப் படுப்பது போல அவர்கள் இலக்கியத்தின் பக்கம் வருகிறார்கள். இலக்கிய வாதிகளோ படைப்பதிலும் படிப்பதிலும் இன்பம் காண்கிறார்கள். படைப்பதும் படிப்பதும் மட்டுமா வாழ்க்கை? அவர்களுக்கு ஓரளவு நிறைவாக வாழப் பணமும் தேவையல்லவா? அந்த நிலையில் இலக்கியவாதிகள்-படிப்பாளிகள்-பொருள் தேடுவதற்காகச் சற்று மாறுகிறார்கள். இதைத் தவறென்று எப்படிச் சொல்லமுடியும்? இன்றைய காலப் போக்கில் இவையெல்லாம் தவிர்க்கவியலாத நியதிகள்’’ என்றார். ரயில் விழுப்புரம் ரயில் நிலையத்தில் நின்றது. பெரியவர் இறங்கத் தயாரானார். ‘‘வரட்டுமா? வாய்ப்பிருந்தால் இன்னொரு முறை மீண்டும் சந்திப்போம்’’ என்று சொல்லி விட்டு என்னைப் பார்த்துக் கைகூப்பினார்.

நான் மிகப் பெரிய கருத்தை எளிதில் விளக்கி விட்டதாக நினைத்து எனக்குள் பெருமைப் பட்டுக்கொண்டேன். இவரோ போகிற போக்கில் மிக அரிய உண்மை ஒன்றை இரண்டொரு

*வாக்கியங்களில் உதிர்த்து விட்டுத் திருக்குறள் போலவே தம் பேச்சைச் சுருக்கிக் கொண்டார். நான் அவருக்கு எழுந்து நின்று விடை கொடுத்தேன். நான் அவரைப் பார்த்து வியந்தபடி நின்றேன். "நன்னயம்" என்னும் திருக்குறள் தொடரோடு, அந்தத் திருக்கோவிலூர் பக்கத்து வணிகரும் என்முன் விசுவரூபம் எடுத்து நின்றார்.*

**முனைவர் எழில்முதல்வன் (மா.ராமலிங்கம்)** *மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்,திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் 1981ன் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றவர்*

# 3. இறையருள்

*முனைவர். கோ. வல்லரசி*

*உலகப் பொது மறையாகிய திருக்குறளை விரும்பாதவர் இவ்வுலகில் இருக்க முடியாது. மனிதன் எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக் கூடாது, என்பதோடு குறள்வழி நடந்தால் உடலுக்கும் மனத்திற்கும் என்னென்ன பயன் கிடைக்கும் என்பதைத் தெளிவாக விளக்குகின்றது. இம்மை, மறுமை என்ற இருமைப் பயனையும் விளக்கும் ஒரே நூல் திருக்குறள். மனித வள மேன்மைக்கு அச்சாணியாக இருப்பது இறை நம்பிக்கை. இறைவனது அருளின்றி ஓர் அணுவும் அசையாது அத்தகு இறையாற்றலை வள்ளுவர் வழி நின்று காண்போம் இறையருள் என்ற தலைப்பு இதனை விளக்கும்,*

*கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழார் எனின்*

*கற்றவருக்குக் கல்வியால் பெறும் பயன் யாதெனின் மெய்யறிவுடைய இறைவனின் திருப்பாதங்களைப் பணிந்து வணங்குவதாகும். கல்வி கற்பதால் அறிவு வளரும், கல்வி நூலறிவை மட்டுமே நல்கும். அந்நூலறிவைப் பயன்படுத்தி இறைவனை வணங்குவதால் பெறுவது வாலறிவு, அதாவது மெய்யறிவு.*

*பெற்றிகொள் பிறை நூதலீர் உமைப்பேணுதல்*
*கற்றறிவோர்கள் தம்கடனே*

*என்கிறார் சம்பந்தர்(1).*

*கற்றாங்கு அவன் கழல் பேணினம் என்பார் மணிவாசகர்(2).*

*செய்யுள் நிகழ் சொற்றெழிவும் செல்வியநூல் பலநோக்கும்*
*மெய்யுணர்வின் பயனிதுவே எனத் துணிந்து விளங்கி ஏனில்*
*மையணியும் கண்டத்தான் மலரடிக்கே ஆளானார்*
*மெய்யடிமை யில்லாத புலவரெனப் புகழ் மிக்கவர்*
*என்கிறது பெரியபுராணம்(3).*

*நூலறிவு என்பது கற்பதால் வரும் மெய்யறிவு, அனுபவித்தால் வரும் கற்றலின் அனுபவப் பயன்தான் மெய்யறிவு, இந்த அனுபவம் பயனைத் தரும் இறைவனிடம் கண்ணதாசன் கேட்ட கேள்விக்கு,*

*"அனுபவித்தே தான் அறிவது வாழ்வெனில்*
*ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்*
*அந்த ஆண்டவன் தானும் சற்று அருகே வந்து*
*அனுபவம் என்பதே நான் தான் என்றான்"*

என்று பதில் கூறுவதாகக் கவிஞர் கூறுகிறார்(4). ஒவ்வொரு செயலிலும், பேச்சிலும் அனுபவம் கற்றுத்தரும் பாடம் தான் மனிதனை வழி நடத்துகிறது. இன்பம் துன்பம் இரண்டிற்கும் அனுபவமே காரணம்.

நான் என்ற அகந்தை உள்ளவனால் சிறந்த மனிதனாக முடியாது. அகந்தையை அகற்ற என்னால் ஆவதொன்றும் இல்லை. எல்லாம் இறைவன் செயல் என்ற உள்ளுணர்வு எப்போதும் வேண்டும். அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்க வேண்டும் என்பார் குமரகுருபரர்(5).

அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பது சைவமறை.

பணிவு, அன்பு, இரக்கம் உடையவராக இருப்பவரே உண்மை கிறித்துவர்.

மற்றையோர் தம்மைக் கிறித்துவர் என்று கூறிக் கொள்வது 'செத்தாரைத் துஞ்சினார்' எனப்போன்றது என்கிறார் கிருஷ்ணப்பபிள்ளை(6).

பாணபத்திரருக்காக இறைவனே விறகு வெட்டியாக வந்து ஏமநாதனின் புலமைக் கர்வத்தை அடக்கினார். பாணபத்திரரின் மெய்யறிவு இறைவனையே உருகச் செய்தது. ஏமநாதனின் ஆணவ அறிவு அவமானத்தால் தோற்றது(7).

மருத்துவராயினும், விஞ்ஞானியாயினும், ஆசிரியர்களாயினும், தொழிலாளர்கள் என்று எவரேயாயினும் இறைவனைத் தொழுதால் மட்டுமே அவர் கற்ற கல்வியின் பயனைப் பெறுவர். நூலறிவு மெய்யறிவை உணரத்துணை நிற்க வேண்டும் . இதை உணர்த்த எழுதப்பட்டது தான் பகவத்கீதை

'தாழ்மையுள்ளவன் பாக்கியவான்
தாழ்ச்சியுள்ளவன் உயர்ச்சி பெறுவான்'

என்கிற புனித விவிலியம் (8).

திருக்குரானும் இறைபாதத்தைப் பணிதலின் சிறப்பை வலியுறுத்துகிறது. மதம், மொழிகளைக் கடந்து நிற்கும் வள்ளுவ மறை கூறும் தத்துவமும் இதுவே.

பெற்றோரைப் பேணல், பெரியோரை மதித்தல், பணிவு, சொல்லில் இனிமை, செயலில் கனிவு, பொறுமை, இரக்கம், அன்பு இவை அனைத்தும் கற்றவரின் இயல்பு இதனால் இவர் பெறும் பயன் இறையருள்.

இறைவனைத் தொழுது வாழ்பவர்களை இம்மைவினை மறுமை வினை என்ற இருவினைகளும் தொடராது என்பதை

'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு'

என்று கூறுகிறார் தெய்வப்புலவர். கடவுளின் உண்மைப் புகழை விரும்பி அன்பு செலுத்துகின்றவர்களிடம் அறியாமையால் விளையும் இருவகை வினைகளும் சேராது என்பது குறள் தரும் கருத்து.

இறைவன் அறிவே, வடிவமாய் அருளே இயல்பாய் எங்கும் கலந்து எல்லாவற்றையும் இயக்குபவன். அவனது புகழைப் பாடிப் பரவுதலே அவனைப்

பெறத்தக்க எளிய வழியாகும். உள்ளத்தால் உண்மையாக ஆழமாக அவனை நினைத்தல் வேண்டும்.

நமக்கு உண்டாகும் துன்பம் நாம் செய்த பாவச் செயல்களின் பக்குவப்பட்ட நிலை, துன்ப அனுபவத்தின் ஆழமான உள்ளப் பதிவுதான் கவலை. துன்பமும் கவலையும் கொஞ்சம் முன்னும் பின்னுமாகத் தோன்றி நம்மை அழித்துக் கொண்டிருப்பன. இவை இரண்டும் நமது அறியாமையால் நாமே தேடிக் கொள்பவை. துன்பத்திற்குக் காரணம் வினை; வினைக்குக் காரணம் அறியாமை. குழந்தை விளையாடும் பொழுது மண்ணை அள்ளிக் கண்ணில் கொட்டிக் கொள்கிறது. பின் அது அழுவதற்குக் காரணம் அறியாமை. அதைப் போன்றுதான் நாம் படும் துன்பங்களும்.

இதைப் போக்கும் ஓர் உபாயம் இறைவனது பொருள்சேர் புகழைச் சொல்லுதலும் சிந்திப்பதுமாகும். முழுமனதுடன் இதனைச் செய்தால் இருள்சேர் இருவினையும் நம்மை அணுகாது. இறைவன் எங்கும் உயர்வு தாழ்வின்றி தங்குபவன்.

"மண்குடிசை வாசலென்றால்
தென்றல்வர வெறுத்திடுமா?
மாலைநிலா ஏழையென்றால்
வெளிச்சம்தர மறுத்திடுமா?
உனக்காக ஒன்று எனக்காக ஒன்று
ஒரு போதும் தெய்வம் கொடுத்ததில்லை!"

என்ற கவிஞர் வாலியின் பாடல்(9) இறைத் தன்மையை உணர்த்துகின்றது. இறைவனைப் போற்றும் முறை வெறும் சடங்கு முறையல்ல. முக்கரணங்களும் மனம், மெய், மொழி ஒன்றுபட்டு ஒன்றியிருந்து நினைப்பது. இந்த உண்மையான மாற்றமில்லாத உணர்ச்சியே உண்மைக்கடவுள். சென்ற பிறவி, இப் பிறவி என்ற இரு பிறவிகளால் அடையப் போகும் துன்பமும் இறைவனைத் தொழுவதால் நீங்கும், தொடராது இறை புகழைப் பேசி அடைந்த இன்பத்தை, பயனை மற்றவருக்கும் எடுத்துரைக்க வேண்டும்.

நிறைந்த செல்வமுடையோரை உலகோர் புகழ்வர் அது செயற்கை இன்பம், இயற்கை இன்பமாவது உயிருக்கு உறுதி தரக் கூடிய புகழைப் பாடுவது ஒன்றேயாகும்.

"பெருமை பெறும் நினது புகழ்
பேச வேண்டும்"

என்பார் வள்ளலார் (10).

"திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துருகக் கண்கள்
தொடுமறை கேணியின் சுரந்து நீர் பாய
அன்ப ராகுந நன்றி
மன்பதை உலகில் மற்றைய நிலரே"

என்பதும் வள்ளலாரின் வாக்கே(11). இப்பாடல்கள் இறைவனைப் புகழ்வதால் உண்டாகும் நன்மையைப் பெருமையைக் கூறுகின்றன.

"ஆயபுகழ் ஏத்துமடி யார்கள் வினையா
யினவும் அகல்வதெளிதே"

என்ற சம்பந்தர்(12) வாக்கும் இதனை மெய்ப்பிக்கின்றது.

மனம், வாக்கு, காயங்களின் தொழில்கள் நல்லன ஆயின் நல்வினையும், தீயனவாயின் தீவினைகளும் உண்டாகும், என்பது வள்ளுவர் மறை கூறும் உட்கருத்து. இறைவனது

உண்மையான புகழை விரும்பிப் பேணும் வித்தகரிடத்தில் மெய்ய வினைகள் இரண்டும் அணுகாது.

இருவினையும் மனிதரைத் தொடரக் கூடாதெனில், ஒழிய வேண்டுமாயின் ஆரா அன்போடு இறைவனை நினைத்து மனம் உருக வேண்டும் அவ்வுருக்கம் நிலையான உய்தியைத் தரும்.

*Five to the world the best you have and the best will come back to you.*
என்ற ஆங்கில பழமொழியிற்கேற்பவும்
'வாழச் செய்த நல்வினை அல்லது
ஆழுங்காலைப் புணை பிறிதில்லை (புறம்)
என்ற ஔவையின் வாக்கிற்கேற்பவும் நலம் பெறுபவர்.

திருக்குறளின் பொருளை உணர்ந்து செயல்படுவோர் வாழ்க்கை குன்றின் மேலிட்ட விளக்காய் ஒளிரும்.

சான்றுகள்:
1. திருஞான சம்பந்தர், கீழைத்திருக்காட்டுப் பள்ளி, திருவெண்ணெய் நல்லூர் - 6
2. மாணிக்கவாசகர், திருவாசகம் 508
3. சேக்கிழார், பெரியபுராணம், பொய்யடிமை
4. கண்ணதாசன், கண்ணதாசன் கவிதைகள்
5. குமரகுருபரர், மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்
6. எச்.ஏ. கிருஷ்ணப்பபிள்ளை, இரட்சண்ய யாத்திரிகம்
7. சேக்கிழார், பெரியபுராணம், விறகு விற்ற படலம்
8. சங்கீதம், பைபிள்
9. வாலி, திரையிசைப்பாடல், படம் படகோட்டி
10. இராமலிங்க அடிகள், திருவருட்பா நான்காம் திருமுறை ஆளுடை அருள்மாலை.
11. இராமலிங்க அடிகள், திருவருட்பா நான்காம் திருமுறை ஆளுடை அருள்மாலை.
12. திருஞான சம்பந்தர், மா இறல் — 9

முனைவர். கோ. வல்லரசி, எம்.ஏ., எம். ஃபில், பி.எச்.டி., மேனாள் பேராசிரியர் / தொடர்பு அலுவலர் தொலைதூரக் கல்வி இயக்ககம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

# 4. வள்ளுவம் ஓர் வாழ்வியல் வழிகாட்டி

*ச. பராக்கிரம பாண்டியன்*

*திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளில் தோன்றிய மாபெரும் சிந்தனையாளர்களில் ஒருவர். வள்ளுவரின் சிந்தனை ககனம் போன்று எல்லையற்று பரந்து விரிந்தது. பன்னெடுங்காலமாக குமுகத்தில் நிலவிய பல மூடப்பழக்க வழக்கங்களைத் தனது அறிவுத்தீயால் தீக்கிரையாக்கியவர். அவர் வீசியெறிந்த தீக்கங்குகள் இன்னும் கனன்று கொண்டுதான் இருக்கிறது அறமற்ற செயல்களைச் சுட்டெரிப்பதற்கு!*

*எப்போதும் வாய்மையைக் கைக்கொள்! எல்லா உயிர்களிடத்தும் அன்பு செய்! காலம் கருதிச் செயல்படு! அறிவை விரிவுசெய்! அறத்தின் வழியில் பொருள் தேடு! ஈதல் செய்! இன்பத்தைப் பெறு! பொய் சொல்லாதே! புலால் உண்ணாதே! கள்ளுண்ணாதே! களவு செய்யாதே! வஞ்சம் கொள்ளாதே! பொய்மை பேசாதே! தீயவர் உறவை மேற்கொள்ளாதே! பெரியோரைத் துணை கொள்! ஆராயாமல் நட்பு கொள்ளாதே! பிறன்மனை விழையாதே! வரைவின் மகளிர் உறவு கொள்ளாதே! இவைதான் வள்ளுவர் குறிப்பிடுகிற மிக முதன்மையான கொள்கைகளில் சில.*

*இக்கொள்கைகள் யாவும் ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கோ, இனத்திற்கோ, மொழிக்கோ, மனிதனுக்கோ என்று அவர் படைக்கவில்லை. ஒட்டுமொத்த மானுட சமூகத்திற்கும் அறநெறியோடு வழிகாட்ட வேண்டும் என்ற உந்துதலோடும், மேலுயுயர்ந்த சிந்தனையோடும் எழுத்தாணி கைக்கொண்டு இறவாப் பேறு பெற்ற உலகப்பொதுமறை என்ற இலக்கியத்தை இவ்வுலகிற்கு வழங்கியுள்ளார்.*

*மழலையர் தொடங்கி நாட்டை ஆட்சி செய்யும் மன்னன் வரைக்கும் அறநெறி சார்ந்து எப்படி வாழவேண்டும்? எப்படி வாழக் கூடாது? என்று ஒரு வழிகாட்டியாக நம்மை கைகூட்டி அழைத்துச் செல்கிறார் தெய்வப்புலவர். இந்த வையம் முழுவதும் பரவி வாழ்கிற மானுட சமூகம் ஏன் வள்ளுவரை வாழ்வியல் வழிகாட்டியாக மேற்கொள்ள வேண்டும் என்ற உந்துதலே இந்த கட்டுரையின் தோற்றுவாய்.*

**பகுத்தறிவு:**

*உலகில் தோன்றிய உயிர்களிலேயே பகுத்தறியும் திறன் கொண்ட ஒரே இனம் மனித இனம் மட்டுமே. எதுவொன்றையும் பகுத்தறியாமல் அப்படியே ஏற்றுக்கொள்வதும், ஒரு பணியைப் பிறரிடம் ஒப்படைப்பதும் மனித இயல்புகளுக்கு முற்றிலும் முரணானது என்பதை வள்ளுவர் உணர்ந்ததால் தான் 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்று சொல்கிறார்.*

**அறநெறி:**

*நிலையற்ற வாழ்க்கையை நிலைபேறுடையதாக மாற்றும் வல்லமை கொண்ட ஒரு கருவி தான் அறம். அறம் என்பது தர்மம் செய்வதோடு முடிந்து போகிற ஒரு விடயமல்ல. வள்ளுவர் காட்டுகிற அறம் என்பது பொறாமை, ஆசை, சினம் மற்றும் கடுஞ்சொல் இந்நான்கு செயல்களையும் தவிர்த்து வருவதே அறம் என்கிறார். அந்த அறத்தின் வாயிலாக வரக்கூடிய சிறப்பு எத்தகையது என்பதை 'சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு' என்ற தமிழ்மறை மூலம் நமக்கு உணர்த்துகிறார். இதையே ஔவையாரின் ஆத்திச்சூடியும் 'அறம் செய விரும்பு' என்று வழிமொழிகிறது. நான்முகனார் காட்டுகிற அறத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்கிறவர்கள் தம் வாழும் காலத்திலேயே தெய்வநிலையை எய்துவர் என்பதை, 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற*

பொதுமறை மூலம் நமக்கு உணர்த்துகிறார். எது தலையாய அறம்? 'வாய்மையும்' 'பல்லுயிர் ஓம்புதலுமே' ஒருவன் தன் வாழ்நாளில் மேற்கொள்ள வேண்டிய தலையாய அறம் என்று பொய்யாமொழியில் குறிப்பிடுகிறார்.

**ஈதலின் பெருமை:**

'செல்வத்துப் பயனே ஈதல்' என்று புறநானூறு பேசுகிறது. வறியவர்களுக்கு உதவுவது என்பது இறைவனுக்கே தொண்டு செய்வதற்குச் சமம். வறியவர்களுக்குக் கொடுத்து உதவுவது ஒன்றே பேரின்பத்திற்கான திறவுகோல். தன்னை நாடி இரந்து வருகிறவர்களிடம் எதையும் எதிர்பாராமல் உதவி புரிய வேண்டும் என்பதை, 'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம் குறியெதிர்ப்பை நீர துடைத்து' என்கிறார். ஈதல் செய்வதால் என்ன பயன்? 'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு' என்ற வாயுறை வாழ்த்து மூலம் ஈதலின் மேன்மையையும் அதனால் வாழ்வில் உண்டாகும் பயனையும் பறைசாற்றுகிறார்.

**இல்லற வாழ்வியல்:**

இல்லற வாழ்வு என்பது இன்பத்திற்கானது மட்டுமன்று. அன்பு செய்வதும், அறம் தழைக்க உதவுவதும், விருந்தினர் மனம் நோகாமல் விருந்தோம்புவதும் தான் இல்லற வாழ்வின் அடிப்படை நற்பண்புகள். அறமின்றி தீய நிலையில் இருப்பின் அது இல்லறமாகாது. 'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை' என்ற முப்பால் காட்டுகிற வழியில் மானுட சமூகம் சென்றிருந்தால் இன்றைக்கு முதியோர் இல்லமே இல்லாத சூழல் உருவாகியிருக்கும்.

**விருந்தோம்பல்:**

புதியவர்களுக்கு உணவு அளித்தலே விருந்தோம்பல் ஆகும். கிடைத்தற்கரிய அமிழ்தமே ஆனாலும் தமிழர்கள் அதைத் தாம் மட்டுமே உண்ணாமல் பலருக்கும் கொடுத்து மகிழும் குணம் உடையவர்கள். அத்தகைய, விருந்தோம்பல் குறித்து 'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து' என்று குறிப்பிடுகிறார். தம்மை நாடி வரும் விருந்தினர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற முறையை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லிச் சென்றவர் நாயனார்.

**ஒழுக்கம்:**

ஒழுக்கம் என்பது இல்லையேல் இவ்வுலகம் பாழ்பட்டுப் போய்விடும் என்பதை முற்றும் தெளிந்து உணர்ந்ததால் தான் 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார். சங்ககாலப் பண்பாடு பரத்தமையின் செயல்பாடுகளைக் கண்டித்ததாக எங்கும் குறிப்பில்லை. நீண்ட நெடுங்காலமாக சமூகத்தில் புரையோடிப் போயிருந்த அத்தீய ஒழுக்கத்திற்கு எதிராக, 'பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில் ஏதில் பிணந்தழீஇ அற்று' என்று சாடுகிறார். மேலும், விலைமாதரைச் சென்றடைகிறவர்கள் கீழ்மக்கள் என்றும், அவ்வுறவு நரகத்தை ஒத்தது என்றும் கூறுகிறார். ஆயிரம் போர்க்களத்தில் வெற்றிக்கொடி நாட்டுகிறவனை விடப் பிறன்மனை நோக்காதவனே பேராண்மை கொண்டவன் என்று சொல்கிறார். சுய ஒழுக்கம் இல்லையேல் சர்வமும் நாசத்தில் முடியும் என்பதை நான்முகனாரைப் போன்று எச்சரிக்கை செய்த புலவர் எவருமில்லை.

**வாய்மை கைக்கொள்:**

வாய்மை என்பது ஓர் உயர்ந்த அறநெறி. வாய்மை ஒருபோதும் மாறுவதில்லை. தீமையற்ற இன்சொற்கள் யாவும் வாய்மையே என்கிறார் வள்ளுவர், 'வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்' என்று வரையறை செய்வதோடு நின்றுவிடாமல் சில நேரங்களில், பொய்மை கூட நன்மை பயக்குமெனில் அப்பொய்மையும் வாய்மையே என்பதை

'பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்' என்று கூறுகிறார். இவ்வுலகில் வாய்மையை விடச் சிறந்தது எதுவுமில்லை. செந்நாப்போதார் சுட்டுகிற வழியில் வாய்மையைக் கடைபிடித்தால் இம்மண்ணுலகே நல்லுலகாக மாறும்.

**சமூக ஏற்றத்தாழ்வு:**

சாதி, மதம், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற எந்தப் பாகுபாடுமின்றி மனிதனை மனிதனாகவே பார்த்தவர் தெய்வப்புலவர். 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற கணியன் பூங்குன்றன் வழிவந்த சமத்துவ புலவர் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான் என்று சமூகப் பாகுபாடுகளுக்கு எதிராகச் சாட்டை வீசுகிறார். ஆனால், இன்றைக்கு நாம் சாதியால் பிளவுபட்டு தரம் தாழ்ந்த சமூகமாக மாறிக்கொண்டே இருக்கிறோம் என்றால் வள்ளுவரைக் கற்றும் என்ன பயன்? பிறப்பால் ஏற்றத்தாழ்வு நிலவிய சமூகத்தில் கல்வி தான் ஒரு மனிதனின் உயர்வு, தாழ்வை நிர்ணயிக்கும் என்பதை 'மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்பிறந்தும் கற்றார் அனைத்திலர் பாடு' என்று கல்வியின் மேன்மையைக் கூறுகிறார் பொய்யாமொழிப் புலவர்.

**மரபுகளை உடைத்தெறிதல்:**

புலால் உண்ணுவதையும், கள்ளுண்ணுவதையும், கள்ளுண்டு களித்தலையும் பெருமிதமாக நினைத்துப் பின்பற்றிய ஒரு நிலையை உடைத்தெறிந்து முதன்முதலில் கலகக்குரல் எழுப்பியவர் பொய்யில் புலவரே. கள்ளுண்ணும் சமூக ஒழுக்கக்கேட்டிற்கு எதிராக 'உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான் எண்ணப் படவேண்டா தார்' என்று சாடுகிறார். கள்ளுண்ணுவதை தீய பழக்கமென்று சொன்ன முதல் தமிழ்ப் புலவர் வள்ளுவரே. சங்க காலத்தில் கபிலர், ஔவையார் போன்ற பெரும் புலவர்கள் புலால் உணவைப் பற்றிப் பெருமை பேசுகின்றனர். புலால் உண்பது மனித நெறி அல்ல என்பதை முதலில் உரக்கச் சொல்லியவர் வள்ளுவரே 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்' என்றும் 'தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது இன்உயிர் நீக்கும் வினை' என்றும் புலால் உண்ணுவதையும் உயிர்க் கொலை புரிதலையும் எதிர்த்து வினையாற்றியவர் முப்பால் தந்த வள்ளுவரே.

செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை! முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்! நன்றி மறப்பது நன்றன்று! அடக்கம் அமரருள் உய்க்கும்! அறிவுடையார் எல்லாம் உடையார்! சொல்லுதல் யாருக்கும் எளியவாம்! நீரின்றி அமையாது உலகு! தன்னையே கொல்லும் சினம்! என்று குறள் முழுவதும் வாழ்வியல் நெறிகளை வகுத்துச் சென்றவர். வள்ளுவரை முழுவதுமாக உள்வாங்கிக் கொண்ட வள்ளல் பெருமான் பிற்காலத்தில் தாம் கண்ட 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்' என்ற அமைப்பின் கோட்பாடுகளை மக்கள் எளிதாகப் பின்பற்றக்கூடிய வகையில் வள்ளுவர் அடியொற்றி வழி வகுத்தார். அறநெறியோடு வள்ளுவர் நமக்கு வகுத்தளித்த வாழ்வியல் வழிமுறைகளை கடைபிடிக்காமல், படிப்பதோடு மட்டும் நிறுத்திக்கொண்டால் ஏது பயன்? வள்ளுவம் காட்டுகிற வாழ்வியல் நெறிமுறைகளை இறுகப் பற்றிக்கொள்வோம். அவ்வழி ஒன்றுதான் மானுடம் செழிக்க ஓரே தீர்வு!

உதவிய நூல்:

1. டாக்டர் வா.செ. குழந்தைசாமி, 'வாழும் வள்ளுவம்'.

ச. பராக்கிரம பாண்டியன், இளங்கலை கணிதம், தொடர்பு:
*pandiyanshanmugam1981@gmail.com*

# 5. திருக்குறள் காட்டும் இல்லறவியல் அறங்கள்

***தயாளினி***

உலகில் மனிதன் மனிதனாக வாழ வேண்டிய நெறிகளைக் கூறும் வாழ்வியல் நூலாகத் திருக்குறள் விளங்குகின்றது. திருக்குறள் ஒன்பது இயல்களையும் நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரங்களையும் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. அறத்துப்பால், காமத்துப்பால், பொருட்பால் எனும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டதாகத் திருக்குறள் காணப்படுகின்றது. திருக்குறள் கி.பி. 450 ல் தோன்றியதென எஸ். வையாபுரிப்பிள்ளை பதிவு செய்கின்றார். சிலர் ஆறாம் நூற்றாண்டிற்குரியதென்றும், சிலர் கி.மு. முதலாம் இரண்டாம் நூற்றாண்டிற்குரியதாக இருந்ததென்றும் கூறியதாக தண்டபாணிதேசிகர் கூறியுள்ளார். திருக்குறள் சங்கம் மருவிய காலத்தில் தோற்றம் பெற்ற அறநூலாகும். சங்ககாலத்தில் ஏற்பட்ட போர், சமண பௌத்தங்களின் வருகை, மதப்பிரச்சாரம், மதம் மாறல், வணிகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, குறுநில மன்னர்களது படையெடுப்பு, நாட்டின் அமைதியின்மை என்பன அறநூல்கள் தோன்றக் காரணமாயிற்று. இதன் பின்னணியில் திருக்குறளும் தோற்றுவிக்கப்பட்டது.

"ஆரியத்தாலும், நாத்திக மதங்களாலும், சிறப்பாக ஆரியத்தால் சமுதாயத்துறையிலும் சமயத்துறையிலும் தமிழகத்தில் ஏற்பட்ட எல்லாப்பாடுகளும் துன்பங்களும் நீங்கி எல்லோரும் இன்பமாக வாழ வேண்டும் என்ற நோக்கம் கொண்டே திருவள்ளுவர் திருக்குறளை இயற்றியிருக்கலாம்" எனத் திருக்குறள் தமிழ் மரபுரை எனும் நூலில் தேவநேயன் குறிப்பிட்டுள்ளார்.

இத் திருக்குறளில் திருவள்ளுவர் அறம் சார்ந்த பல விடயங்களைப் பேசியுள்ளார். அனைவருக்கும் பயனளிக்கக் கூடிய விடயங்களைப் பல கோணங்களில் வள்ளுவர் பதிவு செய்துள்ளார். இதனால் தான் திருக்குறள் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

திருக்குறள் வகுக்கும் இல்லறவியல் அறக்கோட்பாடுகள் அறம் இருவகைப்படும். ஒன்று இல்லறம். மற்றொன்று துறவறம். இல்வாழ்க்கைக்கும் அறத்திற்குமுள்ள அடிப்படையான உறவை இல்லறம் என்ற சொல் தெளிவாக உணர்த்துகின்றது. இவ்வுண்மையை "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" எனும் குறள் தெளிவாக விளக்குகின்றது.

திருக்குறளில் இல்லறவியல் இருபது அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில் சொல்லாமை, தீவினையெச்சம், ஒப்புரவு அறிதல், ஈகை, புகழ் என்பன இல்லறவியல் கூறும் அதிகாரங்களாகும். இல்லறம் என்பது கணவனும் மனைவியும் திருமணம் புரிந்து வாழ்க்கை நடத்துதல் ஆகும். இல்லற வாழ்க்கை நடாத்தும் போது இல்லற ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இல்லற ஒழுக்கம் பற்றித் தொல்காப்பியர்,

"மறை வெளிப் படுதலும் தமிரிற் பெருதலும்
இவை முதலாகிய இயல்நெறி பிழையாது
மலிவும் புலவியும் ஊடவும் உணர்வு
பிரிவோடு புணர்ந்து கற்பெனப்படுமே"

எனக் கூறுகின்றார். களவு வெளிப்பட்டு தமர் கொடுப்பக் கொள்ளும் மணவினை நிறைவேறிய பின் புலவி, ஊடல், உணர்வு, பிரிவு ஆகிய ஐந்து கூறுகளும் அடங்கியதே கற்பு ஆகும் என்கின்றார். இதன்படி கற்பே இல்லறவொழுக்கம் என்று தொல்காப்பியர் பதிவு செய்கின்றார். தொல்காப்பியத்தில் கற்பு என்று வரும் இடங்களை ஆராயின் அது இல்லறவியல் என்ற பொருளைக் குறித்து நிற்கின்றது. தொல்காப்பியர் காலத்தில் தலைவன், தலைவி களவில் ஈடுபட்டு களவு முற்றி காதல் திருமணம் செய்தனர். இதனால் கற்பைப் பற்றித் தொல்காப்பியர் அதிகம் பேசியுள்ளார். ஆனால்; திருவள்ளுவர் இல்லறவியல் பகுதியில் இல்லறம் பற்றிக் கூறுவதோடு இல்லறம் நடாத்துவதற்குத் தேவையான நல்லறம் பற்றியும் கூறுகின்றார். ஓர் இல்லறத்தானுக்கு இருக்க வேண்டிய பண்புகள், கடமைகள், இல்லறத்தாள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள், இல்லறத்தானுக்கும், இல்லறத்தாளுக்கும் காணப்பட வேண்டிய அறங்கள் எனப் பலவற்றை வள்ளுவர் பதிவு செய்துள்ளார்.

இல்வாழ்வான் அறம் பற்றிப் பல தளங்களில் பதிவு வள்ளுவர் செய்துள்ளார் உலக நிபந்தனைகளுக்குப் பயந்து நேர்மையான வழியில் பொருளீட்டி அவற்றைப் பிறருக்கும் கொடுத்தாலும் தன்னுடைய குடும்பத்திற்கும் கொடுப்பவனாக இருக்க வேண்டும். இதனை,

“பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியஞ்சல் எஞ்ஞான்றும் இல்”

என்ற குறள் கூறுகின்றது.

தலைவன் பொறுப்புடனும் அக்கறையுடனும் வாழ்வைக் கொண்டு நடத்த வேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார். அதாவது உயிரும் உடலும் தொடர்பு கொண்டு ஒன்றியிருக்கும் உறவானது அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கை என்கிறார். மேலும்; இல்லறத்தான் சிறந்த தலைவனாக மட்டுமின்றி குடும்பத்தலைவனாக தந்தையாக நடந்து கொள்ள வேண்டியது இல்லறத்தலைவனது கடமையாகும் என்பதை,

“இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை”

என்ற குறள் எடுத்துக்காட்டுகின்றது.

ஒரு இல்லறத்தான் தன்னுடைய வளர்ப்பில் தனது மகனைத் தன்னை விட மேலானவனாக ஆக்குவதே கடமையாகும் என்பதை,

“தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்”

எனும் குறள் வெளிப்படுத்தி நிற்கின்றது. இவ்வாறு ஒரு இல்லறத்தானுக்கு இருக்க வேண்டிய கடமை பற்றிக் கூறியுள்ளார்.

இல்லறவியலில் மனையாளுடைய பண்புகள், குணநலன்கள் பற்றியும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். பெண்கள் கற்போடு வாழ்க்கை முழுவதும் வாழ வேண்டும் என்று கூறப்படுகின்றது. வாழ்க்கைத்துணையானவள் இல்லறப்பண்பாகிய அன்பு நிறைந்தவளாய் இருப்பதோடு, தன் கணவன் செய்யும் செயல்களில் இடையூறு உண்டாகாதவாறு அதைப் பாதுகாப்பவளாக இருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. மேலும், கற்பிலிருந்து நீங்காது தன்னையும் பாதுகாத்துத் தனது கணவனையும் கவனித்து தம்மிருவரினதும் புகழ் தம்மை விட்டு நீங்காத நற்குணங்களுடன் வாழ்க்கை நடத்துபவளே உண்மையான இல்லறப்பெண் என்பதை,

“தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகை சான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்”

எனும் குறள் தெளிவுபடுத்துகின்றது.

செல்வத்தால் வாழ்க்கை எவ்வளவு சிறப்பானதாக விளங்கினாலும் இல்லறத்திற்குத் துணையாக இருக்கும் இல்லாளிடம் நற்குண நற்செயல்கள் காணப்படவில்லை எனில் வாழ்க்கை சிறப்பாக அமையாது. ஆனால் நற்குணங்கள் நிரம்பிய மனைவி கிடைக்கப் பெறுபவன் வாழ்வு சிறப்பாக அமையும்.

இல்லறவாழ்க்கை மூலம் பெறும் பெருஞ் செல்வமாக வள்ளுவர் மக்கட்பேற்றை அடையாளப்படுத்துகின்றார். திருமண உறவில் குழந்தைச் செல்வம் முக்கியம் என்று கருதியதால் தான் இல்லறத்தலைவன் இல்லறத்தலைவி பற்றிப் பேசி அடுத்த குறளாக மக்கட்செல்வம் குறளை முன்வைத்துள்ளார். அறிவுடைய பிள்ளைகளைப் பெற்று அவர்களால் உண்டாக்கப்படும் புகழ் உயர்வானது என வள்ளுவர் கூறுகிறார். குழந்தை பெறும் காலத்தில் தனது மகவைக் காணும் தாய் அடையும் மகிழ்ச்சி மிகுதியெனினும், பின்னர் அந்த மகன் சான்றோன் எனப் போற்றப்பட்டால் அதையும் விடப் பெரிதும் மகிழ்வாள் என்று கூறப்படுகின்றது.

மேலும், இல்வாழ்க்கை வாழும் போது விருந்தோம்பல், பொறுமை, ஈகை, நன்றிமறவாமை, அன்பு எனப் பல அறப்பண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வள்ளுவர் பதிவுசெய்துள்ளார். ஒருவன் பொருள் சம்பாதித்து மனைவி மக்களோடு இல்லறவாழ்வு வாழ்வது விருந்தினரைப் பேணி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ததற்காகவேயாகும் என்ற விருந்தினருக்குச் செய்யும் கடமை பற்றிக் கூறுகிறார். விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்க வேண்டும் என்பதை அனிச்சம்பூவிற்கு உவமிக்கிறார். அதாவது அனிச்சம்பூவை முகர்ந்து பார்க்கிற போது அது வாடிவிடும். அதே போல விருந்தினரை வரவேற்காவிடில் அவர்களது முகம் வாடிவிடும் என்று கூறப்படுகின்றது. வரவேற்கும் பண்பு இல்லறத்தாருக்கு இன்றியமையாததென வள்ளுவர் வரையறுக்கிறார். இல்லறத்தை நல்லறமாக்கப் பொறுமை அவசியமாகும்.

நிலத்தைப் பெண்ணாக உருவகித்து நிலத்தைக் கஷ்டப்படுத்துபவனைக் கூட அந்நிலம் தாங்கிக் கொள்கிறது. அது போலத் தன்னை அவமதிப்போர் தரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்பதினூடாக இல்லறத்தாளுக்கும் பொறுமை இன்றியமையாதது எனக் கூறுகிறார். பிறர் பொருள் மீது ஆசைப்பட்டு பொறாமை கொள்ளுதல் பாதிப்பானதாகும். மற்றவர்கள் செய்த நன்றியை மறக்கக் கூடாது. நன்றி மறந்தவருக்கு மன்னிப்பே கிடையாது என்று வள்ளுவர் கூறுகிறார். குற்றம் இல்லாதவர்களின் நட்பையும், துன்பத்தில் துணையாக நின்றவர்களையும் மறக்கக் கூடாது. இல்லறத்தில் எந்த எதிர்பார்ப்புமின்றிப் பிறருக்கு உதவி செய்வது செய்வது கடலைக்காட்டிலும் பெரிது எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இல்லறத்திற்கு ஒழுக்கம், அடக்கம் இன்றியமையாத நல்லறங்களாகும். கல்வியில் செல்வத்தில் அடக்கம் முக்கியமானதாகும். மெய்யடக்கம், நாவடக்கம், மனவடக்கம் என்பன அடக்கத்தின் வகைகளாகும். இல்லறத்தைக் கொண்டு நடாத்துவதற்கு அடக்கம் முதன்மையானதாக விளங்குகின்றது. இல்லறம் நல்லறமாக அமைவதற்கு ஒழுக்கம் முக்கியமானதாகும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

எனும் குறள் மூலம் ஒழுக்கத்தின் மேன்மை புலப்படுகின்றது.


ஒருவனுக்கு ஒருத்தி எனும் அடிப்படை ஒழுக்க அறம் இல்லறத்தில் முக்கியமானதாகும். ஒழுக்கத்திலிருந்து தவறிய வாழ்க்கை நரகத்திற்கு ஒப்பானதாகும். இல்லறத்தில் பயனற்ற சொல் உரைப்பதையும், புறம் பேசுவதையும் வள்ளுவர் வன்மையாகக் கண்டிக்கிறார். இவ்வாறாக,

அறங்கள் இல்லறத்தை நடத்துவதற்கு இன்றியமையாதவை எவை என வள்ளுவர் கூறுகிறார். மேற்கூறப்பட்ட வகையில் இல்லறத்தில் வகுத்த அறங்களைக் கணவன் மனைவி கடைப்பிடித்து வாழ்ந்தால் வாழ்க்கை வாழ்வு சிறப்பானதாக அமையும். இதில் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களையும், தவிர்க்க வேண்டிய விடயங்கள் பற்றியும் வள்ளுவர் எளிமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

உதவிய நூல்கள்:

- இளங்கோவன்,ம. (2003) வள்ளுவரும் வள்ளலாரும், சென்னை: இளவழகன் பதிப்பகம்.
- காமாட்சி ஸ்ரீனிவாசன் (1975) குறள் கூறும் சமுதாயம், மதுரை: மதுரைப்பல்கலைக்கழகம்
- ஞானசம்பந்தன்,அ.ச. (1956) அகமும் புறமும், சென்னை: பாரிநிலையம்
- நடேசமுதலியார்,அ (1955) வள்ளுவர் அறம், சென்னை: பழனியப்பா பிரதர்ஸ்

தயாளினி, (இளங்கலைமானி) தமிழ்த்துறை, உதவி விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம். தொடர்பு: thayayali166@gmail.com



# 6. திருக்குறளில் மனிதநேயம்

*முனைவர் இர. பிரபாகரன்*

*மனிதநேயம் என்ற சொல்லுக்கு மனிதர்கள் மற்ற மனிதர்களிடம் காட்டும் அன்பு என்று பொருள். ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய வாழ்க்கையில், தன் குடும்பம், உற்றார், உறவினர் போன்ற தொடர்புடையவர்களோடும் தொடர்பில்லாத மற்றவர்களோடும் பழகும் வாய்ப்பு இயற்கையாகவே அமைகிறது. தொடர்புள்ள மனிதர்களோடு ஒரு மனிதன் காட்டும் அன்பையும், தொடர்பில்லாத மற்ற மனிதர்களோடு ஒரு மனிதன் காட்டும் அன்பையும் திருவள்ளுவர் அழகாகவும், விளக்கமாகவும் பல குறட்பாக்களில் கூறியுள்ளார். திருக்குறளில் உள்ள மனிதநேயக் கருத்துக்களை ஆராய்வதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கம்.*

**நெருங்கிய தொடர்புடையவர்களிடம் ஒருவன் காட்டும் அன்பு:**

*தன்னுடைய காதலிக்கும் தனக்கும் உள்ள உறவை, நட்பு என்றும் அது உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பைப் போன்றது(1122 ) என்றும் காதலன் கூறுவதாக வள்ளுவர் கூறுகிறார். அந்தக் காதலி, தனக்கும் தன் காதலனுக்கும் உள்ள உறவைப் பற்றிக் கூறும்பொழுது, தன் காதலன் தன் கண்ணுக்குள்ளே இருப்பதால், தான் தன் கண்ணுக்கு மையிடுவதில்லை என்றும்(1127), அவன் தன் நெஞ்சில் இருப்பதால், தான் சூடான பொருட்களை உண்ணுவதில்லை(1128) என்றும் கூறுகிறாள். இந்தக் குறட்பாக்களில் காணும் காதலர்களிடையே உள்ள உறவு அன்பின் சிகரமாகத் திகழ்கிறது. இந்தக் காதலர்கள், திருமணத்திற்குப் பிறகு, கணவன் மனைவியாக வாழும்பொழுது, அவர்களுடைய இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாக இருந்தால்தான் அது பண்பும் பயனும் உள்ளதாக இருக்கும்(45) என்று வள்ளுவர் கூறுகிறார். ஒருவன், அன்போடும் அறத்தோடும் இல்வாழ்க்கை நடத்தும்பொழுது, அவனோடு தொடர்புடைய மனைவி, மக்கள், பெற்றோர் மற்றும் சுற்றத்தார் ஆகியோர்களுக்கு அவன் உற்ற துணையாகவும் ஆதரவாகவும்(41,43) இருந்து அன்பு செலுத்த வேண்டும் என்ற கருத்தையும் திருக்குறளில் காண்கிறோம். ஆகவே, தொடர்புடைய அனைவரிடமும் ஒருவன் அன்பாக இருக்க வேண்டும் என்பது திருக்குறளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தன்னுடைய குடியின் முன்னேற்றத்திற்காக ஒருவன் செயல்படுவது மிகவும் பெருமைக்குரியது(1021) என்று வள்ளுவர் கூறுவது, ஒருவனுக்குத் தன் குடும்பத்தின் மீதுள்ள மனிதநேயத்தின் இன்றியமையாமையைக் குறிக்கிறது.*

**நெருங்கிய தொடர்பில்லாதவர்களிடம் ஒருவன் காட்டும் அன்பு:**

*முதலில் தொடர்பில்லாமலிருந்தாலும், காலப்போக்கில் ஒருவன் சிலரோடு நட்பு கொள்கிறான். நட்பு கொண்டபிறகு, அவனுக்கும் அவனுடைய நண்பர்களுக்குமிடையே உள்ள உறவு நெருக்கமாகிறது. அந்த நட்பினால், நண்பர்கள் எவ்விதத் தயக்கமும் இல்லாமல் ஒருவருக்கொருவர் உதவி செய்கிறார்கள். ஒருவன் தன் நண்பனுக்கு உதவி செய்வது, உடுக்கை இழந்தவன் கைபோல் இடுக்கண் களைவது(788) என்கிறார் வள்ளுவர். இவ்வாறு உதவி செய்வதும் மனிதநேயத்திற்கு எடுத்துக்காட்டுதான். இல்வாழ்க்கையில் இருப்பவன் துறவிகளுக்கும், வாழ்க்கைப் பாதையில் வழிதவறியவர்களுக்கும், வாழ்க்கையை அனுபவிக்க முடியாமல் வருந்துவோர்க்கும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுவது(42) தொடர்பில்லாதவர்களிடத்தும் ஒருவன் மனிதநேயத்தோடு வாழ வேண்டும் என்பதைக் குறிக்கிறது.*

இப்பொழுது இருப்பதுபோல், திருவள்ளுவர் காலத்தில் நாடெங்கிலும் விடுதிகள் இல்லாததால், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்பவர்களுக்குத் தன் வீட்டில், உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து ஆதரிப்பது இல்வாழ்க்கையில் இருப்பவனின் கடமையாகக் கருதப்பட்டது(43). இவ்வாறு தொடர்பில்லாதவர்களை ஆதரிப்பது விருந்தோம்பல் என்று அழைக்கப்பட்டது. இல்வாழ்க்கை நெறிநின்று வாழ்வதின் நோக்கம் விருந்தோம்பல்(81) என்று வள்ளுவர் கூறுவது திருக்குறளில் உள்ள மனிதநேயத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

மக்கள் அனைவரும் பிறப்பினால் சமம் என்றும்(972), பிறரின் இன்பதுன்பங்களை தனக்கு நேர்ந்ததாக உணர்பவனே உயிர் வாழ்பவன் என்றும், அவ்வாறு உணராதவன் செத்தவன்(214) என்றும் வள்ளுவர் கூறுவது திருக்குறள் காட்டும் மனிதநேயத்திற்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு. பிறர் துன்பத்தை தன் துன்பமாகக் கருதுவதுதான் ஒருவன் அறிவினால் பெற்ற பயன்(315) என்று வள்ளுவர் கூறுவதும் மனிதநேயம்தான்.

மக்கள் அனைவரும் சமம் என்று உணர்வதும், மற்றவர்கள் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதுவதும் உயர்ந்த மனிதநேயக் கோட்பாடுகள். அந்தக் கோட்பாடுகளை உள்ளத்தால் உணர்வது மட்டுமல்லாமல் செயலிலும் காட்ட வேண்டும் என்று திருக்குறள் கூறுகிறது. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுளெல்லாம் தலை(322) என்பதும், வறியார்க்கொன்று ஈவதே ஈகை(221) என்பதும், தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு(212) என்பதும் திருக்குறளில் காணப்படும் ஒப்புயர்வற்ற மனிதநேயக் கருத்துக்கள். நம்மிடம் வந்து கேட்பவர்களுக்குச் செய்யும் உதவியை ஈகை என்றும், மற்றவர்களின் தேவையை உணர்ந்து, அவர்கள் கேட்காமலேயே, அவர்களுக்குப் பலவகையிலும் உதவி செய்வதை ஒப்புரவு என்றும் வள்ளுவர் கூறுகிறார். பலகாலமும் பலருக்கும் உண்ண நீரளிக்கும் ஊருணிபோல்(215), அல்லது, தன்னிடம் பழுத்த பழங்கள் உள்ளபோது ஊர்மக்களுக்குக் கொடுத்துதவும் மரங்களைப்போல்(216), அல்லது தன்னுடைய பட்டை, வேர், இலை, காய், கனி போன்ற எல்லாவற்றையும் பிறருக்குக் கொடுத்துதவும் மருந்துமரத்தைப்போல்(217) ஒப்புரவு செய்யலாம் என்ற சிறந்த மனிதநேயக் கருத்தையும் திருக்குறளில் காணலாம். இது போன்ற ஈகையையும் ஒப்புரவையும் அனைவரும் எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல், கைம்மாறு கருதாமல் பெய்யும் மழையைப்போல் செய்ய வேண்டும்(211) என்பதும், பிறருக்கு உதவி செய்வதால் மேலுலகம் செல்லும் வாய்ப்பில்லை என்றாலும்(222), அதைக் கடமையாகக் கருதிச் செய்ய வேண்டும் என்பதும் குறள் கூறும் மனிதநேயக் கருத்து.

மன்னனின் மனிதநேயப் பண்புகள்:

தனிமனிதன் மட்டுமல்லாமல், நாட்டை ஆளும் மன்னனும் மனிதநேயத்தோடு செயல்பட வேண்டும் என்று திருக்குறள் வலியுறுத்துகிறது. மன்னன் காட்சிக்கு எளியவனாகவும், கடுஞ்சொல் கூறாதவனாகவும்(386) இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார். மற்றும், மன்னன் நீதி தவறாது, முறைசெய்து மக்களைக் காப்பாற்ற வேண்டும்(388) என்ற கருத்தும், மன்னன் கொடை, அன்பு, செங்கோல் செலுத்துதல், குடிகளைக் காப்பாற்றுதல் ஆகிய பண்புகளை உடையவனாக இருக்க வேண்டும்(390) என்ற மனிதநேயக் கருத்தையும் திருக்குறளில் காணலாம். குடிமக்களை அரவணைத்துத் தழுவி வாழும் மன்னனே சிறந்தவன்(544) என்றும், மழைத்துளி இல்லையென்றால் எப்படி உலகம் வாழாதோ அதுபோல் மன்னனின் அருளாட்சி இல்லையென்றால் மக்கள் வாழ முடியாது(557) என்றும் வள்ளுவர் கூறுவதும் மன்னனுக்கு மனிதநேயத்தின் இன்றியமையாமையை வலியுறுத்துகிறது. மன்னனுக்கு மக்கள்மீது மனிதநேயம் இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுவது மன்னனுக்கு மட்டுமல்லாமல் ஆட்சியில் இருக்கும் அனைவருக்கும், நிறுவனங்களின் தலைவர்களுக்கும் பொருந்தும்.

**அனைவருக்கும் இருக்க வேண்டிய மனிதநேயப் பண்புகள்:**

அன்பில்லாத மனிதன் உயிரில்லாதவன் என்றும் அவன் வெறும் எலும்பும் தோலும் சேர்ந்த உடம்பு மட்டுமே என்றும் வள்ளுவர் கூறுகிறார்(80). ஆகவே, அன்பில்லாத மனிதனே இல்லை. அன்புதான் மனிதநேயத்தின் அடித்தளம். அதனால், ஒவ்வொருவரும், அன்பை வளர்த்து, மக்கள் அனைவரும் சமம் என்ற எண்ணத்தோடு, அனைவரிடமும் இன்சொல்பேசி, விருந்தோம்பி, அடக்கத்தோடும் ஒழுக்கத்தோடும் பழகி, பொறுமையைப் பேணிக்காத்து, அழுக்காறு இல்லாமல், பிறர் பொருளைக் கவரும் எண்ணம் இல்லாமல், பயனில சொல்லாமல், புறங்கூறாமல், தீவினைகளை விலக்கி, ஈகையும் ஒப்புரவும் செய்து, வாய்மையே பேசி, சினத்தைத் தவிர்த்து, இன்னாசெய்தார்க்கு அவர் நாணுரமாறு நன்னயம் செய்து(314), பிறர் நலத்தைத் தன்னலம்போல் கருதி, எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம் மாணா செய்யாமல் அன்போடு வாழ்வதுதான்(317) திருக்குறள் கூறும் மனிதநேயம் என்னும் தலைசிறந்த பண்பு. இத்தகைய மனிதநேயத்தோடு வாழ்பவர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் இயங்குகிறது என்றும், மனிதநேயம் உள்ளவர்கள் இல்லையென்றால், இவ்வுலகம் மண்ணுக்குள் மறைந்து அழிந்துவிடும் என்றும் வள்ளுவர்,

பண்புடையர்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன். (996)

என்ற குறளில் கூறி, மனிதநேயத்தின் சிறப்பையும் இன்றியமையாமையையும் வலியுறுத்துகிறார்.

துணைநூல்கள்:

1. தேவநேயப் பாவாணர், ஞா. திருக்குறள் — தமிழ் மரபுரை. ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ்,சென்னை.
2. Prabhakaran, R. Dr., The Ageless Wisdom (As embodied in Thirukkural), Emerald Publishers, Chennai

முனைவர் இர. பிரபாகரன் (Dr. R. Prabhakaran)
கணினிப் பொறியியல் மற்றும் மீக்கணினி மேலாண்மைத் துறை (ஓய்வு)
தமிழிலக்கிய ஆர்வலர், உரையாசிரியர், எழுத்தாளர் மற்றும் இலக்கியச் சொற்பொழிவாளர்
"The Ageless wisdom" என்ற திருக்குறள் குறித்த ஆங்கில நூல் ஆசிரியர்
பெல் ஏர், மேரிலாண்ட், யுஎஸ்ஏ.

தொலைபேசி: +1 443 752 0238
தொடர்பு: prabu0111@gmail.com

# 7. பெரியாரைத் துணைகோடல்

**முனைவர் என். சுபாஷிணி**

போற்றுதலுக்குரிய வள்ளுவரின் திருக்குறள் நாடு, இனம், மொழி, சமயம், காலம் இவற்றையெல்லாம் கடந்து இன்றளவும், நாளையும் வாழும் நூலாகத் திகழ்கின்றது. எந்தத் துறையைச் சார்ந்தவர்களுக்கும் அவரவர் துறையில் ஏற்படும் ஐயங்களைப் போக்க உதவும் மாபெரும் நூலே திருக்குறள். மேலும், திருக்குறளுக்குப் பல்வேறு சிறப்புகள் உண்டு. அதில் ஒன்று, பல வகையான உரை பெற்றுள்ளமை. திருக்குறளுக்கு விரிவுரை, விருத்தியுரை, சிறப்புரை, கருத்துரை, பொழிப்புரை, எளிய உரை, பழைய உரை, தெளிவுரை, புதிய உரை, 13 எழுத்துக்கள் கொண்ட உரை எனப் பலவகையான உரை வகைகள் உள்ளன.

வள்ளுவர் எழுதிய 1330 குறள்களும் போற்றுதற்குரியனவாக இருந்த போதிலும் பொருட்பாலிலுள்ள பெரியாரைத் துணைகோடல் என்னும் அதிகாரம் மிகவும் வலிமை வாய்ந்த ஒன்றாகும். அதிலும்,

இடிப்பாரையில்லா ஏமரா மன்னன்
கெடுப்பா ரில்லானும் கெடும் (448)

என்னும் இந்தக்குறள் என்னை மிகவும் கவர்ந்த ஒன்றாகும். இதன் பொருள் இடித்துச் சொல்வாரில்லாத மன்னன் கெடுப்பாரில்லாது, தானே கெடுவான் என்பதாகும்.

அரசின் கடமை நல்லாட்சி நல்குவதே. அதேசமயம் மனம் போன போக்கில் மன்னவன் அதிகாரமும், ஆணவமும் கொண்டு நேர்மை, நாணயம் தவறி தீங்கிழைத்துவிடக்கூடாது அல்லவா? அரசன் மனம் போன போக்கில் மதிமறந்து செயல்பட்டால் அமைச்சர்கள் அரசனின் அதிகாரத்திற்கு அஞ்சி அரசனின் விருப்பத்திற்கு ஆமாம் என்பார்கள். அதே சமயம் கபிலர், கோவூர் கிழார், அவ்வையார் போன்ற புலவர்கள் வரி வாங்கும் முறை, பகையொழித்தல் போன்ற பிரச்சனைகளில் மன்னனுக்கு அறிவுரை கூறும் நிலையிலும் இருந்ததைச் சங்க இலக்கியங்களின் வழி அறிகின்றோம். எனினும் இத்தகைய தவறுகள் நேராது இருக்கவே அந்தக்காலத்தில் ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன.

காட்டாற்று வெள்ளம் கரை உடைந்து ஊரை அழித்துக் கடலில் கலக்கும். அதைத் தடுக்க அணை ஒன்றினைக் கட்டி அதனுடைய வேகத்தைக் குறைக்க இயலும். பலர் கூடி இழுக்கும் தேரின் வேகத்தை ஒழுங்குபடுத்த தடைக்கட்டை உள்ளது. விரைந்து செல்லும் வாகனத்தின் வேகத்தைக் குறைக்க வேகத்தடை உள்ளது. அது போல, அரசனுக்கு வேகத்தடையாக இருந்தவர்களே ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் ஆவர். இவர்கள் மன்னனைப் பாராட்டாது வாழ்த்துரைகள் மட்டும் கூறாது உண்மை நிலையினை மன்னனது மனங்கொள்ளத்தக்க வகையில், மனதில் பதிய வைக்கும் வகையில் எடுத்துக்கூறுவர். மன்னனும் ஆத்திரம் கொள்ளாமல் அறிவு முதிர்ந்தோரின் அறிவுரைகளை மனங்கோணாமல் ஏற்றுக்கொள்வான். தன்னைத் திருத்திக் கொள்பவன் தொடர்ந்து முன்னேறுவான்; கொள்ளாதவன் விரைந்து அழிவான் என்று வள்ளுவரே

இடிக்குத் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர் (447)

என்று கூறியுள்ளார். இத்தகையோரின் துணைநலம் இருந்தால் அரசன் சிறப்புற ஆட்சிசெய்வான் என்பதாலேயே வள்ளுவர் பெரியாரைத் துணைகோடல் என்னும் அதிகாரம் அமைத்துக் கூறுகிறார்.

மன்னர்களுக்கு ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் மன்னரை நெருங்கி இடித்துரைக்கும் ஆற்றல் பெற்றவர்களாக இருந்ததால் அவர்கள் அறிவில் சிறந்தவர்களாகவே இருந்திருப்பர் என்பதில் ஐயமில்லை. இத்தகைய ஒரு அமைப்பு சோழர் காலத்திலிருந்ததாகச் சிலப்பதிகாரம் புகார்க்காண்டம் இந்திரவிழவூர் எடுத்தகாதை கூறுகின்றது. (வரி 157 - சிலப்பதிகாரம் ந.மு. வேங்கடசாமி நாட்டார், ராமையா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை)

கம்பரும், சீதையின் வாயிலாக இராவணனுக்கு அறிவுரை கூறுகின்றார்.
கடிக்கும் வல்லரவுங் கேட்கும் மந்திரங் களிக்கின்றோயை
அடுக்கும் ஈதுஅடாது என்று ஆன்ற ஏதுவோடு அறிவு காட்டி
இடிக்குநர் இல்லைஉள்ளார் எண்ணியது எண்ணி உன்னை
முடிக்குநர் என்றபோது முடிவு அன்றி முடிவது உண்டோ (பாடல் - 5024)

எனச் சீதையின் வாயிலாகச் சுந்தர காண்டம் காட்சிப்படலத்தில் 5024 ஆவது பாடலில் கூறுகிறார். கடித்துக் கொல்லவல்ல நாகமும் மந்திரங்கேட்டு அடங்கி நடக்கும். அதுபோல இடித்துக் கூறுவாரிருப்பின் நீயும் கட்டுப்பட்டு நடந்திருப்பாய். அவ்வாறு கூறுவாரில்லாமையால் மனம் கருதுவதே மந்திர ஆலோசனையாய் நடந்தாய். எனவே, உனக்கு நாசமே விளையும் என்று இடித்துக்கூறுவாரின் மேன்மையை இராவணனுக்கு எடுத்துரைக்கின்றாள்.(கம்ப இராமாயணம் பதிப்பாசிரியர் ச.வே. சுப்பிரமணியன் மணிவாசகர் பதிப்பகம் 31, சிங்கர் தெரு பாரிமுனை சென்னை).

தக்க புத்தி சொல்வாரைத் துணையாகக் கொள்ளாத அரசன் தானே கெடுவான்
எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (393)
என்று பிறிதோரிடத்திலும் கூறுகின்றார்.

இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர். (447)

கடிந்து அறிவுரை கூறவல்ல பெரியாரின் துணை கொண்டு நடப்பவரைக் கெடுக்கும் ஆற்றல் உள்ளவர் எவர் இருக்கின்றார்? என்றே வள்ளுவர் வினவுகின்றார். தீயன கண்டபோது நெருங்கிச் சொல்லும் துறைப் பெரியவரைத் துணையாகக் கொண்டு செயல்படுபவரைக் கெடுக்கக் கூடியவர் எவர்? தவறு கண்ட போது அவற்றை எடுத்துக் காட்டி வன்மையாகக் கண்டிக்கும் நண்பரைப் பெற்றுள்ள நிர்வாகிக்குக் காரியத் தடை செய்து தோல்வியுறச் செய்து அழிக்கவல்ல தகுதியுடையவர் யாருமில்லை என்கிறார்.

குற்றங்கடிதல் என்னும் அதிகாரத்தில் காமம், கோபம், பற்றுள்ளம், மானம், உவகை, செருக்கு என்னும் ஆறு வகை குற்றங்களையும் செய்யாமல் இருத்தல் ஒரு அரசனது கடமை என்கிறார். அறிவுடையவர்கள் இதனை அறிந்தும் நீக்கியும் விடுவர் என்று கூறிய பிறகு அடுத்த அதிகாரமாகப் பெரியாரைத் துணைகோடல் என்னும் அதிகாரத்தை வைக்கின்றார். இந்த அறுவைகை குற்றங்களையும் நீக்கிய அரசன் பெரியாரைத் துணைகொண்டு நல்லாட்சி செலுத்த முடியும் என்று வள்ளுவர் அறிவுறுத்துகின்றார்.

இனி யார் அந்தப் பெரியோர்? அதற்கும் பெரியாரைத் துணைகோடல் என்னும் அதிகாரத்தில் விளக்கம் தருகிறார். . தன்னைவிட வயதும் நல்லொழுக்கமும் நல்லறிவும் கூடிய பெரியவர்களைத் தனக்கு இனிய உறவாகப் போற்றுதல் வேண்டும் தன்னுடைய தேவை மற்றும் அவர்களுடைய வலிமை அறிந்து அவர்களை வழிகாட்டியாய்ப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதே சமயம் அவர்களை உயர்வாக மதித்து அவர் வழி நின்று செயல்படவும் வேண்டும்.

தன் ஆட்சிக்கு ஏற்படும் துன்பங்களைப் போக்குவதோடு வரக்கூடிய துன்பங்களையும் ஊகித்து உணர்ந்து அதிலிருந்தும் பாதுகாக்கும் தன்மை உடையவர்களின் உறவை அரசன் போற்றுதல் வேண்டும். மற்ற உயிரினங்களால் தனக்கும் தன் ஆட்சிக்கும் ஏற்படக்கூடிய துன்பங்களை விலக்கி அந்தத் துன்பங்கள் நிகழாதவாறு விலக்கிக்கொள்ளும் ஆற்றலை அறியவேண்டும்.

இவ்வகைப் பெரியாரைத் தமக்கு உறவாகக்கொண்டு அவர்வழி செயல்படுதல் ஒரு அரசனுக்குத் தான் பெற்றுள்ள வழிகளிலெல்லாம் உயர்ந்ததாகும். அரசன் தம்மைவிட அறிவிலும் வயதிலும் நல்லொழுக்கத்திலும் சிறந்து விளங்குபவர்களைத் தமக்குத் துணையாகக் கொண்டு ஆட்சியின் செயல்பாடுகளை மேற்கொள்வது அரசனது எல்லா வலிமையைக் காட்டிலும் மேலானதாகக் கருதப்படும்.

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைத்
தமராக் பேணிக் கொளல் *(443)*
என்கிறார்.

நான் போற்றும் திருக்குறள்:

இடிப்பாரையில்லா ஏமரா மன்னன்
கெடுப்பா ரில்லானும் கெடும் (448)

என்னும் இக்குறளினை மன்னர்க்கு என்று மட்டும் கருதாது காலக்கண்ணாடியில் தோன்றும் புதிய தோற்றங்கள் என்று ஆட்சித்தலைவர்கள், குடும்பத்தலைவர்கள், துறைத் தலைவர்கள் போன்ற எந்த ஒரு தலைமைப் பதவிக்கும் பொருத்திப் பொருள் காணுதல் பொருத்தமாக இருக்கும். ஆட்சியாளர்கள் தமக்குத் தோன்றிய நெறியில் ஆட்சி செய்யாது எதிர்க்கட்சியில் இருப்பவர்களின் கருத்துகளுக்குச் செவி சாய்த்தல் வேண்டும். அவ்வாறு செய்தால் நாடு விரைவில் மேன்மையடையும். தலைமைப் பதவியில் உள்ளவர்கள் தமக்குக் கீழ் இருப்பவர்கள் அறிவும், முன்னனுபவமும் உடையவராகவும் இருப்பர் என்று கருதி அவரது கருத்துகளுக்கு மதிப்புக் கொடுத்துச் செயல்பட்டால் செய்கின்ற பணி சிறந்து நாட்டிற்கும் நலம் பயக்கும் என்பதே இதன் நோக்கமாகும்.

முனைவர் என். சுபாஷிணி, பணி ஓய்வு பெற்ற தமிழாசிரியர், தொடர்பு: Subhi56@gmail.com
சென்னை, இந்தியா.

# 8. எப்படிப் பொருள் கொள்ள வேண்டும்?

*முனைவர் ச.கண்மணி கணேசன்*

உலகப் பொதுமறை என்று புகழப் பெறும் திருக்குறள் நூலைத் தேசிய இலக்கிய வரிசையில் சேர்ப்பது பற்றி தினமணி கதிர் எனும் வாரஇதழில் பெருத்த எதிர்ப்பும், விவாதமும் எழுந்தது. சிறந்த நாவலாசிரியர் என்று புகழ் பெற்ற படைப்பாளி ராஜம் கிருஷ்ணன் திருக்குறளில் இருக்கும் பெண்வழிச் சேறல் என்ற அதிகாரத்தை நீக்கிய பிறகே அதைத் தேசீய இலக்கிய வரிசையில் சேர்க்க வேண்டும்; பெண்களை இழிவுபடுத்தும் குறள்கள் அந்த அதிகாரத்தில் உள்ளன என்று தெரிவித்தார். மதுரைக்காமராசர் பல்கலைக்கழகத்தின் திருக்குறள் இருக்கையில் வீற்றிருந்த முனைவர் திருமதி மீனாட்சி முருக ரத்தினமோ திருக்குறளைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் வைக்கப்படும் குற்றச்சாட்டு என்று எதிர்வாதம் செய்து எழுதினார்.

திருக்குறள் உரைவளம் என்ற நூல் தொகுத்துக் காட்டும் பல்வேறு உரைகளிலும் குறிப்பிட்ட அதிகாரத்திலுள்ள குறள்களுக்கு முழுமையான பொருள் சொல்லப்படவில்லை என்னும் கருத்தை முன்வைத்து; எப்படிப் பொருள் கொள்ள வேண்டும் என்று தெளிவுறுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

**நூலின் அமைப்பு**:

திருக்குறள் ஒரு நீதிநூல் ஆகும். அந்நூல் மனிதனின் அகவாழ்க்கைக்கும், புறவாழ்க்கைக்கும் தேவையான நீதிகளை 133 அதிகாரங்களில் சொல்கிறது. பாயிரம் அல்லது கடவுள் வாழ்த்து என்று சொல்லப்படும் நான்கு அதிகாரங்களை அடுத்து அறத்துப்பால் அமைந்துள்ளது. மனிதன் அன்றாட வாழ்வில் பின்பற்ற வேண்டிய அறங்கள் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. இல்லறவியல், துறவறவியல் இரண்டும் அதனுள் அடங்கும். இரண்டாவதாக அமைந்துள்ள பொருட்பாலில்; அரசனுக்குச் சொல்ல வேண்டிய அறங்களை அடுத்து அமைச்சனுக்குச் சொல்ல வேண்டிய அறங்கள் இடம் பெற்றுள்ளன. தொடரும் அங்கவியலில் குடிமக்கள் புறவாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய விழுமியங்கள் தொகுத்துக் கூறப்படுகின்றன. இவ்விடத்திலேயே பெண்வழிச்சேறல் என்ற அதிகாரம் அற்புதமான மதிப்பீடுகளை பத்துக் குறள்களில் எடுத்துச் சொல்கிறது.

**வள்ளுவரின் கொள்கைகள்:**

அறத்துப்பாலில் வள்ளுவர் இரு கொள்கைகளை நிலைநாட்டுகிறார். இல்லறத்தில் ஈடுபடும் ஒவ்வொரு கணவனும் மனைவியைச் சார்ந்தே வாழ்கிறான்; அவள் இல்லையெனில் அவனுக்கு வாழ்க்கையே இல்லை என்பது இல்லறவியலில் வள்ளுவர் நிறுவிய முதல்கொள்கை ஆகும்.

இல்லறத்தில் கணவனின் கடமைகளுக்குத் துணைக்கரம் நீட்டக்கூடிய தகுதி சுற்றத்திற்கும் நட்பிற்கும் இல்லை; மனைவிக்கு மட்டுமே உண்டு.. அதனால் தான் அவள் வாழ்க்கைத்துணை என்று அழைக்கப்படுகிறாள்.

**காலச்சூழல்:**

திருக்குறளைப் புரிந்துகொள்ள வேண்டுமெனில் திருவள்ளுவர் வாழ்ந்த காலச்சூழலைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறார் முனைவர் தமிழண்ணல் (திருக்குறள் உணர்த்தும் தமிழர் சமயம்- ப.- 93). திருக்குறள் வீரயுகம் என்று அழைக்கப்பட்ட காலத்தை அடுத்த நீதி இலக்கியக் காலத்தில் தோன்றியது. காதலும், வீரமும் மட்டுமே போற்றப்பட்டு; புலால் உணவையும், கள்ளையும் மிதமிஞ்சி நுகர்ந்த வீரயுகத்தை அடுத்து; சீர்படுத்த வேண்டிய

சமுதாயத்திற்காக எழுந்த நீதிநூலே திருக்குறள். வெற்றி அல்லது வீரமரணம் என்ற கொள்கையே முதன்மை மதிப்பீடாக இருந்த வீரயுகச் சமூகம் ஆணாதிக்கச் சமூகம் என்பதில் ஐயமில்லை. அவரது காலத்தில் பொதுவாழ்வில் ஈடுபட்ட பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. எனவே ஆணாதிக்கத்தில் கால்கொண்டு எதிர்வரும் காலத்திற்குரிய அறங்களை வலியுறுத்த வேண்டிய சூழல் இருந்தது. இச்சூழலில் தான் திருவள்ளுவர்; குடிமக்கள் கடமையை ஒரு ஆணுக்குச் சொல்வது போல் அமைத்துள்ளார். அம்மதிப்பீடுகள் அனைத்தும் அப்படியே பெண்களுக்கும் பொருந்தும். ஆய்வாளர் திருவள்ளுவரைப் பற்றிக் கூறுகையில் அவர் ஒருபோதும் பெண்ணினத்தை வேதியர் போலவோ சமணர் போலவோ வெறுப்போடு பார்ப்பவர் இல்லை என்கின்றனர்(மேற்.- ப.- 101).

இக்காலத்திற்கும் பொருந்தும் வகையில்; தான் மேற்கொண்ட பணியைத் திறம்படச் செய்துள்ளார் திருவள்ளுவர். மு.வரதராசனார் தன் நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் திருக்குறள் நம் காலத்திற்கும் பொருத்தமான பொருளைத் தரவல்ல திறனுடையது என்கிறார் (திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்- ப.- 32).

**பொதுவாழ்க்கை மதிப்பீடுகள்:**

எந்த ஒரு குறளுக்கும் திருவள்ளுவரின் மனநிலைப்படியே பொருள்கொள்ள வேண்டும் என்பர் ஆய்வாளர் (இளங்குமரனார், இரா.- இக்குறளுக்கு ஏன் இப்பொருள்?- ப .- 22). அறத்துப்பாலில் வள்ளுவர் நிலைநாட்டும் இரு கொள்கைகளையும், அவரது காலச்சூழலையும், நூலின் அமைப்பையும் மனத்தில் கொண்டு பெண்வழிச்சேறல் என்னும் தலைப்பின் கீழுள்ள குறட்பாக்களுக்குப் பொருள் காண்போம். ஒவ்வொரு குறளும் இரண்டடிகள் கொண்டனவே; ஆயினும் அவை உணர்த்தும் பொருளாழம் விலைமதிப்பு அற்றது என்கிறார் மூத்த தமிழ் ஆய்வாளர் திரு.அ.க.நவநீத கிருஷ்ணன் (தாமரைச் செல்வர் திரு.வ.சுப்பையா பிள்ளை- திருக்குறள் பதிப்பும் ஆய்வும்- ப.-131).

“மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது”- (குறள் - 901)

கணவன் ஒரு குடிமகனாக அரசியலிலோ, சமூகசேவையிலோ ஈடுபடும் போது தன் மனைவியின் விருப்பத்திற்கு முதன்மை இடம்கொடுத்துச் செயலாற்றினால் மாட்சிமை பொருந்திய பயனை அடைய இயலாது. வெற்றிகரமாகச் செயலாற்ற நினைப்பவன் அவ்வழியைப் பின்பற்ற மாட்டான். அதுபோல மனைவி ஒரு குடிமகளாக அரசியலிலும் சமூகசேவையிலும் ஈடுபடும் போது தன் கணவனின் விருப்பத்திற்கு முதன்மை இடம்கொடுத்துச் செயலாற்றினால் மாட்சிமை பொருந்திய பயனை அடைய இயலாது. வெற்றிகரமாகச் செயலாற்ற நினைக்கும் பெண் அவ்வழியைப் பின்பற்ற மாட்டாள். இப்பொருள் மு.வரதராசனார் கருத்தோடு பொருந்தி வருவதாகும் (மேற்.- ப.- 216- 221).

மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று - (குறள் - 904)

சமூகத்தின் குடிமகனாகக் கடமையாற்றும் கணவன் மனைவிக்கு அஞ்சிச் செயல்படின் அவன் இப்பிறவியில் வெற்றி பெறவும் இயலாது; மறுமையின்பமும் அவனுக்குக் கிட்டாது. அதுபோல சமூகத்தின் குடிமகளாகக் கடமையாற்றும் தலைவி கணவனுக்கு அஞ்சிச் செயல்படின் அவள் இப்பிறவியில் வெற்றி பெறவும் இயலாது; மறுமையின்பமும் அவளுக்குக் கிட்டாது. திருவள்ளுவர் படைத்திருக்கும் மனைவி என்ற பாத்திரம் அறிவு, திறமை, மனவலிமை அனைத்தும் பொருந்திய முழுமையான வடிவம் என்ற கருத்தை ஏற்கெனவே பெண்ணியவாதிகள் முடிபாகக் கூறியுள்ளனர் (சக்திபெருமாள், முனைவர்- “வள்ளுவர் முப்பாலில் பெண்ணியச் சிந்தனைகள்”- தமிழ்ஞாலம்- 2006- ப.- 54).

*பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்*
*பெண்ணே பெருமை உடைத்து - (குறள்- 907)*

*பொதுவாழ்க்கையில் தன் மனைவியின் கட்டளைப்படி பணியாற்றும் ஏவலாளனை விடக் கணவன் முன்னர் நாணி நிற்கும் பெண்ணே பெருமைக்குரியவள் ஆகிறாள். அதேபோலப் பொதுவாழ்க்கையில் தன் கணவனின் கட்டளைப்படி பணியாற்றும் ஏவல்மகளை விடத் தன் கணவனுக்கு முன் நாணி நிற்கும் பெண்ணே பெருமைக்குரியவள் ஆவாள்.*

*ஆய்வாளரும் மிகப்பெரும்பான்மையான குறள்கள் நடைமுறை நீதிகளை நம் பொதுஅறிவின் துணையுடன் அறியச்செய்கின்றன என்பர் (Gabriella Eichinger Ferrzzo- Luzzi - தமிழ் ஞாலம்- May- 2004- p.- 3)*

**முடிவுரை:**

*உலகமுழுமையும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் திருக்குறள் கருத்துக்கள் பொதுவான நீதிகளை வலியுறுத்துகின்றன என்பதில் ஐயமில்லை. (மேற்.- ப.- 4) எனவே திருக்குறள் உலகஇலக்கிய வரிசையில் சேர்க்கும் தகுதியைப் பெறுகிறது.*

*துணைநூற்பட்டியல்:*

*1. Gabriella Eichinger Ferro- Luzzi - "If Whorf Had Known Thiruvalluvar? Universalism And Cultural Relativism In A Famous Work Of Ancient Tamil Literature"- p.- 1-37- தமிழ் ஞாலம்- ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றம், மதுரை.- மே- 2004*

*2. இளங்குமரனார்,இரா.- இக்குறளுக்கு ஏன் இப்பொருள்?- அமிழ்தம் பதிப்பகம், சென்னை.- முதல் பதிப்பு- 2004*

*3. சக்தி பெருமாள்- வள்ளுவர் முப்பாலில் பெண்ணியச் சிந்தனைகள்- தமிழ் ஞாலம்- ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றம், மதுரை- 2006*

*4. சுப்பையா பிள்ளை, தாமரைச் செல்வர்,வா.-திருக்குறள் பதிப்பும் ஆய்வும்- திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.- டிசம்பர்,1997.*

*5. தமிழண்ணல், முனைவர்- திருக்குறள் உணர்த்தும் தமிழர் சமயம்- சிந்தாமணிச் செல்வ வெளியீடு- ஜூன்-1999*

*6. தண்டபாணி தேசிகர்,சா.- திருக்குறள் உரைக்களஞ்சியம்- பொருட்பால்- அங்கவியல்- பகுதி ii- பதிப்புத்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.- முதல் பதிப்பு-1983.*

*ச.கண்மணி கணேசன், M.A.,Ph.D. முதல்வர் & தமிழ்த்துறைத் தலைவர் (ஓய்வு), ஸ்ரீகாளீஸ்வரி கல்லூரி, சிவகாசி. இந்தியா, தொலைபேசி: 9791680637, தொடர்பு: kanmanitamilskc@gmail.com*

# 9. எப்படி எழுத வேண்டும் ?

*முனைவர் இராம. மலர்விழிமங்கையர்க்கரசி*

**குறள் கருத்துக்கள் பொதுமக்களை அடைய எப்படி எழுத வேண்டும் ?**

உலகப் பொதுமறையாம் திருக்குறளைப் பலரும் பல விதங்களில் போற்றித் தான் வாழும் சமூகத்திற்கு அளித்துள்ளனர். "திருக்குறள் மனிதக் குலத்திற்கே ஒளி வீசுகின்ற முழுமையான, நிறைவான நூல் என்று உலகப் பெரியார்கள் கூறுகின்றார்கள். இந்நூல் மிக மிகப் பழமையான உலகநூல் என்று பாராட்டடப்பட்டு வருகின்றது" என்று உலகப் பொதுமறை திருக்குறள் உரை விளக்கம் எனும் நூலின் முன்னுரையில் திருக்குறளார் வீ. முனுசாமி குறிப்பிடுகிறார்.

நல்லவர்களுக்கும், இளைஞர்களுக்கும் மற்றும் ஏராளமான பொது மக்களுக்கும், வாழ்க்கையையும், சமுதாயத்தையும், அரசியலையும் இணைத்துச் சிந்தித்த பெரியோர்களின் சிந்தனைகளை எடுத்துச் சொல்ல வேண்டிய, அவர்களுக்குப் புரியும்படி, இன்றைய சூழ்நிலையின் பின்னணியில் அந்தச் சிந்தனைகளை விளக்கிக் கூற வேண்டிய பண்பாட்டுத் தேவை ஏற்பட்டுள்ளது என்பது சுப. அண்ணாமலையவர்களின் கருத்து. சாமானியர்க்குத் திருக்குறட் சிந்தனைகளை விளக்க எவ்வாறு எழுதலாம் என்பதை அறிய டாக்டர். சுப. அண்ணாமலை அவர்கள் எழுதிய குறள் விளக்கக் கட்டுரைகளில் அவர் கையாண்ட முறைகளை மீள்பார்வை செய்து, அம்முறையை அறிவது இக்கட்டுரையின் நோக்கம்.

**(1) இருசொல்லிருக்கத்தலைப்புகள்:**

பல்லாண்டு வாழ, நியாய உணர்ச்சி, தெய்வ நியாயம், உண்மை ஒழுக்கம், சமுதாய அண்டவெளி ஆட்சி, குடும்ப வரலாறு, இயற்கைச் சட்டம் என இவ்வாறாக இருசொல் சுருக்கத் தலைப்புகள் குறளின் கருத்தைச் சுருங்கச் சொல்லல் போல அமைக்கப்படுதல் கையாளப்படுகிறது.

பேதைப் படுத்தும் இழவுஊழ் அறிவுஅகற்றும்
ஆகல்ஊழ் உற்றக் கடை — (ஊழ் - 2)

இக்குறளை விளக்க இயற்கைச் சட்டம் எனத் தலைப்பிட்டு விட்டு, செல்வம் தருவது ஆகூழ்; அதை இழக்கச் செல்வது போகூழ் எனச் சுருங்கச் சொல்லி, ஊழ் என்பது முறைமை, நியாயம், நியதி, இயற்கையின் நியாயம், ஒருவன் செய்த செயலின் பயனை அவன் அனுபவிக்க வேண்டும் என்பது என விளங்கவும் சொல்லுவார் சுப. அண்ணாமலை.

**(2) தனித்துவத்தொடர்கள்:**

பொருளை விளக்கும் தனித்துவத்தொடர்கள் கையாளப்படுகிறது. 'காற்றுப்பிக் கட்டிடமாகுமா?' என்ற சொற்றொடர்

கனவினால் ஆகிய ஆக்கம் அளவுஇறந்து
ஆவிது போலக் கெடும் — (இன்னாமை - 3)

காற்றுப்பி உள்இறுக்கமும் வெளிமோதலும் தாங்காமல் வெறுப்பது போல் துறவு வாழ்க்கை அவலத்தில் முடியும் என்பதை விளக்குகிறது.

**(3) உருவகம்:**

அவ்வாறே குறளின் பொருளை விளக்கும் உருவகங்களும் உதவுகின்றன. எடுத்துக்காட்டாக; 'இரும்புக்கரம்' மற்றும் 'விஷக்காற்று' என்பன.

நுண்ணிய நூல்பல கற்பினும், மற்றும் தன்
உண்மை அறிவே மிகும் — (ஊழ் - 3)

இங்கு உண்மை அறிவு இரும்புக் கரமாக உருவகத் தலைப்பு பெறுகிறது.

உம்மைவிரி — வடக்கும் தெற்கும்

இருவேறு உலகியற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு — (ஊழ் - 4)

செல்வமும் அறிவும் ஒன்று சேரவே வாய்ப்பில்லை என்பதை இவ்வடக்கும் தெற்கும் எனும் தலைப்பு இரண்டு துருவங்களும் சேர வாய்ப்பில்லை என்பதை நமக்கு உணர்த்துவதற்கு இவ் உம்மைவிரி நமக்குத் துணை செய்கிறது.

**(4) கவனத்திற்குரிய தொடா்களைக் கையாளுதல்:**

நில், கவனி, செல் என்ற தொடர் ...
செயற்பாலது ஓரும் அறனே ஒருவற்கு
உயற்பாலது ஓரும் பழி — (அறன்வலியுறுத்தல் - 10)

அடையா நெடுங்கதவு என்ற தொடர் ....

மோப்பக்குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து — (விருந்தோம்பல் -10)

குறள் கருத்துகளைச் சுருங்கச் சொல்கின்றன.

**(5) ஓசைநயம்:**

தேள் கொட்டும் வாள் வெட்டும், வாலுபோயி கத்திவந்தது (டும் ....டும்......டும்..) போன்ற பயன்பாட்டுத்தொடர்கள் ஓசைநயமிக்கவை. எடுத்துக்காட்டாக வாலுபோயி கத்திவந்தது என்ற தொடர்

வேண்டுங்கால் வேண்டும்பிறவாமை மற்று அது
வேண்டாமை வேண்ட வரும் — (அவாஅறுத்தல் -2)

என்பதை எளிதாக விளக்குகிறது.

**(6) முடிவுகள் கூறல்:**

சமுதாயம் சாவதில்லை, நீரே ஆதாரம், கடலுக்கும் மழை வேண்டும் போன்ற தலைப்புகள் மழையின் பெருமையைக் கூறுகின்றன.

சமுதாயம் சாவதில்லை...

வானின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று — (வான்சிறப்பு - 1)

நீரே ஆதாரம் ...

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்

*துப்பாய தூஉம் மழை — (வான்சிறப்பு - 2)*

*கடலுக்கும் மழை வேண்டும்...*

*நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி*
*தான்நல்கா தாகி விடின் — (வான்சிறப்பு - 7)*

*பழிவரும் எச்சரிக்கை...*

*ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்*
*எய்துவர் எய்தாப் பழி — (ஒழுக்கமுடைமை -7)*

*ஞானம் ஆயுதமாக வேண்டும்...*

*அற்றவர் என்பார் அவா அற்றார் மற்றையார்*
*அற்றாக அற்றது இலர் — (அவாஅறுத்தல் -5)*

### (7) பழமொழிகள் தலைப்பாதல்:

*அடிப்பதும் அணைப்பதும் என்பதில் "அடிக்கிற கைதான் அணைக்கும்" எனும் பழமொழி தலைப்பாகிறது.*

*கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே*
*எடுப்பதூஉம் எல்லாம் மழை — (வான்சிறப்பு - 5)*

*உன்னால நான்கெட்டேன் என்பதில் "உன்னால நான் கெட்டேன் என்னால நீ கெட்டாய்" எனும் பழமொழி தலைப்பாக இடம் பெறுகிறது.*

*பற்றுஅற்ற கண்ணே பிறப்பு அறக்கும்மற்று*
*நிலையாமை காணப் படும் — (துறவு - 9)*

*இங்கு பற்றால் தான் மனிதன் கெடுகிறான் என்பதை விளக்கும் சரியான தலைப்புத் தீர்வு ஆகும்.*

*கைக்கு எட்டியது வாய்க்கு எட்டுமா? என்பதில் "கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை" எனும் பழமொழி தலைப்புப் பெறுகிறது.*

*"பால் சோறே ஊட்டி வளர்த்தாலும், கூட்டைத் திறந்தால் பறந்தோடும் பச்சைக்கிளி"*

*பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்*
*சொரியினும் போகா தம் — (ஊழ் - 6)*

*இங்கு உரிமையில்லாத செல்வம் கட்டிக் காத்தாலும் நில்லாது என்பது பழமொழியினைத் தலைப்பிட்டு எளிதில் விளக்கப்படுகிறது.*

*சட்டியில் இருப்பதே அகப்பையிலும் என்பதில் "சட்டியில் இருப்பதே அகப்பையில் வரும்" என்ற பழமொழியைக் காட்டுகிறது. கீழ் வரும் குறளையும் விளக்குகிறது.*

*சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால்*
*கோடாமை சான்றோர்க்கு அணி — (நடுவுநிலையாமை - 8)*

### (8) திரைப்பாடல் வரிகள் தலைப்பாதல்:

*பழகப் பழக வரும் தமிழ்போலே என்பது சிரித்துச் சிரித்து என்னைச் சிறையிலிட்டாய் பாடலை நினைவுபடுத்தும் தொடர்.*

*இயம்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்*

முயல்வாருள் எல்லாம் தலை — (இல்வாழ்க்கை - 7)

நதியெங்கேபோகிறது? என்பது நதியெங்கே போகிறது? கடலைத் தேடி, நாளெங்கே போகிறது இரவைத் தேடி என்ற திரைப்பாடலை நினைவுபடுத்தும் தொடர் அது பயணம் பற்றிக்கூறி குறள் பொருள் விளக்குகிறது.

நல்லாற்றான் நாடி அருள் ஆள்க பல்லாற்றான்
தேரினும் அஃதே துணை — (அருளுடைமை - 2) பாலிருக்கும், பழமிருக்கும் பசியிருக்காது என்பது பாலிருக்கும், பழமிருக்கும் பசியிருக்காது பஞ்சணையில் காற்று வரும் தூக்கம் வராது என்ற திரைப்பாடலை நினைவுபடுத்தும் தொடர், அது

வகுத்தான் வகுத்த வகைஅல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது — (ஊழ் - 7)

குறளை விளக்கக் கணகச்சிதமாய் பொருத்திக் காட்டப்பட்டுள்ளது.

**(9) வினாமுறைத் தலைப்புகள்:**

வினாமுறைத் தலைப்புகள் கருத்து நிறுத்துவதற்கு உதவுகிறது.

மனக் கவலை மாறுமா? என்ற தலைப்பு

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு — அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது — (கடவுள் வாழ்த்து - 7)

எனும் குறள் விளக்கத்திற்கு இடும் தலைப்பு.

கடவுள் எதற்கு? என்ற தலைப்பில் பொருள், இன்பம் என்ற கடல்களைக் கடப்பதற்கு அறக் கடலாகிய கடவுள் வழி காட்டுகிறான். துணைசெய்கிறான், கடந்த பிறகு பூரணத்துவம் பெற, அருளைத் தருகின்றான் என வினாவால் தலைப்பிட்டு விளக்க உதவுகிறது.

அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்

கீழே மேலும் சில வினாமுறைத் தலைப்புகளும் அவை விளக்கும் குறள்களும்;

ஆயிரமாக வளையுமா?

ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளம் குன்றிக்கால் — (வான்சிறப்பு - 4)

தேர் எங்கே? திருவிழா எங்கே?

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்ககும் ஈண்டு — (வான்சிறப்பு - 8)

வழியா? முடிவா?

நன்றே தரினும் நடுஇகந்து ஆம்ஆக்கத்தை
அன்றே ஒழியவிடல் — (நடுவுநிலைமை - 3)

நெல் விளையும் வயலில் கலையா?

பரிந்து ஓம்பிக்காக்க ஒழுக்கம் தெரிந்துஓம்பித்
தேரினும் அஃதே துணை — (ஒழுக்கம் உடைமை - 2)

வன்முறை தான் வழியா?

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும் — (ஒழுக்கம் உடைமை - 8)

**முடிவுகள்:**

இவற்றைத் தொகுத்துக் காணின்,

- சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலுக்கு இருசொல் விளக்கத் தலைப்புகள் துணை நிற்கின்றன.
- தனித்தனித் தொடர்கள் உற்று நோக்கலை உணர்த்துகின்றன.
- இலக்கணஞ்சார் தலைப்புகள் மொழிப் புலமையை எடுத்துரைக்கின்றன.
- முடிவுகூறல் — சிந்தனை ஆளுமையைப் பறைசாற்றுகின்றன.
- பழமொழிகள் தலைப்பாதல் — சமயோசித அறிவை வெளிப்படுத்துவன.
- திரைப்பாடல் வரிகள் தலைப்பாவது — சாமானியனின் குரல் வெளிப்பாடு.
- வினாமுறைத் தலைப்புகள் — அடிப்படையான ஆசிரியனின் பூரணத்துவ

**வெளிப்பாடு.**

இவ்வாறாகப் பல்வேறு பரிமாணங்களில் சாமானியர்க்குத் திருக்குறட் சிந்தனைகளை விளக்கி அழியாதத் தடம் பதித்துள்ளார் டாக்டர். சுப. அண்ணாமலை அவர்கள். இவர் கையாண்ட முறைகள் குறள் விளக்கக் கட்டுரைகள் எழுதுவோருக்குப் பயன்தரும்.

துணைநூற்கள்:

1. திருக்குறள் — உரை — அ. மாணிக்கம்.
2. உலகப் பொதுமறை திருக்குறள் விளக்கம் — திருக்குறள் — வீ.முனுசாமி — திருமகள் நிலையம் — சென்னை -1982.
3. திருக்குறள் சிந்த5னை — டாக்டர் சுப. அண்ணாமலை — வானதி பதிப்பகம் — சென்னை -1987.

முனைவர் இராம. மலர்விழிமங்கையர்க்கரசி, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை - 625009, தொடர்பு: malarmangay64@gmail.com



# திருக்குறளும் சட்டமும்

*கவிஞர்.முனைவர்.ப.பாலமுருகன்*

**முன்னுரை:**

*திருக்குறள் எழுதப்பட்ட காலம் கி.மு. முதல் நூற்றாண்டுக்கும், கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம் என்பது வரையறுக்கப்பட்டுள்ளது. திருக்குறள் அறக்கருத்துகளை உள்ளடக்கியது. உலக நாடுகளில் பயிலும் மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் என்பது இதன் சிறப்பைப் பறைசாற்றும். தமிழறிஞர்களில் திருக்குறளை எடுத்துரைக்காதவர் எவரும் இல்லை. ''இதில் இல்லாத பொருளொன்றில்லை'' எனவும், ''அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகுத்த குறளென்றும்'' இதன் சிறப்பை தமிழ்ப் புலவர்கள் கூறுவர். இதில் சட்டக் கருத்துகள் பொதிந்துள்ளன என்பதைக் காணப் புகுவோம்.*

**சட்டம்:**

*எந்த சமுதாயமும் இயங்க குடிமக்கள் தங்களது கடமையை செவ்வனே செய்ய வேண்டும். அதைக் கண்ணியத்துடன் செய்ய வேண்டும். அதையும் கட்டுப்பாட்டுடன் செய்ய வேண்டும். சட்டம் என்பது ''எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது, செய்ய வேண்டியதைச் செய்யாமலிருந்தாலோ, செய்யக் கூடாததைச் செய்தாலோ அதன் விளைவு என்ன" என்பதை வரையறுப்பதே சட்டம். எந்த சட்டமும் பொது அறிவுக்கு ஒவ்வாததாக இருக்க முடியாது. சட்டம் என்பது அரசின் கொள்கைகளுக்கு ஏற்றபடியே இருக்கும். அதனால் ஒரு காலத்தில், ஒரு பகுதியில் ஏற்கப்படும் சட்டம் பிரிதொரு காலத்தில் அதே பகுதியில் மறுக்கப்படலாம். ஒரே காலத்தில் இருவேறு பகுதிகளில் வெவ்வேறு சட்டங்கள் நிலையிலிருக்கலாம். ஆனால் எந்த சட்டமும் மக்களின் ஒழுக்கத்தையும், அறத்தையும் அடிப்படையாகக் கொண்டே இயங்கும்.*

**மாறாநெறி:**

*ஒழுக்கம் என்பது தனி மனிதனில் தொடங்கி சமுதாயத்தில் முடியும். அறம் என்பது நெஞ்சுக்கு நேர்மையானவற்றைச் செய்தல். ஒழுக்கமும், அறமும் நிறைந்த சமுதாயமே கேடில்லாதது. அதுவே உயர்ந்தது. உலகம் கேடின்றி இயங்க ஒழுக்கமுடன் கூடிய அற நெறியே மாறா நெறியாகப் போற்றப்பட்டது. உலகில் பல அறிஞர்கள் தோன்றி இதை வலியுறுத்தி வந்துள்ளனர். அவர்களில் திருவள்ளுவர் கி.மு. நான்காம் நூற்றாண்டிலேயே வடித்துத் தொகுத்து இதை உலகுக்கு வழங்கினார் என்பதே பீடு! முப்பாலிலும் அறநெறிக் கருத்துகளே விரவிக்கிடக்கின்றன. எத்திறத்து அரசுக்கும், எவ்வகைக் குடிகளுக்கும், எக்காலத்துக்கும் பொருந்தும் சட்டக்கருத்துக்களை உள்ளடக்கியதே திருக்குறள்.*

**அறத்துப்பாலில் பயிலும் சட்டக்கருத்துக்கள்:**

*அறத்துப்பாலின் நான்கு இயல்களிலும் உள்ள 38 அதிகாரங்களில் உள்ள 380 குறள்களில் பாயிரத்தில் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் இறைமைத் தன்மை (Sovereignty), மதச்சார்பின்மை (Secularism), அரசியலமைப்பு நிலை (Constitution) ஆகியவை விளக்கப்படுகிறது. இவற்றுடன் வான் சிறப்பில் உலக உயிர்கள் ஒழுக்கமுடன் வாழ உணவு தேவை என்பதையும், அதற்குப் பயிர்த்தொழில் அவசியம் என்பதையும், அதற்கு மூலம் வான் மழை என்பதும் கூறப்படுகிறது.*

நீத்தார் பெருமையில் அறவோர் என்பவரே அந்தணர் என்பதும், பின்னர் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாசொல் இவற்றை நீக்குவதே அறம் எனக் கூறுவதும் காணக் கிடைக்கிறது.

இல்லறவியல், துறவறவியல் ஆகியவற்றில் இல்வாழ்வானின் கடமைகளில் ஒன்று துறவிகளைக் காப்பது என்பதையும், சீரிய ஒழுக்க வாழ்வை வாழ்பவன் வாழ்வாங்கு தெய்வத்துக்கு இணையாக வைக்கப்படுவான் என்பதையும் விளக்குகிறது. ஒழுக்க வாழ்வு குற்ற எண்ணத்தைத் தூண்டாது; குற்ற எண்ணம் இன்றேல் குற்றமோ, குற்றச் செயலோ இல்லை என்பது விளக்கப்படுகிறது. போலித் துறவிகள் நிலையை அடையாளம் காட்டும் வள்ளுவர், உலகம் பழிக்கும் தீய ஒழுக்கத்தை விட்டுவிட்டால் மழித்தலும், நீட்டலும் வேண்டாம் என்பதைக் கூறுகிறார். ஊழிற்கு புதிய விளக்கத்தை வள்ளுவர் காட்டும் பாங்கு வள்ளுவத்திற்கே உரிய சிறப்பாகும்.

**பொருட்பாலில் புகலும் சட்டக் கொள்கைகள்:**

பொருட்பாலில் காணும் ஏழு இயல்களில் எழுபது அதிகாரங்களில் 700 குறட்பாக்களில் கூறும் சட்டக்கருத்துக்கள் முக்காலத்துக்கும் பொருந்தும். சமுதாயத்திற்கும், அரசு இயற்றுவோருக்கும் உரிய அறக்கருத்துகளையும், வாழ்வியல் கோட்பாடுகளையும், ஒழுக்க நெறிகளையும், தலை சிறந்த உளவியல் ஞானியான திருவள்ளுவர் குறுகத்தரித்துக் கொடுத்திருப்பது தமிழின் பெருமை.

அரசன்; அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், தூங்காமை, கல்வி, கேள்வி ஆகிய பண்புடையவனாகவும், காட்சிக்கு எளியவனாகவும், கடுஞ்சொல் கூறாதவனாகவும் இருக்க வேண்டுவதையும் அவனுக்கு நல்ல படை, குடி, பொருள் ஈட்டும் ஆற்றல், நட்பு, அமைச்சு, அரண் ஆகியன அமைய வேண்டும் என்பதையும், கூறி, இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இன்றிக் கெடுவான் என எச்சரித்து, ஒருபாற் கோடாமல், குடிபுறங்காத்தோம்பிக் குற்றம் கடிந்து; கொலையிற் கொடியாரை ஒறுத்து; தக்காங்கு நாடி தலைச்செல்லா வண்ணம் ஒத்தாங்கு ஒறுத்து; சிறக்க வேண்டும் என்ற அறநெறிக் கருத்துகளை அரசனுக்கான விதிகளாக வகுத்துள்ள வள்ளுவம் வானுயர்ந்ததாகும்.

அரசனுக்குப் பக்கபலமாக அமைச்சன்; அறிவார்ந்த அவை; தூதர்; நட்பு முதலியவற்றின் ஒழுகலாற்றை வள்ளுவர் கூறியது நூலின் பெருமை. பொருட் பெண்டிரால் விளையும் கேட்டை விளக்கி, சூதின் தாக்கத்தைக் கூறிய பாங்கு போற்றுதற்குரியது. ஒழுக்கத்தின் மேன்மையை விளம்பி, பிச்சை எடுத்தல் சமூக இழிநிலை என்பதைக் கூறி நீதியை நிலை நாட்ட சட்டம் என்ற கருதுகோள் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை விளக்கி ஒழுக்கமே உயர்ந்த சட்ட நெறி என்பதை நிறுவிக்காட்டிய வள்ளுவம் இணையற்ற பெற்றியுடையதாகும்.

**இன்பத்துப்பாலில் இயம்பும் சட்டக் கோட்பாடுகள்:**

இன்பத்துப்பாலிலும் சட்டக் கருத்துகளை இயம்பும் வள்ளுவத்திற்கு ஈடு எந்த இலக்கியமும் இல்லை. இதில் காணும் களவியல், கற்பியல் ஆகியவற்றில் விலைமாதரும், பிறன் மனைப் பெண்டிரும் வள்ளுவரால் வெறுக்கப்படுகின்றனர். ஆண்களில் பிறன் மனை நோக்காதவனே பேராண்மையுடையவன் என வள்ளுவர் வகுக்கிறார். மனுதர்மத்திலும், இந்துச் சட்டத்திலும் பின்னாளில் தொகுக்கப்பட்ட திருமணங்கள் பற்றி அப்போதே அங்கீகாரம் கொடுத்த வள்ளுவரின் சமூக நீதி வெளிப்படையாகக் காணக் கிடைக்கிறது. கூடலின் முதற்படியே ஊடல் என்பதை, ‘‘ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம் கூடி முயங்கப்பெறின்’’ எனக் கூறிய பாங்கு எந்த இலக்கியத்திலும் காணக் கிடைக்காத ஒழுக்க நெறியாகும். வாழ்வாங்கு

வாழ்ந்து தான் கண்ட சமூக நெறிகளை, சட்ட நெறிகளை மனித குலம் மேம்படவே வள்ளுவர் வடித்தளித்துள்ளார் என்பது வெள்ளிடை மலை.

**முடிவுரை:**

திருக்குறளின் 1330 குறட்பாக்களிலும் சட்டநெறிகள் மிளிர்வது வெளிப்படும். இது முக்காலத்துக்கும் பொருந்தும் தன்மையுடையது. எந்த வகையான ஆட்சியாளரும், குடிகளும் கடைபிடிக்கத்தக்க உன்னதமான சட்டநெறிக் கருத்துகள் அமைந்த பெட்டகம் என்பதில் இருவேறு கருத்து இல்லை. திருக்குறள் சட்ட நெறிக் கருத்துகள் பொதிந்த மறை நூல் என்பதை இவ்வுலகம் ஏற்றுள்ளது தமிழுக்கும், தமிழருக்கும், மனித குலத்திற்கும் கிடைத்த வெற்றியாகும்.


உதவிய நூல்கள்:

- திருக்குறளும் சட்டமும்
- சங்கத்தமிழ் கூறும் சட்ட நெறி
- குறள் கூறும் சட்ட நெறி
- சட்டமும், சமுதாயமும்
- குறள் கண்ட வாழ்வு
- சங்க காலத் தமிழர் வாழ்வு
- பேரறிஞர்களின் திருக்குறள் சிந்தனைகள்
- திருக்குறளாராய்ச்சி
- குறள் கூறும் சமுதாயம்
- திருக்குறட் சிந்தனைகள்



கவிஞர்.முனைவர்.ப.பாலமுருகன்., M.A., M.L., M.Sc., M.Phil., Ph.D. வழக்கறிஞர் மற்றும் சான்றுறுதி அலுவலர், தலைவர், மேட்டூர் வழக்கறிஞர்கள் சங்கம்; செயற்குழு உறுப்பினர், தமிழ்நாடு & புதுச்சேரி வழக்கறிஞர்கள் குழுமம்; நிறுவனர், சட்ட ஆய்வு மையம்; நூலாசிரியர்: திருக்குறளும் சட்டமும்

# 11. திருக்குறளில் மேலாண்மை கருத்தமைவுகள்

*முனைவர் ச.குப்பன்*

**முன்னுரை:**

முதலில் தனித்தனியாக வாழ்ந்துவந்த மனித இனமானது பின்னர் குழுவாக வாழத்தொடங்கியபோதே தற்போது நம்மால் பயன்படுத்தப்பட்டு வரும் இந்த மேலாண்மை எனும் கருத்தினை பற்றி அறியப்படாமலேயே செயல்படுத்திப் பயன்பெறப்பட்டது என்பதே உண்மையான நிலையாகும். ஆயினும் நாமனைவரும் தொழிற்புரட்சிக்குப் பின்னரே இந்த மேலாண்மை எனும் கருத்து நடைமுறைக்கு வந்ததாகத் தவறாகப் பேசிவருகின்றோம் எனினும் தமிழ்நாட்டின் கிராமங்களில் வாழும் மக்கள் தங்களுடைய ஊரில் நடைபெறும் திருவிழாக்களில் அம்மக்களனைவரும் ஒன்றுகூடி குழுவாகத் தேர் ஒன்றினை தேரடியிலிருந்து இழுத்துச் சென்று ஊரைச்சுற்றி வலம் வந்து இறுதியாகத் தேரடிக்குக் கொண்டுசென்று சேர்க்கின்ற செயலே இந்த மேலாண்மைக்கு உரிய ஓர் எளிய எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறான மேலாண்மை (*management*) என்பது ஊழியர்களைக் கொண்டு அமைப்பொன்றின் சகல வளங்களையும் பயனுறுதிமிக்க வண்ணம் முறைப்படுத்தி வழிநடத்திச்செல்ல எடுக்கப்படும் நடவடிக்கைகளை விவரிக்கும் இயலாகும் என்று வரையறுக்கப்படுவதாகக் கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வமைப்பில் இத்தகைய நடவடிக்கையினை மேற்கொள்ளுபவர் மேலாளர் (*manager*) எனப்படுவார். இம்மேலாளர் ஒரு வேலையை அல்லது பணியைத் தாமே செய்வதில்லை மாறாக அவர் அந்த பணியை யாரால் சிறப்பாகச் செய்ய முடியும் என்பதை முடிவு செய்து அவர்களிடம் அப்பணியை ஒப்படைத்து அந்த பணியைச் செய்து முடிக்கச் செய்கின்றார்.

ஆயினும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர் திருக்குறளில் இந்த மேலாண்மையைப் பற்றிய பல்வேறு கருத்துகளைக் குறிப்பிட்டுள்ளார். அதாவது முந்தைய காலத்தில் நடைமுறையிலிருந்துவந்த இனக்குழுக்களின் தலைவரான மன்னர், வேந்தர், சான்றோன் எனப் பலவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ள திருக்குறளின் கருத்துக்கள் அத்துணையும் மேலாளர், செயல் அலுவலர் அல்லது தலைவர் என ஒரே நிலையில் வைத்துப் பொருள் கொள்ளப்பட்டிருந்தன. அதனால் தற்காலத்தில் அரசு, நிறுமம் ஆகியவற்றினை செயற்படுத்துவோரை, அரசருக்கு நிகராக எடுத்துக்கொள்ளலாம் அல்லவா. மிகமுக்கியமாகத் திருக்குறளின் பெருமை உலகம் அறிந்திராத காரணத்தினால்தான் மேலாண்மை பற்றிய வரைவிலக்கணங்களையே நாம் கல்வி நிலையங்களில் இதுவரை பயன்படுத்தி வந்துள்ளோம் . திருக்குறளில் இந்த மேலாண்மையானது எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என இப்போது காண்போம்.

**திட்டமிடுதல்(Planning):**

என்னசெய்ய வேண்டும் எவ்வாறு செய்யவேண்டும் எப்போது செய்யவேண்டும் எங்கே செய்யவேண்டும் யாரால் செய்யப்படவேண்டும் என்பவற்றை முன்கூட்டியே தீர்மானிப்பதே திட்டமிடுதலாகும் இவ்வாறான திட்டமிடுதலே மேலாண்மையில் முதன்மையான பணியாகும்.

முதல்இலார்க்கு ஊதியம்இல்லை மதலையாம்

சார்புஇலார்க்கு இல்லை நிலை (குறள்-449: அதிகாரம் - 45 - பெரியாரைத் துணைக்கோடல்)

ஒருநிறுவனத்தைத் துவங்கிநடத்துவதற்கு போதுமான முதலீடு இல்லையெனில் நிறுவனத்தினை நடத்தும்போது போதுமான வருமானமும் கிடைக்காது என நெற்றியடியாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மிகச்சரியாகத் திட்டமிடவேண்டும் எனக் கூறியுள்ளார் பார்த்தீர்களா!

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல் (குறள்-461: அதிகாரம் -47- தெரிந்து செயல்வகை)

நிறுவனத்தின் செயல் அலுவலர் ஒரு செயலை செய்வதற்கு முன் அதனால் என்னென்ன பாதிப்புகள் வரும் அதனால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என அதன் நன்மை தீமைகளை முன்கூட்டியே நன்கு திட்டமிட்டு அதனைச் செயற்படுத்திடவேண்டும் எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார் இன்றைய திட்டமிடுதலுக்கு இதற்குமுன் இதைவிட விரிவாக வேறுயாராவது கூறியுள்ளாரா பாருங்கள்.

**முடிவெடுத்தல்(Decision making):**

குறிக்கோளினை அடைவதற்கு அல்லது ஒருசெயலை செய்துமுடித்திடுவதற்கு கையிருப்பிலுள்ள பல்வேறு வழிகளில் சிறந்தவொரு வழியைத் தேர்ந்தெடுப்பதையே முடிவெடுத்தலாகும்.

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு (குறள்-631: அதிகாரம் - 64 - அமைச்சு).

ஒரு நிறுவனத்தை நன்கு செயல்படச்செய்வதற்கு உரியக் கருவி, உற்ற காலம், ஆற்றும் வகை, ஆற்றிடும் பணி ஆகியவற்றை ஆய்ந்தறிந்து செயல்படுபவனே அந்த நிறுவனத்தின் சிறந்த செயல் அலுவலர் ஆவார் எனக் கூறுகின்றது திருக்குறள்.

**செயற்படுத்துதல்(Execution):**

செயற்படுத்துதல் என்பது ஒருநிறுவனத்தின் பல்வேறு பணிகளில் எந்தெந்த பணியாளர்கள் எந்தெந்தப் பணியைச் செய்வார்கள் என ஒதுக்கீடு செய்து அந்த பணிகளை எவ்வாறு செய்வது என விளக்கமளித்து பணியாளர்கள் செய்திடும் செயலை மேற்பார்வையிட்டு அந்த செயல்களில் பிழைகள் இருந்தால் திருத்தம் செய்து நடைமுறைப்படுத்துவதாகும்.

பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல் (குறள் -675: அதிகாரம் - 68 - வினை செயல் வகை)

ஒருநிறுவனத்தின் தலைவர் ஒரு செயலில் ஈடுபடுவதற்கு முன்பு, அதற்குத் தேவையான பொருள், ஏற்ற கருவி, காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தையும் குறைவில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் எனத் திருவள்ளுவர் கூறுகின்றார்.

**ஊக்கமளித்தல்(Motivation):**

ஒரு நிறுவனத்தில் அந்நிறுவனம் தீர்மானித்த குறிக்கோளினை அடைய அதில் பணிபுரியும் பணியாளர்களைத் தூண்டி செயல்படுத்துதலாகும்.

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது

*தள்ளினுந் தள்ளாமை நீர்த்து (குறள்- 596: அதிகாரம் - 60 - ஊக்கமுடைமை)*

ஒரு நிறுவனத்தின் செயல்படுத்தவிழையும் செயல் எண்ணங்களெல்லாம் அந்த நிறுவனத்தின் உயர்வைப் பற்றியதாகவே இருக்கவேண்டும்; அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதைக் கைவிடக்கூடாது. என்று ஊக்குவித்தல் பற்றிய கருத்துகள் திருக்குறளில் கூறப்பட்டுள்ளன.

**சந்தைப்போட்டியாளர்(Market Competitor):**

குறிப்பிட்ட பொருளை ஒன்றிற்கு மேற்பட்ட நிறுவனங்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்திடும்போது வாழும் மக்களுக்குக் குறைந்தவிலையில் தரமிகுந்த பொருளாகக் கிடைக்கின்றது இவ்வாறு ஒன்றிற்கு மேற்பட்ட சந்தையிடுபவர்களே சந்தை போட்டியாளர்களாவார்கள்.

*ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து*
*போற்றார்கண் போற்றிச் செயின் (குறள்-493: அதிகாரம் - 50 - இடனறிதல்)*

போட்டிமிகுந்த உலகில் ஒருநிறுவனமானது தன்னை நிலைத்து தக்கவைத்திடுவதற்காக மிகச்சரியான இடத்தை அறிந்து தம்மைக் காத்துக்கொண்டு செயல்பட்டது எனில், வலிமை இல்லாத நிறுவனமும் வலிமை உடைய நிறுவனமாக வெல்வது உறுதியாகும் எனத் திருக்குறள் கூறுகின்றது.

*வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்*
*பகைவர்கண் பட்ட செருக்கு (குறள்-878: அதிகாரம் - 88 - பகைத்திறந்தெரிதல்)*

ஒருநிறுவனமானது செயற்படுத்திடும் செயலை செய்யும் வகையை அறிந்து தன்னை வலிமைப்படுத்திக் கொண்டு தற்காப்புத் தேடிக் கொண்டால், போட்டியாளர்களும் தோழமையாளர்களாக மாறி விடுவார்கள் எனத் திருவள்ளுவர் கூறுகின்றார்.

**அதிகார ஒப்படைவு (Delegation of Power):**

ஒரு நிறுவனத்தின் ஒட்டுமொத்த பணிகளும் பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு யார்யார் எந்தெந்த பணியைச் செய்வார்கள் எனத் தெரிவு செய்து பணி ஒப்படைக்கப்பட்டு அவரவர்கள் பணியை முடிப்பதற்கான அதிகாரங்கள் வழங்கப்படுவதே அதிகார ஒப்படைவு என அழைக்கப்படும்.

*இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல் (குறள்-517: அதிகாரம் - 52 - தெரிந்துவினையாடல்)*

ஒரு நிறுவனத்தின் குறிப்பிட்ட பணியை இந்திந்தக் கருவிகளால் இவரிவர் முடிப்பார் என்று ஆராய்ந்த பிறகு அந்தந்த பணியை அவரவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கருத்தினை திருக்குறளில் காணலாம்.

**தலைமைப் பண்பு(Manager's quality):**

குழுவான பணியாளர்களின் ஒட்டுமொத்த பணியே நிறுவனத்தின் செயலாகும் இவ்வாறான குழு உறுப்பினரை வழிநடத்திச் சென்றிட அந்நிறுவனத்திற்குத் தலைமை நிருவாகி ஒருவர் இருப்பார். அவருடைய செயலானது அந்த நிறுவனத்தை மிகச்சரியாக வழிநடத்திச் செல்வதாகும்.

*விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது*

சொல்லுதல் வல்லார்ப் பெறின் (குறள் - *648:* அதிகாரம் - *65* - சொல்வன்மை)

நிறுவனத்தின் தலைவர் தன்கீழ் பணிபுரியும் பணியாளர்களிடம் தான் கூறவிழையும் கருத்துக்களை ஒழுங்காகக் கோத்து இனிமையாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால், அந்நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் விரைந்து அவருடைய ஏவலைக் கேட்டு நடப்பார்கள் எனத் திருக்குறளில் கூறப்பட்டுள்ளது.

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின் (குறள்-*708:* அதிகாரம் -*71*-குறிப்பறிதல்)

ஒருநிறுவனமானது அந்நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களின் உள்ளக் குறிப்பை நோக்கி உற்றதை உணரவல்லவரைப் பெற்றால்(அவரிடம் எதையும் கூறாமல்) அவருடைய முகத்தை நோக்கி நின்றால் போதும். அந்நிறுவனத்தின் செயல் சிறப்பாக அமையுமெனத் திருவள்ளுவர் கூறுகின்றார்.

**தகவல் தொடர்பு(Communication):**

பொதுவாக ஒருநிறுவனத்தில் நடைபெறும் செயல்கள், அதனைப்பற்றியக் கருத்துக்கள் ஆகியவற்றைச் செய்திகளாக மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதே தகவல்தொடர்பாகும்.

உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று (குறள் -*718:* அதிகாரம் -*72* - அவையறிதல்)

உணர்ந்து கொள்ளக்கூடிய ஆற்றல் உள்ளவர்களின் முன்னிலையில் பேசுதல், வளரக்கூடிய பயிர் உள்ள பாத்தியில் நீர் பாய்ச்சுவது போலப் பயன் விளைக்குமெனத் தகவல் தொடர்பைப் பற்றிய கருத்துகளைத் திருவள்ளுவர் வழங்குகின்றார்.

**ஆட்களைத் தெரிவுசெய்தல்(Staffing):**

திறமை வாய்ந்த பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்து அவர்களை முழுமையாகப் பயன்படுத்தி நிறுவனத்தின் நோக்கங்களை அடைவது பணியாளர்களின் தேவைகளை மனநிறைவு செய்து தக்கவைத்துக் கொள்வது மேலாண்மையில் நடைமுறையின் ஒருபகுதியாகும்.

அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும் (குறள்-*501:* அதிகாரம் - *51*- தெரிந்து தெளிதல்)

நிறுவனத்தின் பணியாளர்கள் அறவழியில் உறுதியானவர்களாகவும், பொருள் வகையில் நாணயமானவர்களாகவும், இன்பம் தேடி மயங்காதவர்களாகவும், தங்களுடைய உயிருக்கு அஞ்சாதவர்களாகவும் சம்பள உயர்வு தராத நிறுவனத்தின் பணியைத் தடுப்போம் என்றில்லாது அனைவரும் இணைந்து இருக்கும் பணிகளை ஆய்ந்தறிந்து யார்யாரை எந்தெந்தப் பணியில் அமர்த்த வேண்டும் என்பதே மேலாண்மையின் ஒரு பிரிவான ஆட்களைத் தெரிவுசெய்வதற்கான சிறந்த வழிகாட்டியாகுமெனத் திருவள்ளுவர் கூறியிருக்கின்றார்.

**முடிவுரை:**

தற்போது நாமனைவரும் மேலைநாட்டினர் கூறிய மேலாண்மை கருத்துகளை இதுவரை யாருமே கூறவேயில்லை என்று பின்பற்றிடும் நம்முடைய தவறான கண்ணோட்டத்தை விட்டுவிட்டு சங்க இலக்கியத்தில் அதிலும் திருக்குறளில் இன்றைய நவீன உலகிற்கேற்ற மேலாண்மைக்கான பல்வேறு கருத்துகள் உள்ளன என்பதைத் தெளிந்து அறிந்து அவற்றைப்

*பயின்று அதில் கூறியுள்ள கருத்துகளைப் பின்பற்றி நம்முடைய நிறுவனங்களின் வளர்ச்சியை உறுதிசெய்துகொள்வோம்.*

*மேற்கோள்கள்:*
*1. திருக்குறள் புதியஉரை -உரையாசிரியர் - புலியூர் கேசிகன், பூம்புகார் பதிப்பகம்.*
*2. மேலாண்மை தத்துவங்கள் - தமிழ்நாடு அரசு மேல்நிலை முதலாம் ஆண்டு- தொழிற்கல்வி வெளியீடு.*

*முனைவர் ச.குப்பன், Bcom,FCMA,ACS*
*ஊரப்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம் - 603210*
*தொலைபேசி: +91 9442694956*
*தொடர்பு: kuppansarkarai641@gmail.com*

----------------

# வாழ்த்து

*வள்ளுவன் தன்னை உலகிற்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு என பாராதியாரும், வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே என பாரதிதாசனும் புகழ்ந்து பாடியுள்ளனர்.*

*குறள் வழிச் சென்றால் உலகிற்கு நன்னெறி காட்டியவர்கள் என்ற பெருமையை அடையலாம் என்றார் தந்தை பெரியார்.*

*இந்த வரிசையில் தமிழ் மரபு அறக்கட்டளை சார்பில் ஜெர்மனியில் திருவள்ளுவர் சிலையை நிறுவி தமிழை பெருமைபடுத்தும் தமிழ் மரபு அறக்கட்டளையை தமிழன் வீரம் விளைந்த மண் அலங்காநல்லூரில் இருந்து வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.*

*இந்நிகழ்ச்சிக்கு தொடர்ந்து முயற்சி எடுத்த தலைவர் முனைவர். சுபாஷினி அவர்களுக்கும் ஜெர்மனியில் உள்ள அனைத்து தமிழ் சகோதர சகோதரிகளுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும் வணக்கத்தையும் தெரிவித்து கொள்கிறேன்.*

*முடியாது என்பது மூடநம்பிக்கை!*
*முடியுமா? என்பது அவநம்பிக்கை!*
*முடியும் என்பதே தமிழ் மரபு அறக்கட்டளையின் தன்னம்பிக்கை!*

*வாழ்த்துகளுடன்,*
*நல்லாசிரியர்*
**முனைவர்.தா.காட்வின் வேதநாயகம் ராஜ்குமார்**
*அலங்காநல்லூர், மதுரை மாவட்டம்*

# 12. திருக்குறள் அமைதி

முனைவர் செங்கைப் பொதுவன்

தமிழில் நெடில் எழுத்துக்கள் 133 (உயிரில் 7 + உயிர்மெய்யில் 18 x 7). திருக்குறளின் பத்துகள் (அதிகாரங்கள்) 133. தமிழ் அ-இல் தொடங்கி ன்-இல் முடிவதுபோல் திருக்குறளும் அமைந்துள்ளது என்பவை யாவும் பலர் அறிந்த உண்மை.

பலர் அறியாததும் ஒன்றுண்டு. தொல்காப்பியர் ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம் என்னும் மூன்று எழுத்துக்களையும் மொழியைச் சார்ந்து ஒலியளபு குன்றிப் பிறக்கும் சார்பெழுத்து என்கிறார். இந்த எழுத்துக்கள் ஒலியளபு குன்றியும் குன்றாமலும் வரும் என்பதைக் காட்டும் ஒரே இலக்கியம் திருக்குறள்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்" (226) என்னும்போது அலகு பெறும் உயிரெழுத்தாகவும், "கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்" (575) என்னும்போது அலகு பெறாத மெய்யெழுத்தாகவும் ஆய்த எழுத்து திருக்குறளில் வருகிறது.

"வாய்மை எனப்படுவ தியாதெனின்" (291) என்னும்போது குற்றியலிகரம் மெய்போல் அலகு பெறவில்லை. "நெடுஞ்செல்வம் நீடின் றியாங்கே கெடும் (566) என்னும்போது உயிர்போல் அலகு பெறுகிறது.

திருக்குறள் கூறும் அறம் நாம் வாழவேண்டிய ஆறு (வழி). பொருள் நாம் மதிக்கவேண்டிய பொருண்மைப்பண்பு. காமம் நாம் துய்க்கவேண்டிய இன்பநெறி.

இவற்றைத் தருவது நம்மால் அறியமுடியாத இறையாகிய மரபுக்கூறு. இது நமக்குள் ஆதிபகவாகவும், அறிவாகவும், சூழலில் மலர்வதாகவும், வேண்டும் வேண்டாம் என்ற உணர்வு முதலானவையாகவும் உள்ளது. கண்ணுக்குத் தெரிந்த மழை நம்மை நெறிப்படுத்தும். நீத்தார் வாழ்ந்துகாட்டி நம்மை நெறிப்படுத்துவர். அறவலிமை நிலையானது. மறம் அழியும். இவை நான்கு மறைநிலைகள்.

1. மனைவி, மக்கள், விருந்து, முதலானோரைத் தழுவி வாழ்ந்து, ஈகையால் புகழைத் தேடுவது இல்லறம். அருள், தவம், வாய்மை முதலான பண்புகளுடன் வாழ்ந்து ஊழ்வலிமையை உணர்த்துவது துறவறம்.

2. நம்மைப் பாதுகாக்கும் பொருளாக அமைவன அரசர், நண்பர், பெரியார், சான்றோர் முதலானோர். மானம், குடிமை முதலான பண்புகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும். கள், களவு, சூது, மடி, பொச்சாப்பு போன்றவற்றை நாம் விலக்கவேண்டும். நல்குரவு தாக்கும்போது ஆள்வினை வேண்டும்.

3. இன்பம் என்பது மனம் ஒத்த ஆணும் பெண்ணும் கூடித் திளைக்கும் இன்பம்.

காதல் கண்ணில் பிறக்கிறது. "கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும்" (1101) வரிசையில் அது அமைகிறது. நீத்தார் என்னும் இல்லறத் துறவிக்கு அது சுவைப்புலனில்

தொடங்குகிறது. ‘‘சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்’’ (28) என்னும் வரிசையில் அமைகிறது. ஐம்புலனை வள்ளுவர் வகைப்படுத்திக் காட்டும் நுட்பம் இது.

‘‘ஊழிற் பெருவலி யா உள’’ (380) என வினவி இல்லை என்று கூறிய வள்ளுவர் ‘‘தாழாது உஞற்றுபவர் ஊழையும் உப்பக்கம் காண்பர்’’ (620) என்கிறார். ஊழை வெல்லமுடியாது. என்றாலும் ஒதுக்கி நிறுத்துவர் என்பது தீர்ப்பு.

குணமும் குற்றமும் நாடி அவற்றுள் மிகுதியானதை எடுத்துக்கொள் (504) என்ற வள்ளுவர் நன்மையும் தீமையும் நாடி, தீமை மிகுதியாக இருந்தாலும் குறைவாக உள்ள நல்லனவற்றை எடுத்துக்கொண்டே ஒருவனை நடத்தவேண்டும் (511) என்கிறார். இது வள்ளுவர் காட்டும் வாழ்வியல் மாண்பு.

எனவேதான் திருக்குறள் வாழ்க்கைக்கு ஒளி தரும் விளக்கம் என்பார் டாக்டர் மு.வரதராசனார்

தமிழறிஞர், வித்துவான், முனைவர். செங்கைப் பொதுவன், மேனாள் விரிவுரையாளர், தமிழ் விக்கிப்பீடியா தமிழ் எழுத்தாளர், தொடர்பு: podhuvan9@gmail.com



# 13. திருக்குறளில் அச்சம்

*முனைவர் ஐ.பிரேமலதா*

**முன்னுரை:**

*அச்சம் மனிதன் தோன்றிய நாளிலிருந்து அவனிடம் இருக்கும் ஒரு இயல்பான குணம். ஆதிமனிதன் விலங்கு, இயற்கை, இழப்பு போன்றவற்றிற்காக அச்சப்பட்டான். பின்னாளில் அரசு என்ற அமைப்பு உருவாகி, தவறிழைக்கும்போது தண்டனை கிடைக்கும் என்ற அச்சத்தை அவனுக்குள் ஏற்படுத்தியது. திருக்குறளில் அஞ்சவேண்டியவை குறித்த பதிவுகள் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.*

*திருக்குறளில் அச்சம் என்னும் சொல் வருமிடங்கள் அஞ்சப்படும் (2), அஞ்சல் (3), அஞ்சற்க (1), அஞ்சா (5), அஞ்சாதவர் (1), அஞ்சாது (1), அஞ்சாமை (3), அஞ்சார் (1), அஞ்சான் (2), அஞ்சி (7), அஞ்சக (1), அஞ்சான் (2), அஞ்சி (7), அஞ்சுக (1), அஞ்சுதும் (1), அஞ்சுபவர் (2), அஞ்சுபவர்க்கு (1), அஞ்சும் (9), அஞ்சுபவன் (1), அஞ்சுவது (3), அஞ்சுவர் (1), அஞ்சுவார் (1), அஞ்சுவான் (1), அச்சம் (3), அச்சமே (1) என்று 51 இடங்களில் உடன்பாட்டு, எதிர்மறைப் பொருள்களில் பயின்று வருகிறது.*

*உடன்பாட்டுப்பொருளில் அஞ்ச வேண்டியவை குறித்தும் எதிர்மறைப்பொருளில் அஞ்ச வேண்டாதவை குறித்தும் வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.*

*அச்சமே கீழ்மக்களின் ஆசாரம் (108:5) என்றுரைத்தாலும் அஞ்ச வேண்டியதற்கு அஞ்ச வேண்டும் என்கிறார். அஞ்சவேண்டியவை பற்றி மட்டும் இங்கு காணலாம்.*

## 1. ஆசை அச்சம்:

*விருப்பு வெறுப்புகளிலிருந்து மனம் விடுதலையடைய வேண்டும். ஆசை, பற்று இவை இரண்டும் ஒரு மனிதனைத் துன்பத்தில் சிக்க வைக்கின்றன. ஆசை என்பது ஒரு பொருளை அடைய வேண்டும் என்ற எண்ணமாகும். அப்பொருளை அடைந்தவுடன் அதன்மேல் ஏற்படுவது பற்று ஆகும். ஆசைப்பட்டு அடைந்தது தன்னை விட்டுச் சென்று விடக் கூடாது என்ற எண்ணமே அச்சத்தை ஏற்படுத்துகிறது. ஆசையின் காரணமாக அச்சம் ஏற்பட்டு, மன உறுதி குலைகிறது. ஒருவன் ஆசைக்கு அஞ்சி வாழ்வதே அறம் (366).*

*நீர்ச்சுழலில் மாட்டிக் கொண்டவன் மீள முடியாதது போல், ஆசைச் சுழலில் சிக்கிக் கொண்டவனும் மீள முடியாது. வாழ்க்கைக் கடலை கடக்க நினைப்பவன், ஆசைகளைக் கடக்காவிட்டால், மனத்துயரங்கள் என்ற கரைகளும் உயர்ந்து அவனை மூழ்கடித்து விடும். எனவே தான் வள்ளுவர், ஒருவனை வஞ்சித்துக் கெடுக்கும் ஆசையைக் கண்டு அஞ்சி வாழ்வதே அறம் என்கிறார். ஒரு பொருளைத் தொலைத்து விட்டால் மன வருத்தம் ஏற்படுகிறது. அந்த பொருளின் மீதுள்ள ஆசையை விடுத்து, அதைத் துறந்து விட்டால் மனம் மகிழ்ச்சியடையுமே தவிர வருத்தம் அடையாது. தொலைந்த பொருள் குறித்து வருத்தப்படுவது இழத்தல் என்னும் பிரிவை நினைத்து ஏற்படுகிறது. தொலைந்த பொருள் மீதுள்ள பற்றை நீக்கி, துறந்து விட்டால், துறத்தலினால் மன நிறைவு ஏற்படுகிறது. எனவே தான் அவா அறுத்தல் என்ற அதிகாரத்தையே வள்ளுவர் அறத்துப்பாலில், துறவறவியலில் வைத்துள்ளார். ஆசைகளை ஒருவன் ஒழிக்காவிட்டால், தொடர்ந்து துன்பங்கள் ஏற்பட்டு, பிறக்காமலே இருந்திருக்கலாம் என்று இந்த வாழ்வின் மீதே வெறுப்பு ஏற்பட்டு விடும்.*

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும் (362)

எனவே, ஆசைப்பட வேண்டும் என ஒருவன் நினைத்தால் ஆசையின் மீது ஆசை இல்லாமலிருத்தல் வேண்டும் என்றே ஆசைப்பட வேண்டும். அப்படிச் செய்தால், அதைப் போல் ஒப்பற்ற செல்வம் இங்கு எதுவுமில்லை(363) என்கிறார். ஒருவன் இயல்பாகவே எழும் அடங்காத ஆசையை நீக்கி, வாழத் தலைப்பட்டு விட்டால், எப்போதும் நீங்காத இன்பத்தை இயல்பாகவே பெறுவான் என்பது இக்குறளின் கருத்தாகும். இந்த ஆசைதான் ஒருவனைக் கீழ்மகனாக்குகிறது. ஒரு பொருளைப் பெற்று, அதன் மீது பற்று கொண்டு, மேலும் பொருள்களைச் சேர்த்துக் கொண்டு ஆசையின்பால் மனதை அலைய விடுபவன், எங்கே பொருள்கள் தன்னை விட்டு நீங்கி விடுமோ என்று ஆசைப்பட்டுக் கொண்டே இருப்பான். எனவே தான் வள்ளுவர் தவறான வழியில் பொருளீட்டி சுக வாழ்வை அனுபவிப்பவன், அதன் மீதுள்ள அவாவினால், ஒழுக்கமாயிருப்பவன் போல் நடந்து கொள்வான். கயவர்களிடம் நல்லொழுக்கம் சிறிதாவது இருந்தால், அதற்கு ஆட்சியைப் பற்றிய அச்சமே காரணம் (1075) என்பார் வள்ளுவர்.

### 2. தீவினை அச்சம்:

வாழ்வை நேசிப்பவர்கள் தீய வினைக்கு அஞ்ச வேண்டும். பாவிகள்தான் தீவினை செய்வதற்கு அஞ்சமாட்டார்கள்.

"தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு" (201)

எம் அரசன் கொடுங்கோலன், கடுமையானவன் என்று மக்கள் சொல்லும் பழிச்சொல்லுக்கு ஆளாகக் கூடியவன், விரைவில் கெட்டொழிவான் (564).

மக்கள் காட்சிக்கு எளியனாக, கடுஞ்சொல் இல்லாதவனாக, இனிய சொல் பேசுபவனாக இருக்கும் தலைமையை விரும்புவார்கள். அவ்வாறின்றி,

"கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும் (குறள் 566).

கடுஞ்சொல்லை உடையவனாக, இரக்கமற்ற கொடிய குணம் உடையவனாக, குடிகள் படும் வருத்தத்தைக் கண்கொண்டு பார்க்காதவனாக இருப்பானாகில், மக்களை வருத்தி பெற்ற அவனுடைய பெருஞ்செல்வம், நீடிக்காமல் தேய்ந்து இல்லாமலாகி விடும். எனவே, குடிகளை வருத்தும் தீவினையை மன்னன் ஒரு நாளும் மேற்கொள்ளக் கூடாது. ஒரு நாட்டில் இயற்கை வளம் என்பது வளமல்ல. அந்நாட்டு இறை வளம் என்னும் அரசனின் மன வளமே உண்மையான வளமாகும்.

### 3. பழி அச்சம் (Domestic):

இல்வாழ்வானுக்குரிய பண்புகளைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து, இல்வாழ்வான் பொருள் சேர்க்குமிடத்து, அறமற்ற வழியில் பொருளீட்டக்கூடாது. தீய வழியில் பொருளீட்டினால் பழி வந்து சேரும் என அஞ்ச வேண்டும். வரவுக்குத் தக்க செலவு செய்து, பகுத்துண்பதை மேற்கொண்டால் எப்பழியும் வந்து சேராதென்கிறார்(44). இல்வாழ்வான் தீயவழியில் பொருளீட்டத் தூண்டும், மனைவியைக் கண்டு அஞ்சி நடந்தால், அவனுக்கு இம்மையும், மறுமையும் துன்பமே வந்து சேரும். அவன் செயல்திறமுடையவனாக இருந்தாலும் சான்றோரால் பாராட்டப்படாது (904) தீயவழி வரும் பொருளால் வரும் பழியைக் கண்டும் மனைவியின் வழிநின்று நடப்பதால் வரும் பழியையும் கண்டு ஒருவன் அஞ்ச வேண்டுமென்கிறார்.

**4. பிறன்மனை நோக்கும் அச்சம் (Not coverting Another's wife):**

பிறன்மனை நோக்காப் பேராண்மை உடையவனாக இல்வாழ்வான் இருக்க வேண்டும். பிறன்மனையை நாடுபவன், பகையையும், பாவத்தையும், பழியையும், அச்சத்தையுமே பெறுவானேயன்றி இன்பத்தை ஒருநாளும் பெற மாட்டான். எனவேதான், பகை, பாவம், பழி, அச்சம் இவை வருதலால், பிறனில்விழைதல் வேண்டாம் என்கிறார்.

பகை பாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் காண் (146)

**5. சிற்றினஞ்சேரல்:**

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூ உம் இல் (460)

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பர் சான்றோர்கள். யாம் பெற்ற துன்பம் பெறுக இவ்வையகம் என்பர் சிறியோர்கள். எனவே, தான் நல்லவர்களைத் துணையாகக் கொள்வதைவிடச் சிறந்தது உலகில் எதுவுமில்லை. தீயவர்களைத் துணையாகக் கொள்வதை விடத் துன்பம் வேறு எதுவும் இல்லை என்கிறார். பெரியவர்கள் தீயவர்களைக் காணின் அஞ்சி ஒதுங்குவார்கள். ஆனால் அறிவில் சிறியரோ அத்தீயவர்களையே தம் சுற்றமாகக் கருதித் தம்முடன் சேர்த்துக் கொள்வார்கள்(451). அது மட்டுமல்லாமல் அச்சிற்றினத்தாரின் தன்மையைப்படியே செயலும், சிந்தனையும் மாறி விடும். அவர் தரப்பு நியாயமே நியாயம் என்று தோன்றத் தொடங்கிவிடும். மனத்தூய்மையும், தொழில்தூய்மையும் இரண்டும் ஒருவர் சேர்ந்த இனத்தின் தூய்மையை ஒட்டியே வரும் (455). சிறந்த கல்வியறிவுடையவராகவே இருந்தாலும், அவருக்கு அவர் சேர்ந்த இனத்தின் தொடர்பைப் பொறுத்தே புகழோ இகழோ கிடைக்கப் பெறும். எனவேதான், சேரிடம் அறிந்து சேர் என்கிறார்கள்.

**6. பகை அச்சம் - உட்பகை:**

மன்னன் நல்லாட்சி செய்பவனாக இருப்பினும், அவன் பதவி மேலும், அதிகாரத்தின் மேலும் ஆசை கொண்டவர்கள் மன்னனை அழிக்கவே நினைப்பார்கள். எனவே மன்னன் உட்பகையைக் கருத்தில் கொண்டு அப்பகைக்கு அஞ்சி, தன்னைக் காத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். நல்லாட்சி தரும் அரசனை மக்கள் போற்றுவர். ஒருவருக்கு ஏற்படும் புகழே சிலருக்குள் பொறாமையை ஏற்படுத்தி, உட்பகை தோன்றக் காரணமாகி விடும். எனவே தான் வள்ளுவர் உட்பகை என்று ஒரு அதிகாரத்தையே அமைத்தார். இன்பம் தரக்கூடிய நிழலும், நீரும் நோய் செய்வனவாக இருந்தால், அவையும் கூட உட்பகையே. இந்த நிழலும், நீரும் போன்ற உறவினர்களை விட வாள் கொண்டு தாக்க வரும் பகைவர்கள் மேலானவர்கள். நெருங்கிய உறவினர்களோடு உட்பகை தோன்றினால் அது ஒருவன் இறக்கும் வரையிலும் பலவாறான துன்பத்தைத் தந்து கொண்டே இருக்கும் (885). இப்படிப்பட்டவர்களின் பகையால் ஆட்சியின் அழிவு உறுதியாகிவிடும் (886).

செம்பு கூட இருவேறு உலோகத்தையும் இணைக்கும் தன்மை உடையது. ஆனால் சான்றோர் இணைக்க முற்பட்டாலும் வெளியில் கூடியது போல் இருப்பார்களே இன்றி, உள்ளுக்குள் பிரிந்தே இருப்பார்கள். உறவுக்குள் ஏற்பட்ட உட்பகையில் நந்திவர்மன் அழிந்த கதை நாடறியும் உட்பகை ஒரு குடிக்குள் நுழைந்து விட்டால் தங்கம் தேய்வது போல, அக்குடும்ப நலன்களும் நாளுக்கு நாள் தேயும் (888) உட்பகை, எள்ளின் அளவை விட சிறியதாக இருந்தாலும், அது சிறுபகை தானே என்று அலட்சியப் படுத்திவிடக் கூடாது. எள்ளின் பிளவை விடச் சிறியதாக உட்பகை இருந்தாலும், அது அணுவைப் பிளந்தாற்போல் அரசையே அழிக்க வல்ல பெருங்கேட்டை ஏற்படுத்தி விடும். உட்பகையைக் கண்டு மன்னன் அஞ்சுவதோடு,

*உட்பகை உள்ளவரிடம் பழகும் போது பாம்புடன் பழகுவதைப் போலவே பழக வேண்டும் (890) என்கிறார்.*

**முடிவுரை:**

*குடும்பத்திற்காகவும், சமுதாயத்திற்காகவும், நாட்டிற்காகவும் ஏற்ற நாகரிக மனிதமாக ஒருவன் உருவாக வேண்டுமெனில், அவன் அஞ்சத்தக்கவை, அஞ்சத்தகாதவை எவையென்று அறிந்து அதற்கேற்ப தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது என்பதையுணர்த்தவே வள்ளுவர் அஞ்சத்தக்கவைகளை எடுத்துரைத்துள்ளார். சமுதாய மாற்றத்தை அச்சத்தின் பொருண்மை மாற்றத்தினடிப்படையில் அனைத்து இலக்கியங்களிலும் உள்ளீடாகக் காண முடியும்.*

*துணைநின்ற நூல்:*

*கிருஷ்ணன்.பெ.(உ.ஆ) திருக்குறள், பாவை பப்ளிகேசன்ஸ், இராயப்பேட்டை,சென்னை -14*

*முனைவர் ஜ.பிரேமலதா, தமிழ் இணைப் பேராசிரியர், அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), சேலம் -636007. தொடர்பு: piyupremsurya90@gmail.com, தொலைபேசி: 9488417411*



இளம்தென்றல் இசைக்குழு ஜெர்மனி

தொடர்புக்கு: ஆ. சத்தியமூர்த்தி
தொ.பேசி எண்: 0049 152 18228800
மின்னஞ்சல்: moorthy.Ratingen@yahoo.de

# 14. திருக்குறளும் "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" பழமொழியும்

இலக்குவனார் திருவள்ளுவன்

பழமொழிகள் சில மூலப் பொருள்களிலிருந்து விலகி இன்றைக்குத் தனியான தவறான பொருள்களில் வழக்கத்தில் உள்ளன. அவற்றுள் ஒரு பழமொழியே "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" என்பது. இதனைப் பேச்சு வழக்கில் "ஆத்துல போட்டாலும் அளந்து போடு" என்றும் பெருவாரியாகக் கூறுகின்றனர். உண்மையில் இது பழமொழி அல்ல. திருவள்ளுவரின் திருக்குறளில் ஒன்றின் சிதைந்த வடிவமே ஆகும். அதனைப் பார்ப்போம்.

**முதலில் நாம் பழமொழிக்கான விளக்கங்களைக் காண்போம்.**

"இந்தப் பழமொழி நாம் வாழ்வில் கைக்கொள்ள வேண்டிய நல்ல கருத்தொன்றை வலியுறுத்துகிறது. நாம் எதைச் செய்தாலும் அளவறிந்து செய்ய வேண்டும். சிக்கனமாக இருக்க வேண்டும். வீண் செலவு செய்யக்கூடாது என்ற பொருளினை இப் பழமொழி கூறுகிறது என்பர்." இவ்வாறு அவினாசி குழந்தைகள் உலகம்வலைப்பூவில் < *https://avinashikidsworld.blogspot.com/* > தெரிவிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, "மேலும் இதில், மற்றொன்று வேறு வகையானது. ஆற்றில் கொண்டுபோய் விட்ட பிறகும் கூட நம் மனம் சும்மா இராது. இவ்வளவு பொருட்கள் தேவையில்லாமல் இவ்வளவு காலம் நம்மிடம் ஏன் இருந்தன? என்ற எண்ணம் ஏற்படும். இவற்றின் விளைவு தான் என்ன? நாம் எதைச் செய்தாலும் நிதானித்து, ஆர அமரச் சிந்தித்து, கணக்கிட்டுச் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பாடத்தை இப் பழமொழி நமக்குக் கற்பிக்கிறது. தேவையற்ற பொருள்களைக் கழிக்கும் போது கூட, சிந்தித்துத்தான் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முடிவாக, இதில் பின் வருமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

"இப் பழமொழிக்குத் தற்காலத்தில் புதியதோர் கருத்தும் கூறப்படுகிறது. ஆற்றில் போடுவது என்பதே தவறு. இதில் அளந்து போட்டால் என்ன? அளக்காமல் போட்டால் என்ன? எதுவும் நேர்ந்து விடாது. எனவே நம்முன்னோர் இப் பழமொழியை முற்கூறிய கருத்தில் கூறவில்லை. அகத்தில் போட்டாலும் அளந்து போட வேண்டும் என்பதே இதன் உண்மையான வடிவமாதல் வேண்டும். அகத்தில் (வயிற்றுக்கு) போட்டாலும் (சாப்பிட்டாலும்) அளந்து போட வேண்டும் (சரியான அளவு சாப்பிட வேண்டும்). அளவுக்கு அதிகமாக உண்ணுதல் கூடாது. அளவுக்கு அதிகமாக (அளந்து உண்ணாமல்) உண்பதே பல வித நோய்கள் தோன்றுவதற்குக் காரணமாயமைகின்றதெனக் கூறப்படுகிறது. 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்ற பழமொழியும் அளந்துண்ண வேண்டியதன் அவசியத்தையே வலியுறுத்துகின்றது எனலாம். சுருங்கக் கூறின் எச்செயலைச் செய்யும் போதும் நிதானித்து, கணக்கிட்டுச் செய்யும் பழக்கம் நமக்கு ஏற்பட வேண்டும் என்பதையே இப் பழமொழி வலியுறுத்துகிறது எனலாம்."

மனதோடு மனதாய் < *http://manthodumanathai.blogspot.com/2008/08/blog-post.html* > என்னும் வலைப்பூவில் ". . . . அவாள்கள் பாசையில் ஆத்துல - வீட்டுல இதன் படி

வீட்டுக்கே -- குடும்பத்துக்கே - செலவு செய்தாலும் கணக்கிட்டுச் செய்ய வேண்டும்.'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்வருமாறு, நாகராச சோழன் எம்.ஏ.எம்.எல்.ஏ என்கிற அமாவாசை என்னும் முகநூல் பக்கத்தில் < *https://www.facebook.com/NakarajacolanMamlaEnkiraAmavacai/posts/461153967321913/* > *17.08.2013* இல் பதியப்பட்ட ஒன்று, பெண்மை வலைப்பூவில் , *https://www.penmai.com/* > *12.08.2015* இல் பகிரப்பட்டது.(மூலப்பதிவு வேறாக இருக்கும்.) ''. . . . இந்தப் பழமொழியில் நம் உடல் நலம் குறித்த இரகசியம் அடங்கி உள்ளது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? பழமொழியின் உண்மையான பொருள். "அகத்தில் போட்டாலும் அளந்து போடு..." இது, காலப்போக்கில் "ஆத்தில் போட்டாலும் அளந்து போடு" என்றானது. அதை நம் மக்கள் அழகு தமிழில் "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" என்று எழுதினார்கள்.

அகம் என்பது நம் உடலைத் தான் குறிக்கிறது. நம் உடலுக்குள் நாம் போடும் உணவைக் கூட அளந்து தான் போட வேண்டும் என்பதைத் தான் இந்த பழமொழி நமக்கு உணர்த்துகிறது.

"அகத்தில் போட்டாலும் அளந்து போடு...!" இவ்வாறு பழமொழியின் உண்மை வடிவமாக வேறொன்றைக் கூறுகிறது.

''ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு; குப்பையிலே போட்டாலும் குறிப்பேட்டில் பதிந்து போடு.'' இப்படியும் ஒரு விளக்கம் உள்ளது.

வலைத்தமிழ் பக்கத்திலும் தமிழிலக்கியம் வலைப்பூவிலும் இடம் பெற்ற மற்றொரு கருத்து; மேற்கூறியவாறான இரண்டையும் மறுத்துப் பின்வருமாறு விளக்குகின்றன.

''இப்பழமொழியில் வரும் ஆத்துல என்னும் கொச்சைச் சொல்லின் தூய தமிழ்வடிவம் அகத்தில் என்பதாகும். அகம் என்ற சொல்லிற்குப் பல பொருட்கள் உண்டெனினும் இப்பழமொழியில் வரும் பொருள் மனம் அல்லது நினைவு என்பதாகும். அகத்தில் போடுதல் என்பது நினைவில் வைத்தலாகும். அளந்து என்ற சொல்லில் எழுத்துப் பிழை உள்ளது. இது அறிந்து என்று வரவேண்டும். இவையே இப்பழமொழிக்கான திருத்தங்கள் ஆகும். தொடர்ந்து இதற்கான விளக்கம் அளிக்கப்பட்டுப் பின்வருமாறு முடிகிறது.

''இப்பழமொழியின் திரிபு வரலாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அகத்தில் -> அகத்தில -> அகத்துல -> ஆத்துல

சரியான பழமொழி: அகத்தில் போட்டாலும் அறிந்து போடவேண்டும்.''

தமிழ்ச்சுரபி வலைப்பூ, மருவிய பழமொழிகள் < *http://lifeoftamil.com/transformed-proverbs-1/* > முதலான சிலவற்றில் இதன் இறுதி விளக்கம் மட்டும் எடுத்தாளப்பட்டுள்ளது.

பொதுவாகத் தொன்மைக் கதைப்பொழிவு ஆற்றுவோர் நல்ல தமிழ்ப் பழமொழிகளையும் கருத்துகளையும் அறிவார்ந்து சொல்வதாகக் கருதித் தப்பும் தவறுமாக விளக்குவதைப் பழக்கமாகக் கொண்டுள்ளார்கள். புரியாத கருத்துகளாயின் மேலும் சிறப்பாகத் தவறாக விளக்குவார்கள். இப்பொழுது இணையத்தளம் கையில் சிக்கிவிட்டதால் தடி எடுத்தவன் தண்டல்காரனாக ஆளாளுக்குத் தம் விருப்பம்போல் எழுதுவோர் பெருகி விட்டனர். எனவேதான், இப்பழமொழி குறித்தும் வெவ்வேறான தவறான விளக்கங்கள்.

இவை தவறு என்றால் எது சரி என்கிறீர்களா? இப்பழமொழி அமையக்காரணமாக இருந்த திருக்குறள்தான்!

ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி (திருக்குறள், 477)

இக்குறள்தான் மக்கள் வழக்கில் தவறாக இடம் பெற்றுப் பழமொழியாக மாறிவிட்டது.

மணக்குடவர், "பொருளை அளவறிந்து கொடுக்கும் வழியாலே கொடுக்க; பொருளையுண்டாக்கி வழங்கும் நெறி அதவாதலால்." என்கிறார். பரிமேலழகர். "ஆற்றின் அளவு அறிந்து ஈக - ஈயும் நெறியாலே தமக்கு உள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கு ஏற்ப ஈக, அது பொருள்போற்றி வழங்கும் நெறி - அங்ஙனம் ஈதல் பொருளைப் பேணிக் கொண்டொழுகும் நெறியாம்" என விளக்குகிறார்.

காலிங்கர், "பொருள் வரலாற்றினது சிறுமை பெருமை அளவு அறிந்து அதற்குத் தக்காங்கு அரசர் யாவர்க்கும் ஈந்து ஒழுக;" என்கிறார். பரிதி. "ஏற்பவர் தமக்கு உதவுவாரா மாட்டாரா என் அறிந்து கொடுக்க" என உரைத்தார். பரிப்பெருமாளும் காலிங்கரும் 'வருவாய் அளவறிந்து ஈந்து ஒழுகுக' என்று பொருள் கூறினர். தமிழ்ப்போராளி பேராசிரியர் சி.இலக்குவனார், "தனக்குப் பொருள் வரும் வழியினை அறிந்து அதற்கு ஏற்பக் கொடுத்தல் வேண்டும். அங்ஙனம் கொடுத்தலே பொருளைக் காத்துக் கொண்டு கொடுத்து வாழும் நெறியாகும்" என்கிறார்.

தமிழ் மக்கள் கொடை மடம் மிக்கவர்கள். முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி மன்னன் போல், மயிலுக்குப் போர்வை அணிவித்த பேகன் மன்னன்போல் கொடுக்க எண்ணும் பொழுது அறச்சிந்தனையில் மட்டும் கருத்து செலுத்தி, பொருள் இருப்பு குறித்துக் கவலைப்படுவதில்லை. யாருக்கு, எதற்குக் கொடுக்கிறோம் என்றும் பொருட்படுத்துவதில்லை. ஆள்வோர் இவ்வாறு இருந்தால் அஃது அவர்களுக்கு மட்டுமல்லாமல் அவர்கள் ஆளும் நாட்டிற்கும் தீதாகும். எனவேதான் இக்குறளைத் திருவள்ளுவர் எழுதினார்.

திருவள்ளுவர் பொருள் வரும் வழி அறிந்து அதற்கேற்பக் கொடுப்பதை வரையறுத்துக் கொள்ளுமாறு தெரிவிப்பதாக அனைவரும் தெரிவித்துள்ளனர். யாருக்கு, எதற்குக்கொடுக்க வேண்டும் என ஆய்ந்தறிந்து அதற்கேற்பவும் கொடுக்குமாறு வலியுறுத்துகிறார். பொருத்தமில்லாதவர்க்கு, உண்மைத் தேவையில்லாதவர்க்கு, வேண்டப்படும் அளவிற்கு மிகையாக, வாரி வழங்கக்கூடாது. அவ்வாறு வழங்குவது வழங்கப்படுபவர்க்கும் நன்றன்று. ஆதலின் கொடுக்க வேண்டிய அளவை உணர்ந்து வழங்க வேண்டும் என்கிறார்.

சரி. இதற்கும் பழமொழிக்கும் என்ன தொடர்பு என்கிறீர்களா? பொறுங்கள். பார்ப்போம்.

ஆறு என்பதற்கு, வழி, வழிவகை, அறம், பயன், இயல்பு எனப் பல பொருள்கள் உள்ளன. எல்லாப் பொருள்களும் இக்குறளில் பொருந்துகின்றன. கொடுக்கும் வழியை, வழிவகையை, அறத்தின் தன்மையை, பயனை, இயல்பை அறிந்து தக்கவர்க்குத் தக்க அளவில் வழங்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

எனவே, பொருள் வரும் வழியையும் இருக்கும் அளவையும் உணர்ந்து கொடுக்க வேண்டிய வழிவகையையும் உணர்ந்து கொடுக்க வேண்டும் என்னும் நிதி மேலாண்மையை விளக்கும் குறளில் 'ஆறு' என்பதை நீரோடும் ஆறாகப் பிற்காலத்தில் தவறாகப் புரிந்து கொண்டனர். எனவே, ஆற்றில் அளவோடு போடவேண்டும் எனப் பொருத்தமில்லாக் கருத்தை உருவாக்கிக் கொண்டனர். எனவே, 'போட்டாலும்' என்பதைச் சேர்த்து ஆற்றில் போட்டாலும் என்று தொடங்கி 'அளவறிந்து ஈக' என்பதன் பொருளாக 'அளந்து கொடு' என்று சொல்லாமல், முன்சொல்லிற்கு ஏற்ப 'அளந்து போடு' என்று சொல்லி விட்டனர்.

"ஆற்றின் அளவறிந்து கொடு!" என்னும் பொருளே திரிந்து வழங்குவதை உணர்வோம்! திருக்குறளைப் போற்றுவோம்!

இலக்குவனார் திருவள்ளுவன், அகரமுதல இணைய இதழ் ஆசிரியர், thiru2050@yahoo.co.in

# 15. வள்ளுவர் என்றோர் ஆய்வாளர்

முனைவர். தேமொழி

'மெய்ப்பொருள் காண்பதறிவு' என உண்மை எதுவென்று ஆராய்ந்து அறிய விரும்புவது வள்ளுவர் வழி என்பதை நாம் அறிவோம்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (அறிவுடைமை: குறள் - 423)

என எச்செய்தியை எவர் சொன்னாலும் அது உண்மையா என ஆராய்ந்து அறிவதே அறிவுடைமை என்று வள்ளுவர் விளக்கும் குறள் 'அறிவுடைமை' அதிகாரத்தின் கீழ் இடம் பெறுகிறது. அது இன்றைய சமூக ஊடக புரட்டுச் செய்திகளைப் பரப்புபவரிடம் மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லும் குறளாக அதிகம் பயன்படும் நிலைக்கும் வந்திருக்கிறது. மெய்ப்பொருள் ... உண்மை; அந்த உண்மை என்ன என அறிவதே அறிவுடைமை. அதற்குத் தேவை ஆய்வு மனப்பான்மை, ஆய்வுக்கான வழிமுறைகளை அறிந்திருக்கும் நிலைமை. சொல்வனவற்றின் நம்பகத்தன்மை குறித்து ஐயத்துடன் நோக்கும் மனப்பான்மை.

சமயவழியில் பயணிப்போர் தொன்மக் கதைகளைக் கேட்டுப்பழகி அவற்றை நம்பியதன் காரணமாக ஆராயும் மனப்பான்மையைப் பலநூற்றாண்டுகளாகக் கைவிட்டு விட்டனர். அத்தகைய பயிற்சிமுறையின் விளைவு இன்று மக்களிடம் சொன்னதைக் கேள்வி கேட்காமல் ஏற்றுக் கொள்வது, நம்புவது என்ற ஒரு மனப்பான்மையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வழக்கம் முன்னுள்ள ஒரு ஆடு சென்றால், அது சென்ற வழியில் சிந்திக்காமல் மற்ற ஆடுகளும் செல்லும் ஒரு ஆட்டுமந்தையின் இயல்பில் மக்களைக் கொண்டு வந்து விட்டுள்ளது.

இக்குறள் பிறர் கூறுவதில் உள்ள உண்மைகளைக் கண்டறிய வலியுறுத்துவது போலவே 'மெய்யுணர்தல்' அதிகாரத்தின் மற்றொரு குறள் எந்தப் பொருள் எத்தன்மையதாகத் தோன்றினாலும் அந்தப் பொருளின் உண்மையான குணத்தினை உணர்ந்து கொள்வதே அறிவுடைமை என்று மீண்டும் அறிவுறுத்துகிறது.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (மெய்யுணர்தல்: குறள் - 355)

உண்மை அறிதலே அறிவுடைமை என்பது இதனால் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. இதற்கு மாறாக, மாற்றுக் கோணத்தில்,

மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர் (இகல்: குறள் - 857)

என்ற குறள், ஆராய்ந்து உண்மை காணவிரும்பாதோரைக் குறித்துச் சொல்கையில்; மேன்மை தரும் உண்மைப் பொருளை அறிய விரும்பாது இருப்போர் மாறுபட்ட சிறுமதி கொண்ட அறிவற்றவர் என்கிறது.

ஆராய்வதை வள்ளுவர் பல வகையான சொற்களில் கூறுகிறார். 'ஆய்' 'ஆயும்' 'ஆய்ந்து' 'ஓர்ந்து' 'தேர்ந்து' என்ற சொற்கள் 'ஆராய்ந்து' செய்தல் என்ற பொருளில் திருக்குறளில் இடம் பெறுகின்றன. தேராது, ஓராது, நாடாது - போன்ற சொற்களும் 'ஆராயாமல்' செய்தல் என்ற பொருளில் குறட்பாக்களில் பயின்று வருகின்றன.

ஆராய்பவர் கொள்கை அல்லது கோட்பாடு என்னவாக இருக்க வேண்டும் வள்ளுவர் கூறுவதை மற்றொரு குறளின் வழி அறியலாம்.

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள் (வினைத்திட்பம்: குறள் - 662)

ஆய்ந்தவர்-ஆராய்ந்தவர்; கோள்-கோட்பாடு. எனவே இக்குறளின் கருத்துப்படி, பொதுவாகத் தொலைநோக்குடன் சிந்தித்தலும், இடையூறு ஏற்படுகையில் தளராது இருப்பதும் ஆய்வாளர் நெறி என்று இக்குறள் மூலம் அறியலாம். செயல்வழி நடைமுறையில் செயலை முடிக்கும் வகையில் ஆய்ந்தவர் கொள்கையானது செயல் ஆற்றும்போது இடையூறு வரும் என முன்னே அறிந்து அந்த இடையூற்றை நீக்குதலும், இடையிலே ஊறு நேரின் அதற்குத் தளராதிருத்தலும் ஆகிய இந்த இரண்டுமாகும். ஆகவே, இதுவே ஆராய்ந்து அறிய விரும்புவோரிடம் நிலவ வேண்டிய வினைத்திட்பக் கொள்கை இக்குறளின் கருத்து எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை,

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் (தெரிந்து வினையாடல்: குறள் - 517)

என்ற குறள் விளக்குகிறது. ஒரு செயலை எந்தெந்த வழிமுறைகளால் எவரால் சிறப்பாகச் செய்து முடிக்க முடியும் என்பதைக் கண்டறிந்து (ஆய்ந்து-ஆராய்ச்சி செய்து) அதை அவரிடம் ஒப்படைக்கவேண்டும். இது நடைமுறை வாழ்க்கையில் நாம் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் மற்றொரு சூழ்நிலை. இன்றைய நவீனக் காலத்தில் ஆய்வுக்குரிய நெறிகள் முறையாக வகுக்கப்பட்டுள்ளன. தனது ஆய்வுக் கேள்விக்கான உண்மையை அறிய ஆய்வாளர்கள் தரவுகளைத் திரட்டும்பொழுது அத்தரவுகளின் உண்மைத்தன்மை அறிவது இன்றியமையாதது என்பது ஆய்வுமுறையின் அடிப்படை. ஆய்வின் கேள்வியொன்று செய்தி 'அகச்சான்றுகள்' மற்றும் 'புறச்சான்றுகள்' கொண்டு சரிபார்க்கப்பட்டு அதன் உண்மைத்தன்மை மதிப்பிடப்படும்.

எடுத்துக் காட்டாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் யவனருடன் கடல்வழி வணிகம் செய்ததாகக் கூறப்படுவது உண்மையா என்று நாம் அறிய விரும்புவோம் என்று கொள்வோம். இந்த ஆய்வுக் கேள்விக்கான தரவை சங்க இலக்கியத்தில் தேட முற்படுவோம் . எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் குறிப்பிடும்,

"சுள்ளியம் பேரியாற்று வெண்நுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி ஆர்ப்பெழ வளைஇ" (அகநானூறு: 149, 8-11)

என்ற பாடல் வரிகள் தமிழர் யவனர்களுடன் வணிகம் செய்தார் என்ற சங்க இலக்கியப் பாடல் தரும் சான்றாகும். இச்சான்று அகச்சான்று வகையில் அடங்கும். இலக்கியம் தமிழரின் கடல் வணிகத்தைக் கூறுகிறது என்று நாம் சான்றுடன் குறிப்பிடலாம்.

இத்துடன், ரோமாபுரிப் பேரரசின் வரலாற்றுக் குறிப்பொன்றில், தமிழக முத்துக்களை ரோமப்பேரரசின் பெண்கள் அதிகம் வாங்கி அலங்கரித்துக் கொள்வதால் அவர்களின் அரசின் பொன் அதிக அளவில் தமிழகத்திற்கு வருகிறது. இதைத் தடை செய்யவேண்டும் என்று பிளினி (*Pliny the Elder, in 77 CE, called India "the sink of the world's gold!"*) என்பவர் குறிப்பிடுவது வெளியிலிருந்து நமக்குக் கிடைக்கும் புறச்சான்று. இதனால் தமிழரும் யவனரும் வணிகத்தில் ஈடுபட்டனர் என்று இருவேறு தரவுகள் மூலம் உறுதிப்படுத்தப் படுகிறது. இங்கு இருவேறு கோணத்தில் கிடைத்த தரவுகள் ஒப்பிடப்படுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் யவனர்களுடன் கடல்வழி வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பது தமிழ்ப் புலவர்களின் கற்பனை அல்ல என்பது தெளிவாகிறது.

'டிரையாங்குலேஷன் ஆஃப் டேட்டா' (*triangulation of data*) என்ற தரவுகள் உறுதிப்படுத்தும் மற்றொரு முறையில் மூன்றாவதாகவும், மற்றொரு சான்று வேறொரு கோணத்தில் அதே செய்தியை உறுதிப்படுத்த வேண்டும் (*Triangulation refers to the use of multiple methods or data sources in qualitative research to develop a comprehensive understanding of phenomena - Patton, 1999*). இதனை மும்முனைத் தரவு ஆய்வு முறை எனலாம்.

தமிழரின் பண்டைய கடல்வழி வணிகத்திற்கான மூன்றாம் கோணத்தில் கிடைக்கப்பெற்ற தரவு குறித்துத் தேடுவோமானால், இந்திய-ஐரோப்பியக் கடல்வழிப் பாதையில், இடையில் உள்ள ஓமன் நாட்டில் கிடைத்த "ணந்தை கீரன்" என்று 'தமிழி' எழுத்தில் கிடைத்த மட்பாண்ட ஓடு அதே காலகட்டத்தில் கிடைக்கும் ஒரு தொல்லியல் சான்று (*Carrer & Gheller, 2015*). இது தமிழரின் கடல்வழி வணிகத்தை மூன்றாவது கோணத்திலும் உறுதி செய்துவிடுகிறது.

இது போன்று தகவலின் உண்மைத்தன்மையை வேறுபட்ட பல மூலங்களில் கிடைக்கும் தரவுகளை ஒப்பிட்டு நம்பகத்தன்மையை மதிப்பிடும் முறைகள் இன்றைய காலத்தின் ஆய்வுநெறிக்கான புத்துருவாக்கம் என நாம் கருதுவோமானால், திருவள்ளுவர் 'ஒற்றாடல்' அதிகாரத்தில் எழுதியுள்ள குறட்பாக்கள் சொல்லும் கருத்துக்களை நாம் மீள்பார்வை செய்ய வேண்டும்.

தரவுகளின் உண்மை அறிய வள்ளுவர் காட்டும் வழிமுறைகளை இனி காண்போம். ஒரு அரசர் ஒற்றர் மூலம் அறியும் உளவுச் செய்தியை எவ்வாறு ஆராய வேண்டும் என்று அறிவுறுத்த விரும்பும் வள்ளுவர்,

ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல் (ஒற்றாடல்: குறள் - 588)

என்கிறார். ஒரு உளவாளி சேகரித்துச் சொன்ன செய்திகளை மற்றொரு உளவாளி மூலம் முன்னர் கிடைத்த ஒற்றுச் செய்தியினை ஒப்பிட்டு நோக்கி உண்மை அறிய வேண்டும் என்பது குறள் சொல்லும் கருத்து. ஒரு ஒற்றர் சொல்லும் உளவுச் செய்தியை அப்படியே நம்பக்கூடாது, மற்றொரு ஒற்றர் கொண்டு வரும் செய்தியும் அதே தகவலைத் தந்தாலே அரசர் அதனை உறுதியாக நம்பி முடிவெடுக்கலாம்.

இவ்வாறு தரவுகளை ஒப்பிடச் சொல்லும் வள்ளுவர் அடுத்த குறளிலேயே மூன்றுகோணங்களில் அலசி ஆராயவும் (*triangulation of data*) சொல்கிறார்.

ஒற்றெற் றுணராமை ஆள்க உடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும் (ஒற்றாடல்: குறள் - 589)

ஒருவரை மற்றொருவர் அறியாத வகையில் மூன்று வெவ்வேறு ஒற்றர்களை ஒற்றறிய அனுப்பி, அந்த மூவரும் அறிந்து வந்து சொல்லும் கருத்தில் ஒற்றுமை இருப்பின் அதை உறுதியான உண்மை என அறியலாம் என்பது இந்தக் குறள் சொல்லும் கருத்து.

தரவுகளை ஆராய்வது போன்றே, ஆய்வு செய்யும் ஒருவர் தான் ஆய்வு செய்யும் புலத்தில் இதற்கு முன்னர் ஆய்வு செய்தோர் என்னென்ன கண்டுபிடித்து அறிந்து, அதைக் கொண்டு எந்தெந்த முடிவுகளை எடுத்தார்கள் என்பது குறித்த 'ஆய்வுப் பின்புலம்' (*Literature Review*) அறிந்திருக்க வேண்டிய தேவை இருக்கிறது. ஆய்வுக் கட்டுரை எழுதுபவர் அப்பொருள் குறித்து இதுவரை என்னென்ன கருத்துகள் உள்ளன என்று நூல்கள் பல படித்து, அக்கருத்துக்களை மீள்பார்வை செய்து, தனது தேடல் கேள்வி குறித்துத் தான் கண்டறிந்ததைக் கூறுவது ஆய்வின் நடைமுறை. இந்நாட்களில் முறையான ஆய்வுக் கட்டுரை எழுதும் கட்டமைப்பில் இது இன்றியமையாததாகவும் அமையும். இம்முறையை வள்ளுவர் குறிப்பிடுவதையும் காணலாம்.

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை

உள்ளறிவான் உள்ளம் கொளல் (வினைசெயல்வகை: குறள் - 677)

செய்ய வேண்டிய செயலைச் செய்கின்றவன் செய்முறையாவது, அச்செயலின் நுட்பங்களை முன் அறிந்தவன் கூறியவற்றைக் கருத்தில் கொள்வது ஆகும் என்பது இக்குறள் கூறும் கருத்து.

திருவள்ளுவர் ஆராய்ந்து அறிய வேண்டிய தேவை குறித்தும், எந்தெந்த சூழலில் கவனமாக ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும் என்றும், எத்தகைய ஆய்வு நெறியைக் கடைபிடிக்க வேண்டும் என்று பற்பல குறள்களில் விரிவாக விளக்குவதிலிருந்து வள்ளுவர் ஓர் சிறந்த ஆய்வாளராக இருந்திருக்கிறார் என்று அறிய முடிகிறது. அவ்வாறு உலக இயல்புகளைக் கவனமாக ஆராய்ந்த அவரது முடிவுகளே திருக்குறள்களாக மலர்ந்து உலகில் அனைவரும் பின்பற்ற வழிகாட்டியாக அமைந்துள்ளது.

ஆய்விற்குத் துணை செய்தவை:


1. எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், அகநானூறு பாடல் (149. பாலை).
2. *Healy, John F. (1991). Pliny the Elder. Natural History: A Selection. (77 CE) (XXXII, chaps. 21, 23), p. 281. Penguin Books. ISBN 0-14-044413-0.*
3. *Realistic Evaluation, Michael Quinn Patton (1999), American Journal of Evaluation, Volume: 20 issue: 2, page(s): 385-388, Issue published: June 1, 1999*
4. *Francesco Carrer, Viola Gheller (2015), Invisible Cultures: Historical and Archaeological Perspectives, p.233. Cambridge Scholars Publishing.*
5. தமிழ் இலக்கியத் தொடரடைவு (*Concordance for Tamil Literature*). ஆக்கம் முனைவர்.ப.பாண்டியராஜா, *http://tamilconcordance.in/table-KURAL.html*
6. குறள் திறன் - *http://kuralthiran.com/Home.aspx*


முனைவர். தேமொழி, மேனாள் தொழில் முறை திட்ட ஆய்வாளர், ஒக்லஹோமா மாநில அரசு, யுஎஸ்ஏ ,தொடர்பு: *jsthemozhi@gmail.com*



# 16. Thirukkural and Morality

***Mrs.T.Bhawany***

*Thirukkural was a famous literary classical work written by the great poet Thiruvalluvar over 2500 years ago. It has 1330 couplets under 133 chapters, each chapter contains 10 verses. The 133 chapters are divided into 3 major divisions. The first one is ' ARAM' , that is ' VIRTUE' , it contains 38 chapters. The second one is ' PORUL' , called ' WEALTH' . It comprises 70 chapters. the last chapter called ' INBAM' , and it is about ' LOVE' . It contains 25chapters.*

*After The Bible, Thirukkural is the only work, which has been translated in many languages. This fact tells the widely acceptances of this work by the people all over the world.*

*Thirukkural is not just a book that emphasizes morality. It is one which speaks of practicalities of life as well. Though it was written two thousand years ago, the contents are still relevant for the twenty first century's man. Based on the fundamental truth that mankind is one, Tiruvalluvar has delivered his messages in the form of this treatise. He stresses that rather than wasting time with the differences arising from religion, caste, creed, race or morality, man should be viewed in the perspective of just being a man. He delivers this message throughout the book through varied angles.*

*The meaning of morality is very wide in its scope. To put it briefly, it can be stated that all that is good is moral. Discipline, custom, legal, duty, charity, good karma, Godliness, religion has been eight ways of defining the word morality. There have been some other ways of defining it as well. It is noteworthy that Thiruvalluvar perceives it using the terms lawful, renunciation, meditation, Godliness, moral literature and noble deeds.*

*During the era of Thiruvalluvar and during the years preceding his time people might have placed happiness as their highest ideal. They would have been willing to attain happiness at any cost. This perspective of a particular section of the ancient people becomes evident through a Kural which states it. Choosing to differ from this common perception, Thiruvalluvar played a major role in reversing the ideology by stating that morality deserves even more significance than happiness. He also stated that true happiness is one, which can be derived only through morality. He realized though happiness deserves importance in individual lives, when it comes to living as a society, morality deserves to be prioritised more and emphasized its importance.*

*Human life should not be something that is limited, confined to a small circle. It should expand and be one with significance. To expand the minds of humanity and to create a society based on morality has been the goal of Thirukkural."This is evident from Kural 34 which states what true morality is. Morality is when a person is guilt-*

*free even in his mind. A mind which is clean free from impurities is said to be moral. Since the mind is the birthplace of thoughts, when the mind is pure, it reflects through the word and deed. When something is spoken or some deed is done while harbouring negative thoughts, it cannot be called true morality.*"

*It is important that one must do acts of morality whenever possible to the best of his abilities continuously as and when one finds the opportunity for it.* "*Thirukkural also insists that we must carry out acts of morality to the best of our abilities using our faculties of mind, speech and body by leading family life within material limits, doing physical acts of morality depending on the physique and maintaining consistent habit of thinking morally.*" *Considering young age, many people tend to procrastinate acting morally. Instead of doing that, when we act morally in every instance, such acts will reap benefits that are sure to accompany us even in our deaths. He states that it is important not to wait for material wealth in order to do acts of morality. When this impermanent life comes to an end, not doing such acts will become a great regret that will haunt us in our deaths. Instead of even thinking about doing it shortly, it is ideal to do it even as we think of it.*

*Morality, materialism and love are the three explicit sections in Thirukkural. One might think that the author has not dealt about enlightenment. But enlightenment is something which should be attained practically through meditation under the guidance of a spiritual master who has attained perfection of consciousness. By regulated practice, when immersing the mind on the soul, the consciousness evolves and then by immersing the soul with God one should experience divinity. Thus the importance of enlightenment has been described in the section of Morality. Hence let us try to succeed in completely adhering to these principles and thereby live fulfilling lives.*

*REFERENCES:*

1. *Thirukkural, Vilakka urai, Prof. J. Sri chandran, Vardamanan printers, first edition — 2000,*
2. *Thirukkural, Vilakka urai, Thanga palamazhai, Thirukural kalaga arakkattalai, Thirukkovalur, first edition -2005.*

*Mrs.T.Bhawany, B.Sc (Agriculture), The Netherlands.*

# 17. வாழச் சொல்வது வள்ளுவம்!

**ஆர்.பாலகிருஷ்ணன் இஆப**

### *1. வாழச் சொல்வது வள்ளுவம்!*

*வள்ளுவன் என்பது ஒருமை தான்!*
*அதனால் என்ன?*
*வள்ளுவனிடம் நமக்கில்லாத உரிமையா?*
*ஒருமை அருமை!*
*அதுவே உறவின் பெருமை!*

*அறத்துப்பாலில் அறவோன்*
*பொருட்பாலில் அறிஞன்*
*காமத்துப்பாலில் கவிஞன்!*

*அடையாளங்களைக்*
*கடந்து நிற்கும்*
*அற்புதன்*
*வள்ளுவன்!*

*குறள்*
*ஒரு தனிமனிதனின் குரல் அல்ல!*
*ஓர்*
*உயர் நாகரிகத்தின் ஒட்டுமொத்த தெளிவின் திரள்!*
*வையத்துள் வாழ்வாங்கு வாழ*
*வழிநடத்தும் துணை! திருக்குறள்.*

*திருக்குறள்*
*தமிழ் மொழி*
*உலகிற்களித்த*
*உன்னதக் கொடை!*

*மெய்வருத்தி உழைக்கச்*
*சொன்ன*
*உன்னதம் குறள்!*

*மனித வளத்தின்*
*மகத்துவம் பேசிய*
*மகா சாசனம் திருக்குறள்!*

*உழவுத் தொழிலை*
*உச்சத்தில் வைத்த*
*சமூக விஞ்ஞானி வள்ளுவன்!*

*திருக்குறள் மந்திரமும் அல்ல*
*தந்திரமும் அல்ல*
*அது ஒரு சுதந்திரம்!*

### *2. திருக்குறள் ஓர் உலகப் பொதுமுறை!*

*திருக்குறளை*
*திருவள்ளுவ நாயனார்*
*அருளிச் செய்த*
*"தமிழ்வேதமாகிய" திருக்குறள்*
*என்றும்*
*அதனால் திருக்குறளை*
*"தமிழ்மறை" என்றும்*
*"உலகப் பொதுமறை" என்றும்*
*எழுதியும் பேசியும் வந்தவர்கள்/*
*வருகிறவர்கள்*

புரிந்து கொள்ளவேண்டிய
ஓர் உண்மை உண்டு.

அது மிக வெளிப்படையான
உண்மை.

"மறை"யாக இருக்கும்
எதுவும் "பொதுவாக"
இருப்பதில்லை.

பொதுவாக இருக்கும்
எதுவும் "மறை"யாக
இருப்பதில்லை.
இருக்கும்
தேவையும் இல்லை.

"மறை" என்பதை
வினைச்சொல்லாய்
எடுத்துக்கொண்டாலும்
பெயர்ச்சொல்லாய்
எடுத்துக்கொண்டாலும்
இது தான் உண்மை நிலை.

"மறை" "பொது"வாக
இருக்குமென்றால்
உலகில்
போர் என்பதே இருக்காது.

அது விரும்பத்தக்கது
எனினும்
எதார்த்த உலகில்
அது ஓர் அதீதக் கற்பனை.

அதனால்
பொதுமறை என்பதே
ஒரு
பொருள் முரண்.

வள்ளுவன்
மனிதம் பாடிய
மகா மனிதன்.

மறை இலக்கியங்களின்
நோக்கமும் ஆக்கமும்
வேறு.
திருக்குறளின்
செயற்களமே வேறு.

யாரும்
திருக்குறளை "மறை" என்று
சொல்வதாலேயே
அது
"மறை"யாகிவிடப்
போவதில்லை.
திருவள்ளுவர்
"மறை"யோர்
ஆகப்போவதும் இல்லை.

திருக்குறள் ஒரு
திறந்தவெளி இலக்கியம்.

திருக்குறள்
தந்திரமோ மந்திரமோ இல்லை.
சொல்லப்போனால்
அது சுதந்திரம்.

முறை என்பது
வழக்கம்.
முறை என்பது நெறி.
முறை என்பது ஒழுங்கு.

வாழ்க்கை முறை
ஆட்சிமுறை
நீதிமுறை
நெறிமுறை
ஒழுங்குமுறை
வரைமுறை
முறையீடு
மேல்முறையீடு
போன்ற சொல்லாட்சிகள்
நமக்குப் புதிதல்ல.

எனவே
திருக்குறளை
பொதுமறை என்பதை விட
பொதுமுறை என்பதே
பொருத்தம்.

# 18. திருவள்ளுவர் உருவ தோற்றம்

கௌதம சன்னா

தமிழர்களின் உலகு தழுவிய பெருமையாக என்றும் நிலைத்து இருக்கின்ற திருவள்ளுவர் பற்றின பல்வேறு வரலாற்றுத் தகவல்கள் ஆராயப்பட்டு வருகின்றன. அவற்றிற்கான முடிவுகள் முழுமையாகப் பெறப்படவில்லை என்றாலும், அங்கீகரிக்கப்பட்ட திருவள்ளுவரது கருத்துக்களுக்கு அவை ஒரு குறியீடாக மட்டுமே பார்க்கப்படுகின்றன. பார்க்க முடியும்.

திருவள்ளுவருடைய தத்துவத்தின் ஆளுமையும், உலகை மாற்றியமைக்க கூடிய அவரது வழிகாட்டும் கருத்துக்களும் அவரை உருவகப்படுத்த வேண்டிய தேவையைத் திருவள்ளுவர் தொடர்பான அறிமுகம் உருவான காலத்திலிருந்தே தொடங்கியிருக்கிறது. தொடக்கத்தில் திருவள்ளுவர் பற்றிய சித்தரிப்புக் கதைகளாகவே அவரைப் பற்றின உருவகங்கள் அமைந்திருந்தன. கி.பி.10ம் நூற்றாண்டில் எழுதியதாக கருதப்படும் திருவள்ளுவமாலை எனப்படும் தொகுப்பு, திருவள்ளுவர் பற்றின பல்வேறு அறிஞர்களின் சித்தரிப்புகளைக் கொண்டு அவரைக் காட்சிப்படுத்த முயல்கின்றது. இந்தச் சித்தரிப்புகளில் அவருடைய பங்களிப்பு மூலமாகவே அவரை உருவகப்படுத்த முயன்றிருக்கிறார்கள். அதற்குப் பிறகு கி.பி1792 இல் மெக்கன்சி சுவடிகள் வேதநாயகம் பிள்ளை எழுதின சுவடிகளில் இதற்கான விரிவான சித்தரிப்புகள் காணக்கிடைக்கிறன. இச்சுவடிகளைப் பார்க்கின்றபோது திருவள்ளுவர் பூணூல் அணிந்து ஒரு தவ முனிவரைப் போல காட்சியளிக்கின்றார் என உருவகப்படுத்த முடிகிறது. அதேநேரத்தில் அக்காலகட்டத்தில் அச்சு ஊடகம் பரவாத நிலையில் திருவள்ளுவர் உருவம் என்பது சித்தரிப்புகளாக மட்டுமே நிலைபெற்று விட்டன.

மயிலாப்பூரில் கண்டெடுக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையானது காலத்தால் மிகவும் பிற்பட்டது. திருவள்ளுவர் மயிலையில் பிறந்தார் என்று கட்டுக்கதைகள் உருவான பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இது உருவாக்கப்பட்டிருக்கலாம். நீட்டலும் மழித்தலும் வேண்டா என்று சொன்ன திருவள்ளுவருக்கு இப்படி ஒரு தோற்றம் தருவது என்பது ஏற்புடையதாக இருக்காது.



இந்த நிலையில் 1812 ஆம் ஆண்டு F.W.எல்லிஸ் அவர்கள் கந்தப்பன் அவர்கள் கொடுத்த ஓலைச்சுவடியின் மூலமாக திருக்குறள் மற்றும் திருவள்ளுவமாலை ஆகிய நூல்களைப் பதிப்பித்தார். தமிழ் வரலாற்றில் முதன்முறையாக திருக்குறள் தமிழில் அச்சேறியது ஒரு வரலாற்றுத் திருப்புமுனை என்றால் அது மிகையில்லை. எதிர்காலத்தில் இந்த நூல் மிகப்பெரும் தாக்கத்தை உருவாக்கும் என்று தன் மனக்கண்ணால் எல்லிஸ் நிச்சயம் பார்த்திருப்பார் எனத் தெரிகிறது. அதனால்தான் அவரும்

முதல்முறையாக திருவள்ளுவருக்கு ஒரு உருவத்தை கொடுத்திருக்கிறார். திருக்குறளையும் திருவள்ளுவரையும் வெளிக்கொண்டு வந்து மாண்பு படுத்தவேண்டும் என்கின்ற எண்ணத்தில் 1810க்கும் 1815க்கும் இடைப்பட்ட காலத்தில் நான்கு தங்க நாணயங்களை அச்சடித்து, அந்த நாணயத்தில் திருவள்ளுவர் உருவத்தையே பொறித்து அதை வெளியிட்டார். இந்தச் சிறப்பு மிக்க தங்க நாணயங்கள் தற்போது வட சென்னையில் உள்ள தங்கசாலை என்று அழைக்கப்படுகின்ற வள்ளலார் நகரில் அன்றைக்கு அமைந்திருந்த நாணய சாலையில் அச்சிடப்பட்டன. அந்த நாணயங்கள் சென்னை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டிருந்தன. இரண்டு நாணயங்கள் கல்கத்தா அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டன, மற்றவை லண்டன் விக்டோரியா அருங்காட்சியகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன என்று ஐராவதம் மகாதேவன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

எப்படிப் பார்த்தாலும் F.W.எல்லிஸ் அவர்கள்உருவகப்படுத்திய திருவள்ளுவர் உருவம் தான் முதல் திருவள்ளுவர் உருவம் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை. இதுகுறித்து அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் விரிவாக ஆய்வு செய்ததைப் போலவே இந்திய தொல்லியல் துறை ஆய்வாளராகப் பணியாற்றிய திரு. அன்பு பொன்னோவியம் அவர்களும் இது குறித்து பதிவு செய்திருக்கின்றார். இந்தியாவின் பெரும்பாலான தொல்லியல் ஆய்வுகளில் அரசு அலுவலர் என்ற முறையில் இவர் பங்கெடுத்திருக் கின்றார். அருங்காட்சியகங்களில் பொறுப்பாளராகவும் பணியாற்றியிருக் கின்றார். அப்படி பணியாற்றிய காலத்தில் தான் பார்த்த அந்த திருவள்ளுவர் நாணயங்களைத் துறையின் ஓவியர் ஒருவரை கொண்டு ஓவியமாக வரைந்து பின்பு அதை தான் நடத்திய இதழ் ஒன்றில் வெளிக்கொண்டு வந்தார். எல்லிஸ் நாணயம் பிற்காலத்தில் ஐராவதம் மகாதேவன் அவர்களால் புகைப்பட வடிவில் வெளியிடப்பட்டது போலவே அதற்கு முன்பு அந்த நாணயத்தின் வரையப்பட்ட ஓவியத்தை முதன்முறையாக அன்பு பொன்னோவியம் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்.( காண்க ஓவியம்)



திருவள்ளுவர் உருவம் பற்றின முதல் வரலாற்றுப் பதிவு இவர்களிடம் இருந்துதான் தொடங்கியது. அதே நேரத்தில் அவர்களின் பதிவுகளில் பார்க்கும்போது எல்லீஸ் வெளியிட்ட திருவள்ளுவர் குறிப்பு தான் திருவள்ளுவர் வடிவத்திற்கான முதல் உறுதிப்படுத்துதல் என்ற நிலையில் அமைந்திருந்தது.

F.W.எல்லிஸ் திருவள்ளுவர் உருவம் பொறித்த நாணயத்தை வெளியிட்ட பிறகு அக்காலத்தில் திருவள்ளுவர் உருவம் பற்றின தாக்கம் இருந்ததாக தெரிகிறது. காரணம் என்னவென்றால் F.W.எல்லிஸுக்குப் பிறகு திருக்குறளை அச்சிட்டு பதிப்பித்த பலர் தம்முடைய புத்தகங்களில் திருவள்ளுவரின் உருவத்தை வரைந்து அவர்களும் ஒரு வடிவத்தைத் தருவதற்கு முயன்றிருக்கிறார்கள். அந்த வடிவங்கள் அவர்கள் சார்ந்த மதத்தின் அடிப்படையில் அமைந்திருந்தன.



குறிப்பாக திருக்குறளைப் பதிப்பித்த சைவர்கள் திருவள்ளுவரை ஒரு சைவ முனிவராகவே காட்டுவதற்கு முயற்சித்திருக்கிறார்கள். அதனால் திருவள்ளுவருக்குப் பெரிய கொண்டையும், நீண்ட தாடியும், நெற்றியில் பட்டையும், கழுத்தில் உத்திராட்ச கொட்டையும், நெற்றியில் திருநீறு பூச்சும் கொண்டு அவருடைய உருவத்தை வரைந்திருக்கிறார்கள். இந்தப் பாணியை பின்பற்றித் தான் யாழ்ப்பாணத்தில் வைக்கப்படுகின்ற திருவள்ளுவர் சிலைகள் அனைத்தும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்த முற்போக்கு கருத்துக்களின் தாக்கத்தினாலும், மேற்கத்திய ஆய்வு முறையில் விசாரணை பார்வையினாலும் திருவள்ளுவர் உருவம் மீதான மதநம்பிக்கையை நீக்கம் பெறுவதற்கான வாய்ப்புகள் அமைந்தன. அந்த அடிப்படையில் மத நீக்கம் செய்யப்பட்ட திருவள்ளுவரின் உருவங்கள் சில வரையப்பட்டு தமிழகத்தில் பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன.

அதே நேரத்தில் திருவள்ளுவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த பழைய சைவ தோற்றத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டும், அவர் மீது இருந்த மத அடையாளங்களை நீக்கியும், கூடுதலாக வட நாட்டிலுள்ள பழைய முனிவர்களின் சிகை அலங்கார பாணியையும் பின்பற்றி திரு.வேணுகோபால் சர்மா வரைந்த திருவள்ளுவர் உருவம் தமிழக அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதுவே இன்றைக்கு அதிகாரப்பூர்வமான திருவள்ளுவரின் கற்பனை உருவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நியாயமாகப் பார்த்தால் திருவள்ளுவர் தொடர்பாக எந்தவித அடையாளமும் இன்றி எல்லீஸ் அவர்கள் வெளியிட்ட நாணயத்தில் உள்ள உருவத்தினை தான் முதல் உருவமாக வரையப்பட்டிருக்கும் வேண்டும். கெடுவாய்ப்பாக தமிழக அரசுகளும் அதை கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. அதற்குக் காரணம் நாணயத்தில் உருவகப்படுத்தப்பட்ட திருவள்ளுவரின் வடிவத்தில் தலை மொட்டையாகவும், தலைக்குமேல் குடையோடு தோளில் துண்டும் அணிந்த நிலையில் அமர்ந்து இருக்கக்கூடிய நிலையில்தான் திருவள்ளுவரின் உருவத்தை யூகித்துக் கொண்டார்கள். அது நாணயத்தைப் பார்க்கின்ற போது எடுத்த எடுப்பிலேயே தோன்றுகின்ற தோற்றமாக இருக்கலாம். அது மட்டுமின்றி அந்த நாணயத்தில் உள்ள உருவம் சமண தீர்த்தங்கரரின் உருவமாக இருக்கலாம் என்கின்ற பார்வையும் இதற்குள்ளே இருக்கிறது. திரு. அன்பு பொன்னோவியம் அவர்கள் முயற்சியினால் வரையப்பட்ட உருவத்திலும் இதே தோற்றம் தான் இருக்கின்றது.

எனவே எல்லீஸ் வெளியிட்ட நாணயத்தில் உள்ள உருவம் வரையப்பட்டது போலவோ அல்லது வரலாற்று ஆய்வாளர்கள் பார்த்த பார்வை போலவோ இருக்கிறதா என்கின்ற கேள்வியும் சந்தேகமும் எழுந்த நிலையில், அதை தீர விசாரித்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் இருந்தது. இது குறித்து நாங்கள் ஓவியக் கல்லூரியின் முன்னாள் முதல்வரும் தமிழ் மரபு ஓவியத் திறனில் நிபுணத்துவம் பெற்றவருமான பேராசிரியர் ஓவியர் சந்துரு அவர்களிடம் எல்லிஸ் நாணயத்தின் பெரிதாக்கப்பட்ட புகைப்படங்களையும் அதன் மின்நகல்களையும் அனுப்பி இதிலுள்ள படத்தை வரைந்து தர முடியுமா என்று கேட்டோம். அவரும் பல வார தீவிர ஆய்விற்குப் பிறகு நாணயத்தில் உள்ள ஓவியத்தை வரைந்து எங்களுக்கு அனுப்பினார். அந்த ஓவியத்தைப்



பார்த்தவுடன் எங்களுக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டானது. ஏனெனில் இதுவரையில் எல்லிஸின் நாணயத்தில் உள்ள உருவத்திற்கு மழித்த தலைதான் உருவாக்கப்பட்டிருந்தது. அதற்கு மாறாக ஓவியர் சந்துரு அவர்கள் வரைந்த ஓவியத்தில் தலையில் கொண்டையும் தலைக்குமேலே தெளிவான குடையும் இருப்பதை அந்த ஓவியம் காட்டியது. இதனால் பலமுறை அவரிடம் நாங்கள் கேட்டுக்கேட்டு தெளிவு பெற வேண்டியதாயிற்று. அவர் எந்த வகையிலும் தன்னுடைய கருத்தை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. எல்லிஸ் வெளியிட்ட நாணயத்தில் உள்ள திருவள்ளுவர் உருவத்தில் கொண்டை முடி இருக்கிறது என்ற உறுதியான முடிவை அவர் தெரிவித்து விட்டார்.

எனவே அந்தத் திருவள்ளூர் உருவத்தினைச் சிலை ஆக்குவது என முடிவு எடுத்தோம். அதையும் சந்ரு அவர்களே செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டோம். அவரும் அந்தச் சிலையை நேர்த்தியாக வடிவமைத்து திருவள்ளுவருக்கு உலகில் முதன்முறையாக கொடுக்கப்பட்டுள்ள உருவகத்தைச் சிலையாக வடித்தார் என்கின்ற பெருமைக்கு உரியவராக மாறியிருக்கிறார்.

இந்தச் சிலை அமர்ந்த நிலையில் அழகான வடிவத்தில் வலது கை தொடைமீது ஓய்வாக இருக்க, இடது கையில் ஓலைச்சுவடியும், தோளில் துண்டும், தலையில் அடர்த்தியான கொண்டையும், தலைக்கு மேலே குடையும் கொண்டு, பத்மாசன வடிவத்தில் அமர்ந்திருக்கின்ற தோற்றம்.

மேலும் இரண்டாவதாக வைக்கப்பட்டு இருக்கக்கூடிய நின்ற வடிவிலான சிலையும் ஓவியர் சந்துரு அவர்களே வடிவமைத்தார். இக்காலத்தில் வழக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கக்கூடிய திருவள்ளுவர் உருவம் இது. ஆனால் அவருடைய தோற்றம் பத்தாம் நூற்றாண்டுக்குப் பிறகான ஐம்பொன் சிலைகள் வடிவ அமைப்பையும், இடையில் துண்டையும், தோளிலே ஒரு கைத்துண்டையும் போட்டு இருக்கக்கூடிய தமிழ் உடை தோற்றத்தோடு வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு சிலைகளும் அவற்றின் தோற்றத்திலும் அதன் வரலாற்றுப் பின்புலத்திலும், மாறுபட்ட கவனத்தையும் தமிழின் பெருமையையும் பண்பாட்டையும் நிலை நிறுத்துகின்ற நோக்கிலும் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான் இவற்றின் சிறப்பு .

இந்த சிலைகளைத் தமிழ் கூறு நல்லுலகம் எவ்வாறு எதிர்கொள்ளும் எனத் தெரியவில்லை. மாறுபட்ட தோற்றங்கள் சிலரின் விமர்சனத்திற்கும் எதிர்ப்புக்கும் கூட உள்ளாகலாம். ஆனால் தமிழின், தமிழரின் பண்பாட்டு வடிவம் இவற்றில் காப்பாற்றப்பட்டுள்ளது என்கின்ற காரணத்தினால் பெரும்பாலான மக்கள் இவற்றை வரவேற்பார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இந்த வரலாற்று சிறப்புமிக்க அரிய முயற்சியை வெற்றிகரமாக நிறைவேற்றிய தமிழ் மரபு அறக்கட்டளைக்குத் தமிழகம் என்றென்றும் நன்றிக்கடன் பட்டிருக்கும் என நினைக்கின்றேன் அதுமட்டுமின்றி ஐரோப்பாவின் முதல் திருவள்ளுவரது ஐம்பொன் சிலைகளை நிறுவி தமிழ் உலகத்திற்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்த சிறப்பையும் தமிழ் உலகம் வரவேற்கும் என நம்புகின்றேன்.

# 19.வான்புகழ் வள்ளுவம்

*(Thirukkural: A critical appreciation)*

**பேராசிரியர், முனைவர் நா.கண்ணன்**

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு! என்பது பாரதி வாக்கு. வள்ளுவன் தன்னை தமிழனுக்கே தந்து வான்புகழ் கொண்டது என்று எழுதியிருந்தாலும் பொருந்தும். ஏனெனில், குறள் போன்ற ஓர் இலக்கியம் தமிழின் செல்வம். இத்தனை நூற்றாண்டுகள் ஆயினும், "தொட்டனைத்து ஊறும் மணற்கேணி" போல் தோண்டத்தோண்ட புதிய, புதிய அர்த்தங்கள் வந்தவண்ணமுள்ளன. காலம் கடந்த நிலையில் தமிழர்தம் கற்றல் திறன் கூடக்கூட குறளும் புதிய, புதிய அர்த்தங்களைக் காட்டுகிறது. குறளை வைத்து எத்தனையோ ஆய்வு நூல்கள் வந்துவிட்டன. எத்தனையோ கோணங்களில் குறள் அலசப்பட்டு விட்டது. மேனாள் இந்தியக் குடியரசுத்தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் இந்திய இறையாண்மை, குறிப்பாக இந்திய எல்லைப்பாதுகாப்பு விஷயத்தில் குறளே தன்னை வழி நடத்தியதாகக் கூறுவார். ஒரு அரசு எப்படி இருக்க வேண்டுமென்று குறள் காட்டும் நெறியில் இந்திய இறையாண்மை அமைந்தால் இந்தியா வல்லரசு ஆகும் என்பார் டாக்டர் கலாம். அதே போல் குறளில் பொருளாதார மேலாண்மை குறித்த கருத்துக்களை வைத்து அமெரிக்கத் தமிழர் ராம் மோகன் அவர்கள் குறள் எம்.பி.ஏ பாடத்திட்டத்தின் முன்மாதிரி என்பார். மருத்துவர் செம்மல் அவர்கள் திருக்குறள் எப்படி ஒரு நரம்பியல் நூல் என்று சமீபத்திய 9வது தமிழாராய்ச்சி மாநாட்டில் விளக்கினார். திரு.கோபி அவர்கள் காட்சிப்படுத்தும் நீயா, நானா? நிகழ்ச்சியில் ஒரு தமிழர் வள்ளுவன் நிச்சயமாக ஒரு விவசாயி என்றார். தமிழ் மரபு அறக்கட்டளை (www.tamilheritage.org) மின்னுலகில் வள்ளுவனுக்காக ஒரு மின்மண்டபம் கட்டியுள்ளது. அங்கு பேராசிரியர் வேணுகோபாலன் (நாகநந்தி) சென்னையில் திருக்குறள் பற்றிப் பேசிய தொடர் பேச்சுக்கள் ஒலிப்பதிவாக உள்ளன.

திருக்குறளுக்கு உரை எழுதிய எழுத்தாளர் சுஜாதா, வள்ளுவன் ஓர் நல்லாசான், ராஜதந்திரி, ஞானி, நல்ல காதலன், அன்புள்ள தந்தை என்பார். இவருக்கு குறளுக்கு விளக்கம் சொல்லும் அளவு தமிழக மண் பற்றிய புரிதல் இல்லை என்பதோர் வாதம். அதன்படி வள்ளுவன் தமிழ் மண்ணின் அடிமட்டத்து அறிவின் வெளிச்சம். தமிழக சாதீயத்தின் மேற்படியில் உள்ளோருக்கு இந்த மண் வாசனை பல நேரம் புரிவதில்லை எனவே குறள் தரிசனம் அவர்களுக்கு முறையாகக் கிட்டுவதில்லை என்பது எதிர்தரப்பு வாதம். உண்மையில் பெரியார் இயக்கம் வலுப்பெற்ற பின் திருக்குறளுக்கு உரை எழுதிய ஆசிரியர்களுள் பிரதானமாகப் பார்க்கப்படும் பரிமேல் அழகரையே விமர்சிக்கும் போக்கு வலுத்து வருகிறது. அதன்படி பரிமேல் அழகர் வைதீக பிராமணர்களின் நோக்குப்படி திருக்குறளுக்கு வேதம் சார்ந்த இந்துக் கண்ணோட்டத்தில் உரை எழுதிவிட்டார் என்பது குற்றச்சாட்டு. இதன் தீவிரம் தமிழ் மண் தாண்டி மலேசியாவில் வலுவாக வேர் ஊன்றியுள்ளது. அதன்படி வள்ளுவரை இந்துத்துவாவிடமிருந்து காக்கும் அறனாக குறளைத் தமிழ் மறை எனப்பிரகடனப்படுத்தும் போக்கு உள்ளது. இவர்களுக்கு வள்ளுவனின் கவிதை அழகோ, குறளின் இலக்கண அழகோ, இல்லை வள்ளுவத்தின் அழகியலோ முக்கியமில்லை. வள்ளுவன் தமிழன். வள்ளுவம் தமிழ் மறை. அதில் இந்துக் கருத்துக்களைக் காணக்கூடாது என்பது முக்கியமாகப்படுகிறது. சங்கத அறிவற்ற இம்மக்கள் வள்ளுவத்தில் சங்கதத்தின் ஆளுமை உள்ளது என்றெல்லாம் சொன்னால் கூட

இனமான உணர்வு குறைவான பேச்சு என்று சொல்கின்ற அளவிற்கு வள்ளுவரைக் காக்கும் போக்கு தென்படுகிறது.

எனவே வள்ளுவன் யார் என்பது சமகால அறிவுஜீவிகளுக்கு ஒரு சவாலான கேள்வியாக உள்ளது. வள்ளுவன் தமிழக சாதீயப்படி வள்ளுவர் குலத்தைச் சேர்ந்தவனா? அப்படியெனில், வள்ளுவனுக்கு எப்படி வேதவிசாரம் தலைப்பட்டது? வேத, உபநிஷத, புராணக்கருத்துக்களை எப்படி உள்வாங்கி எழுதினான்? இல்லையெனில் வள்ளுவத்திற்கு எப்படி வைதீக உரை சாத்தியப்படுகிறது? இது சாத்தியமே எனில், வள்ளுவருக்கு சங்கதம் நன்கு தெரிந்திருக்க வேண்டும். வடமொழி காவியப் பரிட்சயமும், தர்ம சாஸ்திரப்பரிட்சயமும் இருந்திருக்க வேண்டும். இன்றுள்ளது போல் அன்று இவ்விரு செம்மொழிகளுக்குள்ளும் பகைமை உணர்வு இல்லாது இருந்திருக்க வேண்டும். உண்மையில், வள்ளுவர் 137 வட மொழிச் சொற்களைப் பயன்படுத்துகிறார் என்று இலண்டன் சுவாமிநாதன் தனது இந்தியவியல் வலைப்பதில் சொல்கிறார். அவையாவன:

அகரம், அச்சு, அதி, அவி, அந்தம், அமிர்தம், அங்கணம், அரங்கு, அமர், அமரர், அமைச்சு, அரங்கு, அரண், அரசர், அவம்,அவலம், அவை, ஆசை, ஆகுலம், ஆசாரம், ஆதி, ஆணி, ஆயிரம், ஆயம், இசை, இந்திரன், இமை, இரா, இலக்கம்,உரு, உருவு, உலகு, உல்கு, உவமை, உறு, ஏமம், ஏர், கஃசு, கருமம், கணம், கணிச்சி, கதம்,காந்து, கலுழும், கவரி, கவுள், கழகம், களம், களன், கனம், காரிகை,கானம், காமம், காரணம், காமன், காலம், குணம், குடங்கர், குலம், குவளை, கூர், கூகை, கொக்கு, கோடி, கோட்டி, கோட்டம், சலம், சமன்,சிவிகை,சுதை,சூது,சூதர் , தகர், தண்டம், தவம், தானம், தாமரை, திண்மை, திரு, துகில், துலை,தூது, தெய்வம், தேயம், தேவர்,தொடி, தோட்டி, தோணி, தோள், நத்தம், நயம், நாகம், நாவாய், நாகரிகம், நாமம், நிச்சம், நீர், நுதுப்பேம்,பகவன், பக்கம், பகுதி, படாம், படிவத்தர், பதம், பயன், பரத்தன், பண்டம்,பளிங்கு, பள்ளி, பாக்கியம்,பாகம், பாவம்,பாவி, பூரியர்,பூசனை. புருவம், பூதம், பீழிக்கும் ,பீழை, புருவம், பூசனை, பூதங்கள் பேடி, பேய், மங்கலம், மடமை, மதலை, மயிர், மயில், மனம், மந்திரி, மணி, மதி, மா, மாடு, மாதர், மாத்திரை, மாயம், மானம், மீன், முகம், யாமம், வஞ்சம், வண்ணம்,வளை, வாணிகம், வித்தகர்.

மேலும் முதல் குறளிலேயே 'அகரம்' எனும் வடசொல்லைப் போட்டு, ஆதி, பகவன் என்று வடசொல்லிலேயே முடிப்பதால் வள்ளுவனுக்கு சமிஸ்கிருத ஞானம் இருந்திருப்பதை உணர முடிகிறது. மேலும் அவரது யாப்பு முறைகூட வடமொழி இலக்கியத்தின் சாயலைக் கொண்டுள்ளன என சுவாமிநாதன் சொல்கிறார். அதிகாரம் எனும் வடசொல்லும், குறளை அதிகாரங்களாகப் பகுக்கும் முறைமையும் வடமொழி, தென்மொழி பேதமற்ற ஓர் இந்தியப்பார்வையாகவே படுகிறது. எனவே அவரைச் சாதீயக் கண்ணோடு பார்த்தாலும் கூட வடமொழி ஞானம் என்பது தமிழ் மண்ணின் அடிமட்ட அளவுவரை நன்கு பரவி இருந்திருக்கிறது என்று தெரிகிறது. உண்மையில் வால்மீகி அடியொட்டி இராமாயணம் பாடிய கம்பனுக்கு வடமொழி அறிவு இல்லையென்று சொல்ல முடியுமா? இல்லை திராவிட வேதத்தைத்தமிழில் யாத்த ஆழ்வாராதிகளுக்கு வேதமும், வடமொழியும் தெரியாது என்று சொல்ல முடியுமா? ஆழ்வார் பன்னிருவரில் மூவரைத்தவிர மற்றவர் அனைவரும் சதுர் வர்ணம் எனும் கீழ் சாதியைச் சேர்ந்தவர்களே. எனவே வேதம் பார்ப்பனர் உரிமை எனும் கருதுகோள் இங்கு வலுவிழக்கிறது. வள்ளுவன் கையாண்ட பல கருத்துக்கள் வடமொழி நூல்களான பர்த்ருஹரியின் சதகங்கள், மனுதர்ம சாஸ்திரம், கீதை, தம்மபதம் ஆகியவற்றில் இருப்பதைச் சுட்டிக்காட்டி நிறைய கட்டுரைகள் வந்துவிட்டன.

வள்ளுவனின் குறளைப் பொதுமறை என்கிறோம். இது ஆங்கில செக்குலர் எனும் பதத்தைப் புரிந்து கொள்வது போல் அணுக வேண்டிய சொல். ஆனால் தமிழின் மறை என்று மலேசியாவில் சொல்லும் போது அது வேதம் சாராதது, இந்து தர்மங்களைச் சாராதது, பௌத்த, சமண மதங்களைச் சாராதது என்று காண்கின்றனர். இந்தியாவிலும் கூட செக்குலர் என்றால்

மதச்சார்பின்மை என்றே புரிந்து கொள்ளப்படுகிறது! ஆனால் பொதுமறை என்பதற்கு உண்மையில் என்ன பொருள்? குறளில் எல்லா சமயத்தினரும் காணக்கூடிய கருத்துக்கள் நிரம்பியுள்ளன என்றே பொருள். உதாரணமாக, அவரது தீவிரமான கொல்லாமை நெறியாலும், மலர்மிசை ஏகினான், ஐந்தவித்தான் போன்ற பதங்களாலும், அவர் காலத்தில் சமணம் பிரபலமாக இருந்த காரணத்தினாலும் அவரைச் சமணர் என்று சிலர் சொல்லுகின்றனர் (திருக்குறள்-சுஜாதா, யார் இந்த வள்ளுவர்?-வெங்கட் சுவாமிநாதன்-கணையாழி ஜனவரி 2000, சமணமும் தமிழும்-மயிலை சீனி வேங்கிசாமி).

வள்ளுவர் ஒரு பௌத்தர் என்று சொல்வாரும் உளர் (தமிழ் இணையக் கருத்துப் பரிமாறல்). ஜி.யூ.போப் என்பார் வள்ளுவர் ஆதி கிருஸ்துவர் என்று யூகிக்கிறார் (Sacred Kurral--Valluva Nayanar -Rev. G.U.Pope 1886). வள்ளுவரின் குறள் சைவ மறைகளுள் ஒன்றாக ஏற்கப் பட்டு அவருக்கு சைவக் கோயில் ஒன்றும் தமிழகத்தில் இருக்கிறது. வள்ளுவரின் இத்தன்மைகள் அவரை இஸ்லாமியக் கருத்துக் கொண்ட முதல் தமிழன் என்று சொல்ல வைத்துள்ளது (இணையக் கடிதங்கள்),

தமிழ் முனிவர் அகத்தியரின் மாணவர்களுள் ஒருவராகக் கருதப்படும் தொல்காப்பியர் அவர் காலத்தைய தமிழகத்தை நானிலமாகப் பிரித்து, "சிறப்புடைப் பொருளை முற்படக் கிளத்தல்" என்ற முறைப்படி முதன்மைப் படுத்தி, "மாயோன் மேய காடுறை உலகமும்" என்று சொல்கிறார். இது காட்டுவது என்னவெனில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே கண்ணன் வழிபாடு தமிழகத்தில் சிறப்புற்று இருந்தது என்பதுதான்.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் பனைக்கு முன்வரும் சொற்கள் புணரும் முறை கூறுமிடத்து, "கொடிமுன் வரினே யையவ னிற்பக் கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி" என்கிறார். ஒன்றை உதாரணமாகச் சொல்கிறோமென்றால் அது எல்லோருக்கும் புரியுமொன்றாக இருக்கவேண்டும் என்பது பொது அறிவு. இலக்கண உதாரணம் காட்டும் தொல்காப்பியர் கண்ணனின் மூத்தவரான பலராமனின் கோயில் கொடியாகிய "பனைக் கொடியை" மேற்கோள் காட்டுகிறார்.

வள்ளுவனின் குறள், "ஆயிரத்து முந்நூறு முப்ப தருங்குறளும் பாயிரத்தினோடு பகர்ந்ததற்பின்" என்று சங்கப் புலவர் நத்தத்தனார் சொல்வது போல் பாயிரத்தோடு தொடங்குகிறது. அது கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல்" என்பது. இது தொல்காப்பியம் சொல்லும் கொடிநிலை, கந்தழி, வள்ளி இவை மூன்றும் கடவுள் வாழ்த்தோடு கண்ணிய வருமே என்பதற்கு ஒப்ப அமைந்துள்ளது.

வள்ளுவர் காலத்திலும், அதற்கு முன்னும்,பின்னும் திருமாலை முழுமுதற் கடவுளாக் கொண்டு வாழ்த்தும் முறை இருந்து வந்துள்ளது. பதினென் கீழ்க்கணக்கு நூல்களில்ஒன்றான திரிகடுகம் கண்ணனை முதற்பொருளாகக் கொண்டு கடவுள் வாழ்த்துப் பாடுகிறது "மாயச் சகடம் உதைத்ததூஉம்-இம்மூன்றும் பூவைப் பூவண்ணன் அடி" என்று.

இதனால்தான் சங்கப் புலவரான பரணர், வள்ளுவனை வாழ்த்தும் போது "தேவரில் திருமால் எனச்சிறந்த தென்பவே பாவிற்கு வள்ளுவர்வெண்பா"என்கிறார்.

இந்த பின்புலத்தில் வள்ளுவனின் கடவுள் வாழ்த்தை ஒருமுறை பார்த்தால் அவர் பெயர் சொல்லாவிட்டாலும் ஒன்றைத் திரும்பத் திரும்ப சொல்வது தெரியும். அது

வால் அறிவன் நற்றாள் தொழா அர் எனின்
மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்
வேண்டுதல் வேண்டாமை இலான் அடி
தனக்குவமை இல்லாதான் தாள்
அற ஆழி அந்தணன் தாள்
எண் குணத்தான் தாள்
இறைவன் அடி

இறைவனின் திருவடித் தாமரைகளை வணங்குவதையே உயர்ந்த வழிபாட்டு முறையாக வைணவ மரபு கொள்கிறது (சடாரியை தலையில் ஏந்துதல் இன்றும் வழிபாட்டில் உள்ள ஒன்று). திருமால் மூன்றடியில் தாவி அளந்த திறனை முதல் மூன்று ஆழ்வார்கள் பாடல்களில் மட்டுமல்ல சைவ சித்தாந்தை நிறுவ வரும் திருமூலரும் மேற்கோள் காட்டுகிறார் என்பதை கவனிக்க வேண்டும். மேலும், திருமாலின் உறைவிடம் "பரம பதம்" ஆகும். இங்கும் வருவது இறைவன் அடிதான்! "சுடரடி தொழுது" என்று திருவாய் மொழியின் முதல் பாசுரம் சொல்கிறது.

வள்ளுவர் நாத்திகர்கள் இடையிலும் பிரபலமாக உள்ளார். அவருக்கு இன்று சிலை வைத்துள்ளது அப்படியான தொரு நாத்திகக் கட்சிதான்.

வள்ளுவத்தை ஆராய்ந்தவர்களுக்கு வள்ளுவத்திலுள்ள முரண்பாடுகளுக்கிடையில் வள்ளுவர் யார் என்று காண்பது பிரம்மப்பிரயத்தனமாகவே உள்ளது. வெங்கட் சுவாமிநாதன் சொல்லுவது போல், "குறள் 703 மற்றவர் மனத்தை அறியத் தெரிந்தவனை "யாது கொடுத்தும் கொள்" என்கிறார். அதாவது அவன் என்ன சம்பளம் கேட்டாலும் வேலைக்கு அமர்த்திக் கொள்" என்கிறார். பகைவன் நண்பனாக வரும் போது அவனுக்கு மிக நட்பு மாத்திரமே காட்டி ஒதுக்கு (830) என்கிறார் ஓர் இடத்தில். மற்றொரு இடத்தில் "பகைவனையும் நண்பனாகக் கொள்ளும் பண்புடையவரால்தான் உலகம் நிலைக்கிறது" என்றும் சொல்கிறார் (873). இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல் என்றும் சொல்கிறார். இம்மூன்றில் எங்கே வள்ளுவர் இருக்கிறார்?" இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகு இயற்றியான் என்று தார்மீகக் கோபத்தோடு கேட்கும் வள்ளுவர் வேறொரு குறளில் "இன்பம் ஒருவர் இரத்தல் (1052)" என்றும் சொல்லுகிறார். இரப்பார் இல்லையெனில் இவ்வுலக இயக்கமே மரப்பாவை இயக்கமாகிவிடும் (1058) என்றும் அதே அதிகாரத்தில் சொல்லுகிறார்.

இதுபோல் குறளை ஆயும் போது வள்ளுவர் ஒரு சிறுகதை ஆசிரியனுக்குரிய யுக்தியுடன் புனையும் ஒவ்வொரு கதையிலும் அவன் கதைக்கு உண்மையானவனாக இருப்பது போல் யாக்கும் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் உண்மையானவராக உள்ளார். எனவே வள்ளுவத்தில் நாம் காண்பது அவர் காலத்தின் ஒரு அதி அற்புத கண்ணாடி. அதில் அவர் வாழ்ந்த காலத்தையும், கண்ட காட்சிகளையும், கேட்ட தத்துவங்களையும் மிகத் திறமையாக பிரதிபலிக்கிறார் என்பதே. எனவே வள்ளுவன் யாரெனக் கேட்டால்?

வள்ளுவர் ஓர் நல்ல கவிஞர். குறட்பா எனும் வடிவைத் திறமையாகக் கையாண்டவர். அவரோர் நல்ல தொகுப்பாசிரியர். அவர் காலத்தில் கண்டு, கேட்டு, உள்வாங்கிச் சிந்தித்த கருக்களை பிற்காலத்தவருக்காக தொகுத்து அளித்தவர். வள்ளுவர் நல்ல ஆசிரியர், மாணவர், சிந்தனையாளர், கணவர், பெற்றோர்.

வள்ளுவம் 'மறை' அல்ல. அதுவொரு நீதி நூல், வாழ்வியல் நூல். அவ்வளவே. வள்ளுவரைத் தெய்வமென மதித்துப் போற்றும் போக்கு கேள்விக்கு உட்படுத்தப்பட வேண்டியது.

வள்ளுவர் ஓர் காலக்கண்ணாடி. அவர் காலத்தில் இந்திய உபகண்டத்தில் இருந்த வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுகிறார். எனவே அது முழுக்க தமிழ்ச் சிந்தனை என்பது போன்ற கூற்று பிழையுள்ளது. அது இந்தியப் பொதுமைக்குமான சிந்தனைக் கூட்டு.

வள்ளுவரை ஒவ்வோர் அதிகாரமாகப் பார்த்து தரிசிக்க வேண்டும். அதிகார முக்கியத்துவமே அவரது நோக்கு. அந்த அதிகாரப் பொருளை உயர்வாக எடுத்துப் பேசுவார். அது வேறோர் அதிகாரத்தில் குறைவாகச் சுட்டப்படலாம்.

வள்ளுவனை வழிபடவோ, முழுமையாகப் பின்பற்றவோ முடியாது. ஏனெனில் வள்ளுவன் மனிதனை தெய்வ நிலைக்குக் கொண்டு செல்ல முயல்கிறான். அதி உன்னத மனிதனை உருவாக்க முயல்கிறான். அவன் தரக்கட்டுப்பாட்டிற்குள் விழ வேண்டுமென எண்ணுபவன், 'அக்னிப்பரிட்சையில்' இறங்குகிறான். வள்ளுவனின் ஓரிரு வாழ்வியல் நெறிகளைக் கடைப்பிடித்தால் அதுவே பெரிது.

திருக்குறளின் கவிநயம் பேசப்பட வேண்டும். அவனது சொல்லாட்சி கண்டு மகிழ வேண்டும். தமிழின் சீரிளமைக்கு வள்ளுவமே சாட்சி.

குறள்களில் சில எளிய தமிழ் கொண்டு எளிதாகப் புரிந்து கொள்ளத்தக்க வகையில் நேரடிப் பொருள் சொல்வன. ஆனால் பல குறள்கள் மிகச் சிக்கலான மொழி நடையில், இலக்கண அறிவு இல்லாமல், இலக்கியப் பரிட்சயம் இல்லாமல் அணுக இயலாதவாறு உள்ளன. பல நேரங்களில் பரிமேல் அழகர் இல்லாமல் வள்ளுவனைப் புரிந்து கொள்ள முடியாது என்பதும் உண்மை.

வள்ளுவத்தில் சமிஸ்கிருதச் சொற்கள் ஏராளமாக பரவிக்கிடக்கின்றன. அது குறை அல்ல. நிறை. அக்காலத்திலும், இக்காலத்திலும் தமிழ் மொழி நடை அவ்வாறே உள்ளது. எனவே வள்ளுவனை தூய்மைப்படுத்த முயலும் முயற்சி தீவினையில் முடியும்.

ள்ளுவன் இந்திய சமயச் சிந்தனை உள்ளவன். அது எந்த நெறி என்பது அவரவர் புரிதலைப் பொருத்தது. ஆனால் வள்ளுவனை சமயச் சிந்தனை அற்ற பொருள் முதல்வாதியென்றோ, இக்கால பகுத்தறிவாதி போன்றவர் என்றோ புரிய முற்படுவது அனர்த்தத்தில் முடியும்.

அதே போல் அதிகாரத்தை விட்டு குறளை வெளியே எடுத்து பொருள் கொள்ள முயன்றால் அது பொருள் தரலாம், ஆனால் அதைத்தான் வள்ளுவர் சொல்கிறார் என வாதிடமுடியாது. ஏனெனில் குறள் அதிகாரம் சார்ந்தது. அப்படித்தான் அவர் இயற்றியிருக்கிறார்.

தமிழர்கள் வள்ளுவனின் இன்பத்துப்பால் பற்றி அதிகம் பேசுவதில்லை அது, அறத்துப்பால், பொருட்பாலுடன் ஒட்டாமல் தனித்தே நிற்கிறது. ஏனென்று இதுவரை யாரும் ஆராய்ந்துள்ளனரா? எனத்தெரியவில்லை. காமத்துப்பால் எழுதும் வள்ளுவன் பெரும்பாலான குறள்களில் தலைவியாகவே ஆகிவிடுகிறான். மேலும் சங்கத்தமிழ் பேசும் களவொழுக்கம் பற்றிக் குறள் செய்கிறான். கற்பு நிலை பற்றியும் கவலை கொள்கிறான். காமம் ஏன் முக்கியமாகப் பட்டு அதற்கென ஒரு பால் பகுப்பு எதற்கு? இதற்கான விடை 12ம் நூற்றாண்டுச் செய்யுள் ஒன்றில் கிடைக்கிறது. இந்திய தர்மம் (சநாதன தர்மம்) என்பது அறம், பொருள், இன்பம், வீடென வாழ்வின் நிலைதனை நான்காகப் பகுக்கிறது. ஆனால் வள்ளுவன் வீடுபேறு பற்றிப் பேசாமல் முப்பாலுடன் நின்று விடுகிறான். யதிகளுக்கெல்லாம் ராஜா (அதாவது துறவிகளுக்கெல்லாம் அரசன்) என்றழைக்கப்பட்ட ஶ்ரீராமானுஜரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. தர்மம் கூறும் இந்த நான்கு நிலைகளில் முதன்மைத்துவம் எதற்கு என்று. அதற்கு அவர் கூறிய பதில் ஆச்சர்யமானது.

சேமநல் வீடும் பொருளும் தருமமும் சீரியநற்
காமமும் என்றிவை நான்கென்பர் நான்கினும் கண்ணனுக்கே
ஆமது காமம் அறம்பொருள் வீடிதற் கென்றுரைத்தான்
வாமனன் சீலன் இராமானுசன் இந்த மண்மிசையே

வள்ளுவன் போல் இராமனுஜரும் காமம் ஒன்றே போதும் என்கிறார். அக்காமத்தின் பாற்பாட்டு அறமும், பொருளும் உள்ளன என்கிறார். இங்கு யார் மீது கொள்ளும் காமம்? என்பது முக்கியப்படுகிறது. சங்க மரபில் தவழும் தமிழ் வைணவம் "கண்ணனுக்கேமாவது காமம்" என்று முடிக்கிறது. அதாவது காமம் (காதல்) என்பதில் காதல் என்பதே காரியமாகவும், அக்காரியத்திற்கான பலனாகவும் அமைவதால் தனியாக வீடுபேறு என்பது அவசியமில்லாமல் போகிறது எனப்புரிகிறது.

இக்கோணத்தில் பார்த்தால் வள்ளுவனே ஆழ்வார்களுக்கும், நாயன்மார்களுக்கும் முன்னோடியாக இருந்திருப்பது புரிகிறது. தேவையான இடத்தில் சங்கதச் சொற்களைப் பயன்படுத்துவதும், காமமே பக்திக்கு வித்து என்பதைக் காட்டுவதிலும் வள்ளுவமே முன்னேடியாக இருந்திருக்கிறது.

*காமம் என்பதைச் சரிவரப் புரிந்து கொள்ளாத தமிழனுக்கு காமத்துப்பால் என்றால் ஒர் வெட்கம். ஏதோ வள்ளுவர் கொக்கோக சாத்திரம் பேசுவதாக எண்ணிக்கொண்டுள்ளனர். காமத்துப்பாலைக் கண்டு கூச்சப்படும் தமிழன் சிறுகுழந்தைகளைக்கூட காமத்துப்பாலை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கச் செய்கிறான். அது முரணாக அவனுக்குப் படவில்லை!*

*இறுதியாக, வள்ளுவம் ஆயிரம் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுவிட்டது என மார்தட்டுவதில் பெருமிதம் இல்லை என்றே தோன்றுகிறது. ஏனெனில் இத்தனை ஆண்டுகள் ஆன பின்பும் அதன் தாய் மொழியில் வள்ளுவம் இன்னும் முழுமையாய் புரிந்து கொள்ளப்படாத போது அது பிற மொழிகளில் எப்படி மிளிரும் எனும் கேள்வி வந்து நிற்கிறது! போதிய தரக்கட்டுப்பாட்டில், எல்லா உரைகளையும் அலசி ஆராய்ந்துதானா இந்த மொழிபெயர்ப்புகள் வந்துள்ளன?*

*எப்படிப்பார்த்தாலும், அறிவிற்கு விருந்தாகும் திருக்குறள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை!*

**பேராசிரியர், முனைவர் நா.கண்ணன்.** *தமிழ் மரபு அறக்கட்டளை (மலேசியா)*
*nkannan@gmail.com*



# ஜெர்மனியில் திருவள்ளுவர் சிலைகள் நிறுவும் விழா குழுவினர்

- தலைவர்: டாக்டர்.க.சுபாஷிணி
- செயலாளர்: திருமிகு. யோகநாதன் புத்ரா
- திட்ட மேலாளர்: திருமிகு. கார்த்திகா ஸ்ரீகாந்தா
- துணை திட்ட மேலாளர்: திருமிகு. கார்த்தீஸ்வரன் காளிதாஸ்

**செயற்குழு:**

- திருமிகு. ஸ்ரீகாந்தா
- திருமிகு. தருமசீலி ஸ்ரீகாந்தா
- திருமிகு. பாலலெனின் ரெங்கராஜ்
- திருமிகு. ரெமிளா ராமசாமி
- திருமிகு. டாக்டர்.அருணி வேலழகன்
- திருமிகு. அன்னலிங்கம் முகுந்தன்
- திருமிகு. கார்த்திக் சுந்தரராஜன்
- திருமிகு. மீனா முகுந்தன்
- திருமிகு. ரவீந்திரா தெய்வேந்திரம்
- திருமிகு. சத்தியமூர்த்தி வெள்ளைச்சாமி
- திருமிகு. குமரன் சுப்பிரமணியன்
- திருமிகு.குமரன்
- திருமிகு.பிரபாவதி

**ஐம்பொன் சிலைகள் ஆலோசனைக் குழு:**

- திருமிகு. கௌதம சன்னா
- திருமிகு. காந்தி பாலசுப்பிரமணியன்
- திருமிகு. பாலச்சந்திரன் இஆப (ஓய்வு)

**விழா மலர் ஆசிரியர் குழு:**

- டாக்டர். தேமொழி (அமெரிக்கா)
- டாக்டர். என். சுபாஷிணி (தமிழ்நாடு)
- டாக்டர். க.சுபாஷிணி (ஜெரிமனி)

**இணைந்து உதவும் ஜெர்மனி அமைப்புகள்**

- **பிராங்பேர்ட் தமிழ்ச் சங்கம் - (Frankfurt Tamil Sangam e.V)**
- **முன்சென் தமிழ் சங்கம் - (München Tamil Sangam e.V.)**
- **பெர்லின் தமிழ் சங்கம் - (Berlin Tamil Sangam e.V.)**
- **ஹைடல்பெர்க் தமிழ்ச் சங்கம் - (Heidelberg Tamil Sangam)**
- **ஸ்டுட்கார்ட் தமிழ்ச்சங்கம் - (Stuttgart Tamil Sangam)**
- **ஹம்பர்க் தமிழ்ச் சங்கம் — (Hamburg Tamil Sangam)**
- **ரைன் தமிழ் குழுமம். — (Rhein Tamil Association)**
- **கொலோன் தமிழ் சங்கம் - (Cologne tamil sangam e.V)**

**நன்றி:**

**Making of Thiruvalluvar in Germany“ — video**


**தயாரித்து அளித்த திரு.சிவா, சென்னை**

## நன்றி நவில்கிறோம்

### (நிகழ்ச்சி சிறப்பு நடைபெற விளம்பரங்கள் கொடுத்த அனைவருக்கும)





Mr.Caldwell Velnambi & Mrs.Pushpa Caldwell
Texas, USA




# தமிழ் மரபு அறக்கட்டளை

## வெளியீடுகள்




**Tamil Heritage Foundation** *international* **(THFi)**

Germany - Malaysia - India - Srilanka 2019